# உதயன்

30c – 25c
மழைக்கான சாத்தியம் உண்டு

சுடர் 30 கதிர் 337 வள்ளுவர் ஆண்டு 2046 ஐப்பசி 12, வியாழக்கிழமை 29.10.2015


## கைதிகள் விடுதலை, மீள்குடியேற்றம்;

# இலங்கை அரசுக்கு அமெரிக்க அழுத்தம்

## வேண்டும் என்கிறார் யாழ். ஆயர்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 29
தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, மீள் குடியமர்வு விடயங்களில் அமெரிக்கா, இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று யாழ். ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அமெரிக்க அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.
இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு வந்துள்ள உலகப் பெண்கள் விவகாரங்களுக்கான அமெரிக்கத்தூதர் கத்தரின் ருசெல் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார். யாழ். ஆயர், வடக்கு மாகாண முதலமைச்சர், சிவில் அமைப்புக்களைச் சந்தித்துப் பேசினார். இதன்போது இலங்கைக்கான அமெரிக்காவின் புதிய தூதுவர் அதுல் கெசாப்பும் பங்கெடுத்திருந்தார்.
அமெரிக்க அதிகாரிகளுடனான சந்திப்புத் தொடர்பில் யாழ். ஆயர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,
கடந்த 25 வருடங்களுக்கு மேலாக தங்களுடைய சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களை அவர்களின் சொந்த நிலங்களில் பக். 24



## புதிய சிறைச்சாலை யாழ்ப்பாணத்தில் சனியன்று திறப்பு

யாழ்ப்பாணம், ஒக். 29
பண்ணைப் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிறைச்சாலை நாளை மறுதினம் சனிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளதாக, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.
யாழ்.நகரில் பல்வேறு குறைபாடுகளுடன் சிறைச்சாலை இயங்கி வந்ததைத் தொடர்ந்து, புதிய சிறைச்சாலை அமைப்பதற்கான நடவடிக்கைகள் கடந்த 2012 ஆம் ஆண்டு பண்ணைப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. தற்போது குறித்த சிறைச்சாலையின் நிர்மாணப் பணிகள் முடிவுற்றுள்ள நிலையில், நாளை மறுதினம் சனிக்கிழமை பி.ப. 2 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.
சட்டம் ஒழுங்கு மற்றும் சிறைச் சாலைகள் அமைச் பக். 24

## ஐரோப்பியக் குழு இலங்கை வரும்

கொழும்பு, ஒக்.29
ஐரோப்பிய ஒன்றியத்தால் இலங்கையின் மீன் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்குவதற்கு முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்பது தொடர்பில் ஆராய்வதற்காக மேற்படி ஒன்றியத்தின் உயர்மட்டக் குழுவொன்று நவம்பர் 12ஆம் திகதி கொழும்பு வரவுள்ளது.
நால்வர் அடங்கிய இந்த உயர்மட்டக் குழுவில் இரண்டு தொழில்நுட்ப அதிகாரிகளும் இடம்பெறுகின்றனர் என்றும், அவர்களின் பயணத்தின் பின்னர் மீன் ஏற்றுமதிக்கான தடை நீக்கப்படும் சாத்தியம் காணப்படுகின்றது என்றும் வெளிவிவகார அமைச்சு நேற்று தெரிவித்தது.
வெளிவிவகார அமைச் சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின்போதே, குறித்த அமைச்சின் பொருளாதார விவகாரப் பிரிவின் பணிப்பாளர் பக். 24

## அமெரிக்காவுக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக்.29
சிரியாவில் இடம்பெறும் கொலைகளை நிறுத்துமாறும், கியூபா மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையை உடனடியாக நீக்கவேண்டும் என வலியுறுத்தியும் கொள்ளுப்பிட்டியிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்பாக முன்னிலை சோஷலிஸக் கட்சியினர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் கொடும்பாவியை எரித்து, ஆர்ப்பாட்டக்காரர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட் டனர். இதனால், அமெரிக்கத் தூதரக வளாகத்தில் நேற்றுப் பெரும் பதற்றம் நிலவியது.
பாதுகாப்புப் பணிகளுக்காகப் பெருமளவான பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டிருந்தனர்.
அத்துடன், வீதித் பக். 24

## வடக்கு-கிழக்கில் 65,000 வீடுகள் அமைக்க அமைச்சரவை அனுமதி

### நடவடிக்கைகள் உடன் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 29
மீள்குடியேற்ற - புனர்வாழ்வு அமைச்சினால் வடக்கு - கிழக்கில் 65 ஆயிரம் வீடுகள் நிர்மாணிப்பதற்கு அமைச்சரவை அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவித்த அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, இது தொடர்பிலான நடவடிக்கைகள் உடனடியாகவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.
மீள்குடியேற்ற - புனர்வாழ்வு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனினால், வடக்கு - கிழக்கில் 65 ஆயிரம் வீடுகள் நிர்மாணிப்பதற்கு பக். 24

## இலங்கை-இந்திய மீனவர் நேற்று பரஸ்பரம் விடுதலை

கொழும்பு, ஒக்.29
இலங்கை- இந்திய மீனவர்கள் விடுதலை தொடர்பான உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 120 இந்திய மீனவர்களும், இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை மீனவர்கள் 36 பேரும் நேற்றுக் காலை விடுவிக்கப்பட்டனர்.
இந்தத் தகவலை இலங்கை வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மகேசினி கொலன்னே தெரிவித்தார்.
இரண்டு நாடுகளாலும் விடுவிக்கப்பட்ட மீனவர்கள் இரண்டு தினங்களுக்குள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவார்கள் பக். 24

## காணாமற்போனோருக்கு சான்றிதழ் வழங்க ஏற்பாடு

### அமைச்சர்கள் தலைமையில் குழு

கொழும்பு, ஒக்.29
காணாமற்போனோர் தொடர்பில் அவர்களது குடும்பங்களுக்குசான்றிதழ்களை உடனடியாக வழங்கும் பணியை முன்னெடுக்கும்பொறுப்பு இரண்டு அமைச்சர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் கொழும்பு ஆங்கில ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் திலக் மாரப்பன ஆகியோர் தலைமையிலான குழு இதற்காக நியமிக்கப்பட்டுள்ளது. குறித்த குழு, காணாமற்போனவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் பணிகளை மேற்கொள்ளவுள்ளது.
இதற்கமைவாக, போரின்போது காணாமற்போனோர், சாவடைந்தவர்களுக்கும் தன்மைக்கு ஏற்றவகையில் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. இதன்மூலம் எதிர்வரும் காலப்பகுதியில் கொண்டுவரப்படவுள்ள இழப்பீடு வழங்கும் திட்டத்தில் சான்றிதழ் பெற்றுக் கொண்ட குடும்பங்கள் இழப்பீடுகளைப் பெற்றுக் கொள்ள முடியுமென அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.
த-வ

## கே.பி தொடர்பான அறிக்கை மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு

### சட்டமா அதிபர் சமர்ப்பிப்பு



கொழும்பு, ஒக்.29
தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் கே.பி என்றழைக்கப்படும் குமரன் பத்மநாதன் தொடர்பிலான அறிக்கையைச் சட்டமா அதிபர், மேன்முறையீட்டு நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளார்.
அரச மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் ஜயந்த ஜெயசூரியவால் இது குறித்து நீதிமன்றத்துக்கு நேற்று அறிவிக்கப்பட்டது.
கே.பியைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு கோரி, ஜே.வி.பியின் பரப்புரைச் செயலாளர் விஜித ஹேரத்தினால் தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பில் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றில்விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, இவ்வாறு சட்டமா அதிபரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.
குமரன் பத்மநாதனுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள 193 குற்றச்சாட்டுக்கள் குறித்த அறிக்கையை சமர்ப்பிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம், சட்டமா அதிபருக்குப் பணிப்புரை விடுத்திருந்தது. இதில் பக். 24

## கைதிகளை விடுவிக்காவிடின் தீபாவளியை புறக்கணிப்போம்

### அழைப்பு விடுக்கிறது இந்துமா மன்றம்

யாழ்ப்பாணம், ஒக். 29
தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்காமல், இலங்கை அரசு தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாட முனைந்தால், அதில் எந்தவொரு இந்து மகனும் கலந்து கொள்ளாமல் புறக்கணிக்கவேண்டும் என்று அகில இலங்கை இந்துமா மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.
மேலும், அரசியல் கைதிகள் விமோசனம் கிடைக்கவேண்டும் என வேண்டி, நாளை வெள்ளிக் கிழமை நாடு முழுவதும் இந்து ஆலயங்களில் வழிபாடுகளில் ஈடுபடுமாறும் இந்துமா மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.
இது தொடர்பில் இந்துமா மன்றம் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:- பக். 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விடாது தொடர்கிறது கிழக்கில் கன மழை

மட்டக்களப்பு, ஒக்.29
கிழக்கு மாகாணத்தில் மழையுடன் கூடிய கால நிலையே தொடர்ந்து வருகின்றது. அதனால் பல இடங்களில் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளதால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 3 நாள்களாகப் பெய்து வரும் கன மழை தொடர்ந்தும் நீடிப்பதால் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது. ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்புள்ள நெல் வேளாண்மை, நீரில் மூழ்கியுள்ள நிலையில் விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கிழக்கில் கடல் கொந்தளிப்புக் காரணமாக மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை. நன்னீர் மீன்பிடித் தொழிலும் வெகுவாகப் பாதிப்படைந்துள்ளதுடன் அன்றாடத் தொழிலாளர்களின் நாளாந்த தொழில் நடவடிக்கைகளும் பாதிப்படைந்துள்ளன.

உன்னிச்சை மற்றும் உறுகாமம் நீர்ப்பாசன குளங்களின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது என்று உறுகாமம் நீர்ப்பாசன பிரிவு பொறியியலாளர் க.அகிலன் தெரிவித்துள்ளார். அத்துடன் உன்னிச்சைக் குளத்தின் நீர்மட்டம் 21 அடி 7 அங்குலமாகவும் உறுகாமக் குளத்தின் நீர்மட்டம் 15 அடி 8 அங்குலமாகவும் உயர்வடைந்துள்ளன.

உறுகாமம் குளம் தற்போது முழுமையாக நிரம்பிக் காணப்படுவதனால் குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். உறுகாமம் குளத்தின் வான் கதவுகள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் சித்தாண்டி, வந்தாறுமூலை, குமாரவேலியார் கிராமம், முறக்கொட்டாஞ்சேனை போன்ற பிரதேசங்கள் வெள்ளத்தால் பாதிப்படையும் வாய்ப்புள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளதோடு மக்களின் இயல்பு வாழ்க்கையும் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பொத்துவில், திருக்கோவில், லகுகல, பாணமை, அம்பாறை, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், நிந்தவூர், சம்மாந்துறை, காரைதீவு, கல்முனை, நற்பிட்டிமுனை, நாவிதன்வெளி, மருதமுனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த தாழ்ந்த நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. சில பிரதேசங்களில் வடிகால்கள் துப்புரவு செய்யப்படாமலுள்ளதால் மழை நீர் வடிந்தோட முடியாத நிலை காணப்படுகின்றது. சிலபிரதேசங்களில் இயந்திரங்கள் மூலம் வாய்க்கால்கள் தோண்டப்பட்டுள்ள போதிலும் முறையாக நீர் வழிந்தோடவில்லையென பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

மழைநீர் தேங்கியுள்ள வடிகால்களை துப்புரவு செய்து மழை நீர் வடிந்தோட முடியாதவாறு தேங்கி நிற்கும் இடங்களிலிருந்து நீரை வடிந்தோடச் செய்ய உள்ளூராட்சி மன்றங்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. வயல்கள் நீரில் மூழ்கி யுள்ளதால் பெரும்போக நெற்செய்கையும் பாதிப்படையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (ற-10)

## சிறுவர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக் 29
வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் நடத்தும் சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற வுள்ளன.

பிரதேச செயலர் உ.யசோதா தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் வடமாகாண ஆணையாளர் ரி.விஸ்வரூபனும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் விக்னேஸ்வரி கந்தசாமி ஐயரும் சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவானந்தராஜாவும் மற்றும் யாழ் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ச.கோதையும் கலந்துகொள்ளவுள்ளனர்.(ற-ரி2)

# நீர்ப்பாசன குள புனரமைப்புக்கு ரூபா 4,700 மில்லியன் தேவை

## கிளிநொச்சி மாவட்ட செயலகம் தகவல்

யாழ்ப்பாணம், ஒக்.29
கிளிநொச்சி மாவட்டத்தில் பெரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசன குளங்களின் புனரமைப்பு வேலைத்திட்டங்களுக்கு 4ஆயிரத்து 700 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது என்று கிளிநொச்சி மாவட்டத்தின் புள்ளி விவரத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட புள்ளிவிவரங்கள் தொடர்பான கலந்துரையாடலிலேயே இது குறித்துத் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நான்கு பிரதேச செயலகத்தையும் உள்ளடக்கியுள்ள 9 குளங்களை புனரமைக்க வேண்டுமாயின் 4 ஆயிரத்து 700 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

மாவட்டத்தின் பிரதான குளமான இரணைமடுக் குளப் புனரமைப்புக்காக 3 ஆயிரத்து 260 மில்லியன் ரூபாவும், கரியாலை நாகபடுவான் குளப் புனரமைப்புக்காக 250 மில்லியன் ரூபாவும், கல்மடு குளப் புனரமைப்புக்காக 450 மில்லியன் ரூபாவும், குடமுறுட்டிக் குளப்புனரமைப்புக்கு 220 மில்லியன் ரூபாவும், அக்கராயன் குளப் புனரமைப்புக்கு 250 மில்லியன் ரூபாவும், புதுமுறிப்புக் குளப் புனரமைப்புக்கு 100 மில்லியன் ரூபாவும், கனகாம்பிகை குளப் புனரமைப்புக்கு 15 மில்லியன் ரூபாவும், பிரமந்தனாறு குளப் புனரமைப்புக்கு 55 மில்லியன் ரூபாவும், வன்னேரிக் குள புனரமைப்புக்கு 60மில்லியன் ரூபாவும் மற்றும் யாழ் பல்கலைக் கழக கிளிநொச்சி வளாகத்தில் அமைந்துள்ள சிறிய குளத்தின் புனரமைப்புக்கு 40 மில்லியன் ரூபாவும் தேவைப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.
(ற-21,ரி3)

## இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு




யாழ்ப்பாணம், ஒக்.29
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் 24 பேரின் விளக்கமறியலை மன்னார் நீதிமன்றம் நீடித்துள்ளது.

குறித்த இந்திய மீனவர்கள் கடந்த 13ஆம் திகதி மன்னார் கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் மன்னார் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். வழக்குத் தவணைக்காக நேற்று அவர்கள் மீண்டும் மன்னார் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது விளக்கறியலை எதிர்வரும் 11ஆம் திகதிவரை நீடித்தது நீதிமன்று.

அதேவேளை, நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் கடற்பரப்பில் வெவ்வேறு இடங்களில் இந்திய மீனவர்கள் 34 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் 7 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. (ற-4,104)

# இளைஞர் நாடாளுமன்றத் தேர்தல் மனுத் தாக்கல்

யாழ்ப்பாணம், ஒக்.29
யாழ். மாவட்டத்தில் 10 தொகுதிகளில் இருந்தும் 10 இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான இளைஞர் நாடாளுமன்ற தேர்தல் நவம்பர் மாதம் 7ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதற்கான வேட்பாளர்கள் வேட்பு மனு தாக்கல் நேற்று சகல பிரதேசபிரிவுகளிலும் நடைபெற்றது.

யாழ்.மாவட்டத்தில் 15 பிரிவுகளிலும் வேட்புமனு தாக்கல் செய்யக் கூடிய 2 ஆயிரத்து 125 தகுதியான உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் 24 உறுப்பினர்கள் 15 பிரிவுகளிலும் வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டு 2 உறுப்பினர்களுடைய வேட்புமனு நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து 22 வேட்பாளர்கள் தேர்தலில் பங்குகொள்ளவுள்ளனர் என்று தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினர் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் 9 வேட்பாளர்கள் தங்களது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். கிளி நொச்சி மாவட்ட செயலகத்துக்குட்பட்ட பிரதேச செயலகங்களில் நேற்று வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.




கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 3 வேட்பாளர்களும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் 2 வேட்பாளர்களும், கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 2 வேட்பாளர்களும், பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் 2வேட்பாளர்களுமாக மொத்தம் 9 வேட்பாளர்கள். தங்களது வேட்புமனுக்களை நேற்றையதினம் குறித்த பிரதேச செயலகங்களில் தாக்கல் செய்துள்ளனர்.

இவ் இளைஞர் நாடாளுமன்றத்திற்காக நாடு பூராகவும் இளைஞர் கழக வாக்குகளினால் 160 பேரும். மாவட்டத்தில்15இற்கு மேலதிகமாக பிரதேச செயலகங்கள் இருக்குமாயின் போனஸ் உறுப்பினர்கள் 9 பேரும். பல்கலைக் கழக மாணவர்கள் 15 பேரும் சட்ட பீட மாணவர்கள் 10பேரும் மாற்றுத் திறனாளிகள் 2 பேரும். பாடசாலை மாணவத் தலைவர்கள் அல்லது தலைவிகள் என 10 பேரும் இளைஞர் பிரதிநிதிகள் உள்ள வேறு இளைஞர் அமைப்புக்களில் இருந்து 9 பேரும். கௌரவ அமைச்சர் அல்லது கௌரவ தலைவரால் நியமிக்கப்படும் பிரதிநிதிகள் 10பேரும் என மொத்தமாக 225 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

நவம்பர் 7ஆம் திகதி யாழ் மாவட்டத்தில் உள்ள சகல தேர்தல் தொகுதிகளிலும் தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்கு வாக்களிப்பதற்கு 13 ஆயிரத்து 719 பேர் யாழ் மாவட்டத்தில் தகுதி பெற்றுள்ளனர் என்றும், 22 வேட்பாளர்களில் இருந்து தெரிவு செய்யப்படும் 10 உறுப்பினர்களும் நவம்பர் மாதம் 10ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக சத்தியப்பிரமாணம் செய்ய உள்ளனர் என்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினர் மேலும் தெரிவித்துள்ளனர்.
(ற-10,21,ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரை நிரந்தர வீடுகள் அமைப்பு



வலி.வடக்கில் விடுவிக்கப்பட்ட வயாவிளான், பலாலி தெற்கு மற்றும் தோலகட்டி கிழக்குப் பகுதிகளில் ...கள் குடியமர வசதியாக அரை நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் மின்சார, வீதிக்கட்டமைப்புக்களும் சீர்செய்யப்பட்டு வருகின்றன. பலாலி தெற்கு சென்.ஜேம்ஸ் ஆலயச் சூழலில் முதற்கட்டமாக 14 அரை நிரந்தர வீடுகள் பூர்த்தியாக்கப்பட்டு பல குடும்பங்கள் மீள்குடியமர்ந்துள்ளன. தற்போது இரண்டாம் கட்டமாக 17 அரைநிரந்தர வீடுகள் அமைக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, சென்.ஜேம்ஸ் வீதியின் ஒருபகுதி புதிதாக செப்பனிடப்பட்டதுடன், மின்சார இணைப்புக்களும் மேற்கொள்ளப்பட்டு, குடியமர்ந்துள்ள வீடுகளுக்கு இலவச மின்னிணைப்பும் வழங்கப்பட்டு வருகின்றது என்று அதிகாரியொருவர் தெரிவித்தார்.

தோலகட்டி கிழக்குப் பகுதியிலும் சில அரை நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டுள்ளது. வடமூலை வீதியும் செப்பனிடப்பட்டுள்ளது. ஆயினும் அருகருகே இராணுவ முகாம்கள் அமைந்துள்ளமையால் மீள்குடியமர்ந்துள்ள சில குடும்பங்கள் இரவில் மனக் கிலேசத்துடன் பொழுதைக் கழித்து வரும் சூழ்நிலை காணப்படுகின்றது என்று மக்கள் தெரிவித்தனர். (ற-135)

# நெல்லியடியில் கடை உடைத்தவர் கந்தானையில் வசமாக சிக்கினார்

## 10 லட்சம் ரூபா பெறுமதியான திருட்டு நகைகளும் மீட்கப்பட்டன

## 24 மணி நேரத்துக்குள் பொலிஸார் அதிரடி நடவடிக்கை

**நெல்லியடி, ஒக்ரோபர் 29**

**வடமராட்சி–நெல்லியடிப் பகுதியில் பிரபல நகைக்கடை ஒன்று உடைக்கப்பட்டு நகைகள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் 24 மணி நேரத்துக்குள் கொழும்பு கந்தானைப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். திருடப்பட்ட அனைத்து நகைகளும் கைப்பற்றப் பட்டுள்ளன என்று உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் தெரிவித்தார்.**

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது .என்றும், இதில் சம்பந்தப்பட்ட சில நபர்கள் தேடப்பட்டு வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

வடமராட்சி– நெல்லியடிப் பகுதியில் இருந்து வதிரி சந்தி நோக்கி செல்லும் பிரதான வீதியின் ஓரத்தில் அமைந்திருந்த நகைக்கடை ஒன்று உடைக்கப்பட்டு 10 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டன. இது தொடர்பில் மறுநாள் காலை கடை உரிமையாளரால் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டது.

இரவு நேரம் கடையின் சீற்றை பிரித்து உள்ளிறங்கி நக்ககள் திருடப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர். இது தொடர்பான விசாரணைகள் நெல்லியடிப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் பிரியந்த தலைமையிலான பொலிஸ் குழுவால் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வந்தன. இந்தத் திருட்டு தொடர்பில் நாடு முழுவதும் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு தகவல் அனுப்பப்பட்டிருந்தன.

இந்தநிலையில் கொழும்பு, கந்தானைப் பகுதியில் உள்ள நகைக் கடை ஒன்றில் ஒருவர் நகைளை விற்க முயன்றுள்ளார். அவரின் நடவடிக்கையில் சந்தேகம் கொண்ட கடையிலிருந்தவர்கள் அந்த நபர் குறித்து கந்தானைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். அதையடுத்து அங்கு சென்ற பொலிஸாரால் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 10 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளும் மீட்கப்பட்டுள்ளன என்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் தெரிவித்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்று நெல்லியடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் பிரியந்த தெரிவித்தார். குறித்த சந்தேகநபர் இன்று வியாழக்கிழமை பாரப்படுத்தப்படுவார் என்றும் அவர் குறிப்பிட்டார். (ற-109)

# விவசாயிகள் உற்பத்திக்கு நியாய விலை வேண்டும்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக்.29

அடிமாட்டின் விலைக்கு தள்ளப்பட்டுள்ள விவசாயிகளுடைய உற்பத்திப் பொருள்களை நியாயமான விலைக்கு விற்பதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற முத்தான வியர்வை 2015 வர்த்தக கண்காட்சியில் பிரதம விருந்தினராகக் ...துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முத்தான வியர்வை என்று தங்களுடைய வியர்வையை சிந்தி அடைமானம் வைத்து அவர்கள் உற்பத்தி செய்த பொருள்களைக் கொண்ட வந்து சந்தையிலே விற்கின்றபோது, அது மிகக் குறைவான அடிமாட்டு விலைக்கு வாங்குகின்ற ஒரு நிலை காணப்படுகின்றது. உற்பத்தி பொருள்களைக் கொண்டு வந்துவிட்டோம். அவற்றை எப்படியும் விற்க வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் குறைந்த விலைக்கு விற்கின்றனர். அதனால் தங்கள் கடனை கட்ட முடியாமலும், குடும்ப வாழ்க்கையை நடத்த முடியாமலும் திண்டாடிக் கொண்டுள்ளனர்.

எமது விவசாயிகள் தங்களது வாழ்க்கையில் பல துயரங்களை அனுபவித்துக் கொண்டிருப்பதை நாங்கள் கண்கூடாக காண்கின்றோம். எனவே நாங்கள் எல்லோரும் சேர்ந்து இந்த விவசாயிகளுடைய உற்பத்திப் பொருள்களுக்கான ஒரு நியாயமான விலை அவர்களுக்கு வழங்குவதற்கான ஒரு செயற்பாட்டை செய்தாக வேண்டும் - என்றார். (ற-21)

# இடர் முகாமைத்துவக் குழு தயார் நிலையில் உள்ளது

## வவு.மாவட்ட இடர் முகாமைத்துவப் பணிப்பாளர் தெரிவிப்பு

வவுனியா, ஒக்.29

வவுனியாவில் கடந்த மூன்று தினங்களாக பெய்து வரும் மழையால் மக்களுக்கு ஏதும் பாதிப்பு ஏற்பட்டால் உடனடியாக சென்று உதவக் கூடிய வகையில் இடர் முகாமைத்துவக் குழுவினர் தயார் நிலையில் உள்ளனர் என்று வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவப் பணிப்பாளர் ரி.என் சூரியராஜ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வவுனியா மாவட்டத்தில் ஆசிக்குளம் பகுதியில் உள்ள வீடொன்று மட்டுமே சிறுபாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று எமது இடர் முகாமைத்துவப் பிரிவுக்கு தகவல் கிடைத்துள்ளது. மழையால் ஏதும் பாதிப்பு ஏற்பட்டால் எந்நேரமும் எங்களிடம் தொடர்பை ஏற்படுத்தினால் அவ்விடத்துக்கு நாம் விரைந்து வந்து உதவக்கூடிய வகையில் எமது அணி தயாராக உள்ளது. - என்றார். (ற-402)

## சங்கிலி அறுத்த குற்றச்சாட்டில் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 29

வீதிகளில் செல்பவர்களின் நகைகளை அறுத்துச் செல்பவர்கள் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

மல்லாகம் கோணப்புலம் முகாமைச் சேர்ந்த 2 பேரே கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை அடையாள அணிவகுப்புக்கு முற்படுத்துமாறு மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. எதிர்வரும் திங்கட்கிழமை இந்த அடையாள அணிவகுப்பு இடம்பெறவுள் ளது.

வீதிகளில் செல்பவர்களின் குறிப்பாக பெண்களின் நகைகளை அறுத்துச் செல்பவர்கள் தொடர்பில் காங்கேசன்துறைப் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் சில சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. எனினும் கைது செய்யப்படாமலிருந்து நிலையில் 2 இடங்களில் அவ்வாறான சங்கிலி அறுப்பில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் அவர்கள் 2 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ற-4)

# புலமைப் பரிசில் உதவியைக் கொண்டு மாணவர் முன்னேற வேண்டும்

## யாழ். அரச அதிபர் வேதநாயகன் அறிவுரை

யாழ்ப்பாணம், ஒக். 29

மாணவர்கள் சிசுதரிய புலமைப் பரிசில் உதவியை மூலதனமாகக் கொண்டு, கல்வியில் முன்னேற வேண்டும். தொடர்ச்சியாக மாணவர்களுக்கு இவ்வாறான புலமைப் பரிசில் திட்டங்கள் ஊடான உதவிகள் வழங்கப்படும். - இவ்வாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வாழ்வின் எழுச்சித் திணைக்களப் பணிப்பாளர் க.மகேஸ்வரன் தலைமையில் சிசுதரிய புலமைப் பரிசில் திட்டத்தின் கீழான தாபரிப்பு பெற்றோர் திட்டத்தின் உதவி வழங்கும் நிகழ்வு யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

இதில் முதல்கட்டமாக 61 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, 500 ரூபா பெறுமதியான உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது–

மாணவர்கள் இந்த உதவிகளைப் பயன்படுத்தி முன்னேற வேண்டும். ஒழுக்கமுள்ள சமுதாயமாக - கற்றறிந்த சமுதாயமாக அவர்கள் உருவாக வேண்டும். இவ்வாறான உதவிகள் அவர்களுக்கு தொடர்ச்சியாக வழங்கப்படும்.

மேலும், உதவி பெற்ற மாணவர்கள் தொடர்ந்து கண்காணிக்கப்படுவார்கள். அவர்கள் பெற்றுக் கொண்ட உதவிகளை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும் என்பதற்காகவே இவ்வாறான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்கின்றோம். அத்துடன், இந்தத் திட்டத்துக்கு கொடையாளிகளும் உதவி வழங்கலாம் - என்றார். (ற-ரி4,ரி6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் படைகள் மாற்றத்தை ஏற்கவில்லை

## மனித உரிமை கண்காணிப்பகம் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, ஒக்.29
மட்டக்களப்பில் கடமையாற்றி வரும் சில படையினர் புதிய அரசின் மாற்றங்களை ஏற்றுக்கொள்ளாது செயற்பட்டு வருகின்றனர் என்று மனித உரிமை கண்காணிப்பகம் குற்றஞ்சாட்டியுள்ளது.

அண்மையில் மட்டக்களப்புக்கு சென்றிருந்த மனித உரிமை கண்காணிப்பகத்தின் சட்டம் மற்றும் கொள்கைப் பிரிவு பணிப்பாளர் ஜேம்ஸ் ரோஸ் அங்குள்ள நிலைமைகளை அவதானித்தார். அதன்பின்னர் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -
புதிய அரசு சில மாற்றங்களை அறிமுகம் செய்துள்ளது. அந்த மாற்றங்களின் அடிப்படையில் படையினர் செயற்படவில்லை. இராணுவம் காணிகளை அபகரித்து வருகின்றது. இதனால் அந்தப் பகுதியில் பொது மக்கள் வாழ்வாதாரத்தை மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் மட்டக்களப்பில் வாழும் மக்கள் பல முறைப்பாடுகளையும் பதிவுசெய்து வருகின்றனர். புதிய அரசு மனித உரிமை நிலைமைகளில் மாற்றம் செய்ய முனைப்புக் காட்டி வருகின்ற போதிலும் கிழக்கில் படையினர்சிலர் அந்த முனைப்புக்களுக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை.- என்றார். (ற-10)



# வெள்ளைப் பிரம்பு தின நிகழ்வு சுன்னாகத்தில்

யாழ்ப்பாணம், ஒக்.29
சுன்னாகம் லயன்ஸ் கழகமும் வாழ்வக சமூகமும் இணைந்து நடத்திய வெள்ளைப் பிரம்பு தினம் அண்மையில் சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் நா.தயாரூபன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முன்றிலில் இருந்து ஆரம்பமான நடைபவனி வாழ்வகத்தைச் சென்றடைந்தது. அங்கு வெள்ளைப்பிரம்பு தொடர்பான விழிப்புணர்வூட்டும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக லயன்ஸ் கழகம் பிராந்தியம் – 8 இன் பிராந்தியத் தலைவர் லயன் சி.ஹரிகரன், லயன் சீமாட்டி ஹ.கௌசலாதேவி ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக லயன்ஸ் கழக பிராந்திய இணைப்பாளரும் நீர்கொழும்பு கோல்டன் ஸ்ரார் பீச் ஹோட்டலின் உரிமையாளர் லயன் தேவா பீற்றர், வாழ்வகத்தின் தலைவரும் யாழ்.தேசிய கல்வியியற்கல்லூரியின் விரிவுரையாளருமாகிய ஆ.இரவீந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லயன் த.சித்தார்த்தன், வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் வாழ்வகச் சிறார்களுக்கு வெள்ளைப் பிரம்புகளை வழங்கினர். லயன் தேவா பீற்றர் ஊர்வலத்தை ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் வாழ்வகச் சமூகத்தினர், லயன்ஸ்கழக உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக், 29
யாழ்.புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று நடைபெறவுள்ளது. மு.ப 9.15 மணிக்கு யோண்பிள்ளை மண்டபத்தில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக பழைய மாணவன் நா.இராசநாயகம் கலந்துகொள்ளவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுமாரும் கௌரவ விருந்தினராக அருட்பணி சாள்ஸ் கொலினும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-10)

# கைதிகளை விடுவித்தால் மீள ஈழப் போர் வெடிக்கும்

## எச்சரிக்கின்றார் குணதாச அமரசேகர



கொழும்பு, ஒக்.29
சிறைகளில் இருக்கும் விடுதலைப் புலிகளை விடுவித்தால் கட்டுப்படுத்தப்பட்டுள்ள ஈழத்துக்கான போராட்டம் மீண்டும் ஐந்தாம் ஈழப்போராக உருவெடுக்கும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் எச்சரித்துள்ளது.

நீண்டகாலமாக தடுப்புக்காவலில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் அரசு இணக்கம் தெரிவித்துள்ள நிலையில், அது குறித்து மகிந்த ஆதரவு அணியின் முக்கிய அமைப்பான தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–
கடந்தமூன்றுதசாப்தகாலப்போரை மகிந்த ராஜபக்ச அரசு முடிவுக்குக் கொண்டுவந்தது. ஆனால் சர்வதேசமட்டத்தில் இந்தப் போராட்டமும் தமிழீழத்துக்கான முயற்சிகளும் இன்னும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அவ்வாறு இருக்கையில் புலிகளுடன் தொடர்புடைய நபர்களை முன்னைய அரசு கைது செய்து தடுத்து வைத்திருந்தது. அவர்கள் மூலமாக சர்வதேச மட்டத்தில் இயங்கும் புலி உறுப்பினர்களை அடையாளம் காணவும் திட்டம் இருந்தது.

ஆனால் இப்போது இந்த நபர்களை அரசியல் கைதிகள் என்ற பெயரில் விடுவிக்க அரசு இணக்கம் தெரிவித்துள்ளமை சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

இவர்களை விடுவித்து நாட்டில் மீண்டும் குழப்பத்தை ஏற்படுத்த அரசே முயற்சிக்கின்றது. இவர்களை விடுவித்தால் இவர்களின் மூலமாக சர்வதேச பயங்கரவாத அமைப்புகள் மீண்டும் இலங்கையில் இயங்க ஆரம்பிக்கும் வாய்ப்புகள் உள்ளன.

சர்வதேச மட்டத்தில் புலிகள் பலமாக இயங்கி வருகின்ற நிலையில் அவர்கள் மீண்டும் நாட்டை பிரிக்கும் வேலையை ஆரம்பிப்பார்கள் என்ற அச்சம் இன்றும் உள்ளது.

எனினும் இவை அனைத்தையும் தடுக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை. புலம்பெயர் அமைப்புக்களின் ஆதரவிலும் மேற்கத்தேய நாடுகளின் ஆலோசனையிலும் இந்த அரசு ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

ஆகவே அவர்களுக்கு விசுவாசமான வகையில் அரசு இங்கு செயற்பட்டு வருகின்றது.– என்றார். (ற)

# பிரச்சினையைத் தீர்க்கச் சந்தர்ப்பம் ஐ.நா. கொண்டுவந்த தீர்மானம்

## தேசிய சமாதான சபை சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக்.29
வடக்கிலிருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டு 25 வருடங்கள் கடந்துள்ள நிலையில் வடக்கில் 90 ஆயிரம் முஸ்லிம்கள் தொடர்ச்சியாக தேசிய இனப்பிரச்சனையின் வடிவங்களான மனித உரிமை மற்றும் அரசியல் பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டுவருகின்றனர். அவர்களில் 80 வீதத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம் மக்கள் தங்களின் சொந்த இடங்களை விட்டு வேறு இடங்களில் வாழ்ந்து வருகின்றனர் என்று சுட்டிக்காட்டியுள்ளது தேசிய சமாதான சபை.

இந்த நிலையிலே இலங்கை அரசின் அனுசரணையுடன் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை கொண்டுவந்துள்ள தீர்மானத்திலே இனங்களிடையே நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் தீர்வுகளை கண்டுகொள்வதற்கும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அதனை வரவேற்கின்றோம் என்றும் அந்த சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–
நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் அமோக ஆதரவைப் பெற்று தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளார்ந்த மற்றும் சுய விமர்சன அறிக்கையை தேசிய சமாதான சபையினராகிய நாங்கள் வரவேற்கின்றோம். ஏற்றுக்கொள்கின்றோம்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் விசாரணை அறிக்கை தொடர்பிலே த.தே.கூ. தங்களுடைய கருத்தைக் கூறுகையில் நாங்களும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருந்த கடந்த காலங்களில் இடம்பெற்ற பாதிப்புக்களின் தாக்கத்திலிருந்து அவர்களை விடுவிப்பதற்கான எங்களின் கடமைகளை செய்வோம்.

கடந்த காலத்தின் இழப்பிலிருந்து எங்களை மீளமைத்துக்கொள்வதற்கான நல்ல சந்தர்ப்பமாக இதைக் கருதுவோம். அந்த வகையிலே இது இலங்கையில் உள்ள குடிமக்கள் எல்லோரும் சுதந்திரமாக சமத்துவமாக சுயமரியாதையோடு இனத்துவ அடையாளங்களை பிரதிநிதித்துவப்படுத்தி வாழ்வதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். ஆகவே தேசிய சமாதான சபை மேற்சொன்ன விடயங்கள் அனைத்து தரப்பினர் மட்டத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். குறிப்பாக அரச மட்டத்திலும் அரசியல் கட்சிகள், ஏனைய தலைமைத்துவ மட்டங்கள், சமய நிறுவனங்கள் மற்றும் மனித உரிமை ஆணைக் குழு மட்டத்திலும் இந்த விடயங்கள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

போர் முடிவடைந்து 6 வருடங்கள் கடந்துள்ளபோதும் 1990 ஆம் ஆண்டில் தங்களுடைய சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் இன்னமும் தங்களுடைய சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியவில்லை. இது அவர்களின் சொந்த இடங்களில் வாழ்வதற்கும் அங்கு திரும்புவதற்கான உரிமையையும் மீறுவதாக அமைந்துள்ளது.

இந்த நிலையிலே அரசு உண்மையைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை சர்வதேசநீதிபதிகளின் பங்குபற்றுதலோடு உருவாக்கி சர்வதேச நியமங்களோடு பொறுப்புக்கூறலை நிலைநாட்டுவதற்கும் தீர்மானம் எடுத்திருக்கின்றது. இவை முஸ்லிம் சமூகம் மீண்டும் திரும்புவதற்கான உரிமையை உறுதிப்படுத்த வேண்டும். 2002 தொடக்கம் 2009 வரையான காலப்பகுதியை மாத்திரம் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் விசாரணை அறிக்கை மட்டுப்படுத்தியிருக்கின்றது. அரசு இது தொடர்பில் கவனமெடுக்க வேண்டும். அதற்கு முற்பட்ட குறிப்பாக 1990 களில் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மிகப் பாரதூரமான போர்க்காலத்தில் இடம்பெற்ற உரிமை மீறல்களுக்கு இணையான மனித உரிமை மீறல்களையும் கருத்தில் எடுக்க வேண்டும் – என்றுள்ளது. (ற-ரி2)

# பெண்களின் ஆடைகளுடன் பஸ் நிலையத்தில் பயணப் பை

பெண்களின் ஆடைகள் கொண்ட பயணப்பை ஒன்று சுன்னாகம் பஸ் நிலையத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளது என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வார இறுதியில் அது மீட்கப்பட்டது என்றும், எவரும் இது வரை உரிமைகோரவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த அந்தப் பை மல்லாகம் நீதிமன்றில் நேற்று ஒப்படைக்கப் பட்டுள்ளது. பெண்கள் பாவித்த மற்றும் பாவிக்கக்கூடிய நிலையிலுள்ள ஆடைகள் அந்தப் பையில் காணப்படுகின்றன. உரிமைகோருபவர்கள் சுன்னாகம் பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற-4)

# ஒட்டுசுட்டான் பிரதேச செயலக கலாசார பண்பாட்டு பெருவிழா





கிளிநொச்சி, ஒக்.29
ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தால் ஒழுங்குபடுத்தப்பட்ட 2015ஆம் ஆண்டுக்கான கலாசார பண்பாட்டு பெருவிழா கொட்டும் மழைக்கும் மத்தியில் நேற்றுமுன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

பிற்பகல் 2 மணியளவில் ஆரம்பமான இந்த நிகழ்வானது தமிழர்களின் கலாசாரத்தை பிரதிபலிக்கும் காவடியாட்டம், செம்பு நடனங்கள் அணிவகுத்து வர சிறப்பு விருந்தினர்களாக வருகை தந்த [illegible] [illegible] நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடமாகாண சபை உறுப்பினர் துரைராஜா ரவிகரன், முல்லை வலயக்கல்விப் பணிப்பாளர் உதயராணி முனிஸ்வரன். வரலாற்று ஆய்வாளர் அருணா செல்லத்துரை ஆகியோர் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டார்கள்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளரும், பண்பாட்டுப் பேரவைத் தலைவருமான குருபரனின் தலைமையுரையைத் தொடர்ந்து தமிழர்களின் கலை கலாசார விழுமியங்களை போற்றும் பல நிகழ்வுகள் இடம்பெற்றன.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பிறந்து வளர்ந்து கலைக்கு பெரும் தொண்டாற்றிய கலைஞர்களான சதாசிவம் தில்லையம்பலம், தனபாலசிங்கம் தர்சன், திருமதி வேகாவனம் நித்தியகலா, அண்ணாவியார் சரவணை விநாயகமுர்த்தி, கதிரவேலு தயாபரன் ஆகியோர் பொன்னாடை போர்த்தி நினைவுச் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

பண்பாட்டு விழுமியங்களை போற்றும் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும். பட்டிமன்றங்கள், கவியரங்கங்கள் என பல நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிந்தவைத் தூக்குக்கு அனுப்ப ரணில், சம்பந்தன் முயற்சியாம்

### கொந்தளிக்கின்றார் உதய கம்மன்பில



கொழும்பு, ஒக்.29

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை தூக்குமேடைக்கு அனுப்புவதில் அதிக அக்கறை காட்டுவோர் பட்டியலில் பிரதமர் ரணிலும் எதிர்க் கட்சித் தலைவர் சம்பந்தனுமே முன்னிலை வகிக்கின்றனர் என்று தெரிவித்துள்ளார் தூய்மையான ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளு மன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில.

தூய்மையான ஹெல உறுமய கட்சியால் கடந்த திங்கட்கிழமை கொழும்பில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான எந்தவித செயற்பாட்டுக்கும் இடம் கொடுக்கப் போவதில்லை என அரசு தெரிவிக்கின்றது. ஆனால் இந்த அரசே தேசிய பாதுகாப்பைச் சீரழிக்கும் வகையில் அதற்கான முழுமையான உதவிகளை வழங்கி வருகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் ஆயுதம் மூலமாக இந்த நாட்டில் மிகப் பெரிய பிளவை ஏற்படுத்த முயற்சித்த வேளையில், எமது இராணுவமும் எமது அரசும் அவர்களை முழுமையாக அழித்து நாட்டைக் காப்பாற்றியது. எனினும் நாட்டைப் பிரிக்கும் ஆயுதப் போராட்டம் முடிவடைந்தாலும் அரசியல் நகர்வுகள் இன்னமும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து உதய கம்மன்பில மேலும் தெரிவித்துள்ளதாவது-

கடந்த ஜனவரி மாதம் எட்டாம் திகதி முதல் இந்த நாட்டின் பாதுகாப்புக்கு மிகப் பெரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. வடக்கில் இருந்து இராணுவம் வெளியேற்றப்பட்டுள்ளது. பாதுகாப்பு வலயத்தில் உள்ள காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. புலிகளை நியாயப்படுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இராணுவத்தைத் தண்டிக்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. ஆகவே இவை அனைத்தும் இன்று நாட்டுக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளன.

இராணுவத்தினரைச் சர்வதேச கூண்டில் நிறுத்தித் தண்டிக்கவும் விடுதலைப் புலிப் பயங்கரவாதிகளை நியாயப்படுத்தவுமே இந்த அரசு தனது முழுமையான முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது. இலங்கையில் போர்க் குற்ற விசாரணைகளை மேற்கொள்ள உருவாக்கப்பட்டுள்ள கலப்பு நீதிமன்ற முறைமை மற்றும் சர்வதேச உதவியுடனான விசாரணைப் பொறிமுறைகள் என்பன முழுமையாக எமது பாதுகாப்புப் படைகளையே பாதிக்கும் வகையில் அமைந்துள்ளன.

இராணுவத்தைக் குற்றவாளியாக்கும் முயற்சிகளின்போது சிறைச்சாலைகளில் உள்ள விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை சாட்சிகளாகப் பயன்படுத்த அரசு முயற்சிக்கின்றது. அதற்காகவே இவர்களை உடனடியாக விடுவிக்கவும் அரசு முயற்சித்து வருகின்றது. அமைச்சரவையில் பலர் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் பிரதமரும், ஜனாதிபதியும் இவர்களை விடுவிக்கத் தயாராகி வருகின்றனர்.

ஆகவே ஜனாதிபதி மற்றும் பிரதமரின் தலைமைத்துவத்தை அரசில் உள்ள பலர் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர் என்பது தெளிவாகியுள்ளது. இவ்வாறு அமைச்சரவையின் அனுமதியையும் மீறி தனி நபர்கள் தீர்மானமெடுப்பது நாட்டின் பாதுகாப்புக்கும் இராணுவத்துக்கும் மிகப்பெரிய அச்சுறுத்தலாகும்.

குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி மகிந்தவைத் தண்டிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் தான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டு வருகின்றார். அவரைத் தூக்கு மேடைக்கு அனுப்பும் ஒரு நோக்கத்தில் எதிர்க்கட்சித் தலைவரும் பிரதமரும் செயற்பட்டு வருகின்றனர்.- என்றார். (ற)

## போர்க் குற்றவாளிகளை தண்டித்தாலே பெருமை

### நளிந்த ஜயதிஸ்ஸ எம்.பி. கூறுகின்றார்



கொழும்பு, ஒக்.29

போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் எவராக இருப்பினும், அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியது அவசியம். அதுவே சர்வதேச மட்டத்தில் நாட்டுக்குப் பெருமை தேடித் தரும். - இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளு மன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்

சிங்களமொழிப் பத்திரிகை ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பான ஐ.நா. அறிக்கையை தமிழ், சிங்கள இனவாதிகள் மட்டுமே எதிர்க்கின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு மாகாண சபைகளுக்குக் கூடுதல் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க எடுக்கப்படும் முயற்சிகள் தடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தற்போதைய தேசிய அரசு பெரிதாக எதையும் சாதிக்கப் போவதில்லை என்று கூறியுள்ள ஜயதிஸ்ஸ, இரு பிரதான கட்சிகளும் கொள்கை அளவில் ஒன்றுதான் என்பதால் அரசை நடத்திச் செல்கின்றன என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொலிஸ் நிதிமோசடிப் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட பல முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் முடிவடைந்துள்ளபோதிலும் தேசிய அரசின் முக்கியஸ்தர்கள் இணைந்து தமது கட்சியினரைப் பாதுகாக்கின்றனர் என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதன் காரணமாகவே குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் சட்டமா அதிபர் ஊடாக வழக்குத் தொடரப்படாது இழுத்தடிக்கப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

## தேசிய அரசின் மூலமே சு.க. பாதுகாக்கப்பட்டது

### அமைச்சர் டிலான் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக்.29

ஐக்கிய தேசிய கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து தேசிய அரசை முன்னெடுத்துச் செல்கின்றமையாலேயே சுதந்திரக் கட்சியைப் பாதுகாக்க முடிந்தது. இல்லாவிட்டால் அது இல்லாமல் போவதற்கான அறிகுறியே காணப்பட்டது. - இவ்வாறு இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.



பதுளையில் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்குரிய அலுவலகம் ஒன்றைத் திறந்துவைத்து உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தாம் பிரதமர் ரணிலின் வாலில் தொங்கிக் கொண்டு சென்றதாகவும், இறைச்சியின் எலும்புகளைச் சாப்பிடச் சென்றதாகவும் பலர் விமர்சித்த போதும் தாம் கட்சியின் சார்பில் செயற்பட்ட காரணத்தால் சரியான முடிவெடுக்க முடிந்தது என்றும் அவர் இதன் போது குறிப்பிட்டார். எனினும் ஐக்கிய தேசிய கட்சிக்குத் தேவையென்றால் இலகுவாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து அரசு ஒன்றை அமைத்திருக்க முடியும் என்று குறிப்பிட்ட டிலான், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து அரசு ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டதாலேயே சுதந்திரக் கட்சியைப் பாதுகாத்துக்கொள்ள முடிந்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார். (ற)



## நிலக்கீழ் மாளிகைக்கு இத்தாலிப் பொருள்கள்

### சாடுகின்றார் அமைச்சர் சஜித்

கொழும்பு, ஒக்.29

ஜனாதிபதி மாளிகையின் நிலக்கீழ் அதிசொகுசு மாளிகைக்கான பொருள்கள் இத்தாலியில் இருந்து கொண்டு வரப்பட்டுள்ளன என்று அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் அரச தலைவரின் பாதுகாப்புக்குப் பதுங்கு குழி அவசியம். எனினும் நிலக்கீழ் அதிசொகுசு மாளிகை நிர்மாணிப்பதற்குப் பல கோடி செலவு செய்யப்பட வேண்டுமா என்ற கேள்வியொன்று உள்ளது என்றும் அங்கு அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பதுங்கு குழியொன்றை அமைத்திருந்தால் எந்தவிதமான பிரச்சினையும் கிடையாது. நாட்டின் தலைவரைப் பாதுகாப்பதற்கு பதுங்கு குழியொன்று மிகவும் அவசியம். எனினும் அங்கு பதுங்கு குழி அமைக்கப்படவில்லை. இத்தாலியில் இருந்து பொருள்கள் கொண்டு வரப்பட்டு மாளிகையொன்று நிர்மாணிக்கப்படுவது அவசியமா? இவை அனைத்தும் அவசியமற்ற செலவுகள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

## தடுப்பில் உள்ளோர் போர்க் கைதிகளே!

### கூறுகின்றார் வாசுதேவ



கொழும்பு, ஒக்.29

இலங்கையில் அரசியல் கைதிகள் என்று எவரும் கிடையாது. சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் போர்க் கைதிகள் என்றும் தெரிவித்துள்ளார் முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார.

நீண்ட காலமாகச் சிறையில் உள்ள இவர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொண்டு குற்றமற்றவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் அவர் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்புத் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் அரசியல் கைதிகள் என்று எவரும் கிடையாது. ஆனால் போர்க் கைதிகள் நீண்ட காலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். எனவே இவர்கள் [illegible] ராக குற்றச்சாட்டுக்கள் [illegible] அது தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். குற்றங்கள் இல்லாதோர் விடுவிக்கப்பட வேண்டும்.

தமிழ் சிறைக் கைதிகள் தொடர்பாக மிதவாத போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும். அதேவேளை போரின் பின்னால் மறைந்து கொண்டு குற்றச் செயல்களில் ஈடுபட்டோருக்கு தண்டனை வழங்க வேண்டும். சிறு சிறு குற்றங்கள் செய்தோர், உதாரணமாக விடுதலைப் புலிகளின் தயா மாஸ்டர் கையெழுத்திட்ட புலிகளின் அடையாள அட்டை வைத்திருப்பவர்கள் சிறையிலுள்ளனர். கையெழுத்திட்ட தயா மாஸ்டர் வெளியே உள்ளார். இந்த விடயத்தில் தயா மாஸ்டர் தான் செய்த தவறுகளை ஏற்றுக் [illegible]

[illegible]

இதேவேளை அடையாள அட்டை வைத்திருப்பவரும் நீதிமன்றத்தில் தான் செய்தது தவறு என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். சிறு சிறு தவறுகளை ஏற்றுக் கொண்டு மன்னிப்பு கேட்போர் விடுதலை செய்யப்பட வேண்டும். அத்துடன் போருக்குள் மறைந்து கொண்டு பயங்கரமான குற்றங்களில் ஈடுபட்டோருக்கு எதிராகத் தண்டனை வழங்கப்பட வேண்டும்.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் 12 ஆயிரம் புலிச் சந்தேக உறுப்பினர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப் பட்டனர். அதேவேளை போரின் போது படையினர், விடுதலைப் புலிகள் என இரு தரப்பிலும் தவறுகள் ஏற்பட்டிருக்கும். இதைத் தவிர்க்க முடியாதது. போர்க் கைதிகள் தொடர்பான விசாரணைகள் தண்டனை வழங்கும் நோக்கத்தைக்கொண்டதாக மட்டுமே அமையக் கூடாது.- என்றார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** நண்பர்களின் உதவியால் முக்கிய செயல்கள் நிறைவேறும். குடும்பத்தினர் மத்தியில் நற்பெயர் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறையும். உபரி வருமானம் கிடைக்கும்.

**இடபம்:** குடும்பத்தின் எதிர்கால நன்மையை உணர்ந்து செயற்படுங்கள். தொழில், வியாபாரம் செழிக்க முயற்சியும், உழைப்பும் அவசியம். அளவான பணவரவு கிடைக்கும். சொத்து, ஆவணங்களை பிறர் பொறுப்பில் தரக்கூடாது.

**மிதுனம்:** அதிக நம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். முயற்சிக்குரிய பயன் முழுமையாக வந்து சேரும். தொழில், வியாபாரம் செழித்து வளரும். பணப் பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

**கடகம்:** சமூக அக்கறையுடன் பணிபுரிந்து பாராட்டுப் பெறுவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து, எதிர் கால வாழ்வில் நம்பிக்கை வளரும். மேலதிக வருமானம் கிடைக்கும். உதவியை வழங்குவீர்கள்.

**சிங்கம்:** உறவினர் ஒருவரின் பாசம் வியப்பைத் தரலாம். தொழில், வியாபாரம் சுமாரான அளவில் இருக்கும். புதிய முயற்சியால் எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். ஆடம்பரப் பொருள் ஒன்றை வாங்குவீர்கள்.

**கன்னி:** கூடுதல் வேலைப்பளு ஏற்படலாம். தொழில், வியாபார நடைமுறையைப் பிறரிடம் சொல்லக்கூடாது. பணவரவை விட செலவு அதிகரிக்கும். நேரத்துக்கு சாப்பிடுவது உடல்நலத்தைப் பாதுகாக்க உதவும்.

**துலாம்:** வெகுகாலமாக எதிர்பார்த்த பயன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை அதிகரிக்கும். ஆதாய பணவரவு பெறுவீர்கள். வீட்டை அழகுபடுத்த கலையம்சம் நிறைந்த பொருள்களை வாங்குவீர்கள்.


**விருச்சிகம்:** செயல்களில் எதிர்பார்த்த நன்மை முழு அளவில் கிடைக்கும். தொழில், வியாபாரம் செழிக்க, அனுகூலமான சூழ்நிலை ஏற்படும். மேலதிக வருமானம் வந்து சேரும். தேவையை நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:** சிலர் தந்த வாக்குறுதியை நிறைவேற்றத் தாமதம் செய்வர். புதிய முயற்சியை பின்னொரு நாளில் தொடங்கலாம். தொழில், வியாபாரம் சுமாரான அளவில் இருக்கும். பணவரவை விடச் செலவு அதிகரிக்கும்.

**மகரம்:** கூடுதல் முயற்சியால் தொழில், வியா பாரத்தில் உள்ள சிக்கல்கள் சரியாகும். நிலுவைப் பணத்தை வசூலிக்க இதமான அணுகுமுறை நல்லது. வெளியூர்ப் பயணத்தைப் பயன் அறிந்து மேற்கொள்ளவும்.

**கும்பம்:** உங்களின் மனமும், செயலும் உற்சாகம் பெறும். பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரம் வியத்தகு அளவில் முன்னேற்றம் தரும். வெகு நாள் காணாமல் தேடிய பொருள் கைக்குவந்து சேரும்.

**மீனம்:** ஓர் அனுபவசாலியின் ஆலோசனை நல்வழி காட்டும். தொழில், வியாபார நடைமுறையில், அவப்பெயர் வராமல் செயற்பட வேண்டும். முக்கிய செலவுகளுக்கு, தேவையான பணம் கிடைக்கும். போக்குவரத்தில் கவனம் தேவை.




அம்மா சுருங்கி **மாம்..**
ஆனார்.
அப்பா சுருங்கி **டாற்...**
ஆனார்
சகோதரன் சுருங்கி **ப்றோ...**
ஆனான்
சகோதரி சுருங்கி **சிஸ்...**
ஆனாள்
ஏனோ இன்னும் சுருங்காதது
எம்முடைய **வாய்** தான்.

# விருது பெறும் ரேடியோ பெட்டி



சமீபகாலமாக வெளிவரும் சில சிறந்த தமிழ் திரைப் படங்கள் சர்வதேச அளவில் பேசப்பட்டு வருகின்றன. அதுமட்டுமன்றி சர்வதேசத் திரைப் பட விழாக்களில் கலந்துகொண்டு பரிசுகளையும் பாராட்டுதல்களைப் பெற்று வருகின்றன. குறிப்பாக, 'காக்கா முட்டை', 'குற்றம் கடிதல்', 'விசாரணை' ஆகிய படங்கள் பல்வேறு சர்வதேச விழாக்களில் திரையிடப்பட்டு, பலரின் பாராட்டுக்களையும், விருதுகளையும் வாங்கிக் குவித்துள்ளன. இந்தப் படங்களின் வரிசையில் தற்போது புதுமுக இயக்குநர் ஹரி விஸ்வநாதன் இயக்கியுள்ள 'ரேடியோ பெட்டி' என்ற தமிழ்த் திரைப் படமும் இடம்பிடித்துள்ளது. இந்தப்படம் தென் கொரியாவில் நடைபெற்ற சர்வதேச படவிழாவில் 20 ஆயிரம் அமெரிக்க டொலர் பரிசை வென்றுள்ளது.

இதன்மூலம் தென்கொரிய படவிழா வரலாற்றில் விருது பெற்றிருக்கும் முதல் தமிழ்படம் என்ற பெருமையை 'ரேடியோ பெட்டி' பெற்றுள்ளது. இந்தப் படத்தில் 75 வயதான லட்சுமணன் என்ற நாடக நடிகர், அருணாச்சலம் என்ற கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இந்தப் படத்தில் ரேடியோ பெட்டியும், லட்சுமணன் தாத்தாவும் தான் பிரதான கதாபாத்திரங்கள். இவர்களுடன் டி.வி.வி.ராமானுஜம், சோபனா, நிவாஸ் ஆதித்தன், லிஸ்சி, பேபி மாயா, இந்துமதி, மாஸ்டர் ரோகன், மிட்டாய் முருகன் ஆகிய பலரும் நடித்துள்ளனர். சரவணா நடராஜன் என்பவரின் ஒலிப்பதிவில் லண்டனைச் சேர்ந்த ரிச்சர்ட் போர்ட் என்பவர் இசையமைத்திருக்கிறார். இந்தப் படத்தின் இயக்குநரான ஹரி விஸ்வநாத் எவரிடமும் உதவி இயக்குநராகவோ, துணை இயக்குநராகவோ, இணை இயக்குநராகவே பயிற்சி எடுக்கவே இல்லை என்பது இங்கே குறிப்பிடத்தக்கது



## பேஸ் புக்கில் பிடித்தவை...



## தண்ணீரைச் சேமிப்போம்

அன்று தண்ணீரைக் கொண்டு அனைத்தையும் சுத்தம் செய்தோம்.
இன்று தண்ணீரையே சுத்தப்படுத்திக் கொண்டிருக்கின்றோம்..!!!
நாளை தண்ணீரைத்தேடி அலைந்து கொண்டிருப்போம்...!
எதிர்கால அருங்காட்சியகத்துக்காக என்றாலும் தண்ணீரைச் சேமிப்போம்.




# உங்களைப்போன்றும் இன்னொருவர் இருக்கலாம்

ஒருவரைப் போன்று உலகத்தில் ஏழு பேர் இருக்கக்கூடும், எனப் பல்வேறு சமூகத்தில் உள்ள மக்களும் நம்பினாலும், தம்மைப்போலவே இருக்கும் ஒருவரைச் சந்திப்பது கூட அரிதான விடயமாகவே காணப்பட்டது. ஆனால் உருவத்தால் ஒரே மாதிரி இருக்கும் இங்கிலாந்தில் பிறந்து வளர்ந்த கோர்டெலியா ராபர்ட்ஸ் என்ற பெண்ணும் அயர்லாந்தில் பிறந்து வளர்ந்த சியாரா மர்பி என்ற பெண்ணும் படிப்பின் நிமித்தம் அண்மையில் ஜேர்மனியின் பெர்மென் நகருக்குக் குடிபெயர்ந்தனர். எனினும் உறவு வழியில் எந்த வித சம்பந்தமும் இல்லாமல், ஒரே மாதிரி உருவம் கொண்ட இவர்கள் இருவரும் முதலில் நேரடியாகச் சந்தித்துக்கொள்ளவில்லையாம். சியாராவின் நண்பர்களே முதலில் கோர்டெலியாவைச் சந்தித்துள்ளனர். பின்னர் சியாராவிடம் 'உனது இரட்டைச் சகோதரியுடன் இங்கு படிக்க வந்தாயா?' என்று கேள்வியெழுப்பினர். நண்பர்களின் இந்தக் கேள்விக்கு அர்த்தம் புரியாமல் தவித்த சியாரா ஒரு கட்டத்தில் கோர்டெலியாவை நேரடியாகச் சந்திக்க நேர்ந்ததாம். வெவ் வேறு நாடுகளைச் சேர்ந்த இருவரும் தமது உருவ ஒற்றுமையாலேயே தற் போது தலை சிறந்த நண்பர்களாகியுள்ளனர். இதுபோல, உறவுவழியாக எந்தவித சொந்த மும் இல்லாமல் ஒரே மாதிரி இருப்பவர்களை ஜேர்மன் மொழியில் 'டோப் பெல் கேங்கர்ஸ்' என்று அழைப்பார்களாம். யாருக்குத் தெரியும், உங்களுடைய டோப் பெல்கேங்கர்ஸை சந்திக்கும் வாய்ப்பு உங்களுக்கும் விரைவில் கிடைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# எழுவை தீவு - முத்தன்காடு
# ஈழத்து திருச்செந்தூர் திருவருள்மிகு முருகமூர்த்தி ஆலயம்
# பஞ்சகுண்ட பக்ஷபுனராவர்த்தன அஷ்டபந்தன
# பிரதிஷ்டாமஹாகும்பாபிஷேகம் பெருஞ்சாந்தி விஞ்ஞாபனம் - 2015

**எண்ணெய்க் காப்பு**
**01.11.2015**
**ஞாயிற்றுக்கிழமை**

**திருச்சிற்றம்பலம்**

நாளென் செயும் வினை தான் என் செயு மெனை நாடிவந்த
கோளென் செயும் கொடுங்கூற்றென் செயும் கும ரேசரிரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே

**மஹா கும்பாபிஷேகம்**
**02.11.2015**
**திங்கட்கிழமை**

குகநேயச் செல்வர்களே!

இலங்கா துவீபத்தின் வடபால் யாழ்ப்பாணமாநகரில் தென்மேற்குப் பகுதியில் சப்ததீவுகளில் தனிச்சிறப்பு மிக்க சைவமும் தமிழும் தளைத்தோங்கும் எழுவைதீவு முத்தன்காடு ஈழத்துத் திருச்செந்தூர் என்னும் திவ்விய திருத்தலத்தில் தன்னை நாடிவரும் அடியார்களுக்கு திருவருள் சுரக்க வேண்டும் என்ற பெருநோக்கோடு மந்திர மயூராசனத்தில் வீற்றிருந்து செங்கோலோச்சும் அகிலலோகநாயகர், திரிலோக சுந்தரர் வள்ளிதேவசேனா சமேத சுப்பிரமணியபெருமானுக்கும் பரிவாரதேவர்கட்கும் மங்களகரமான மனமத வருடம் ஐப்பசி மாதம் 16ஆம் நாள் (02.11.2015) திங்கட்கிழமை புனர்பூச நட்சத்திரமும் ஸப்தமித்தியும் அமிர்தயோகமும் தனுலக்கினமும் கூடிய பகல் 10.21 மணிமுதல் 11.18 மணி வரையுள்ள சுப முகூர்த்த வேளையில் மஹாகும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா நடைபெற திருவருள் கூடியுள்ளது. அடியவர்கள் கும்பாபிஷேகத்தையும் கும்பாபிஷேகத்துக்கு முன் நடைபெறும் கிரியைகளையும் தரிசித்து திருவருள் பெறுவீர்களாக.

## கிரியாகால நிகழ்வுகள்

**ஐப்பசி 14- ஆம் நாள் ( 31.10.2015) சனிக்கிழமை**

கோதூளிகா லக்னத்தில் காலை 6.00 மணிக்கு கர்மாரம்பம் விநாயகர் வழிபாடு, பிராமண அனுக்ஞை, தேவ அனுக்ஞை, திரவிய சுத்தி, திரவிய விபாகம், தனபூசை, கணபதிஹோமம், நவக்கிரகஹோமம், யந்திரபூசை, ரக்சோக்ன ஹோமம், திசாஹோமம், மூர்த்தி ஹோமம், கங்கா பூஜை, சூர்யாக்னி, சங்கிர கணம்

மாலை 03.00 மணிக்கு விநாயகர் வழிபாடு,கிராமசாந்தி, பிரவேச பலி, வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், கடஸ்தாபனம், பிரசன்னாபிஷேகம், பிரசன்ன பூஜை, கலாகர்சணம், ஷண ஹோமம், கும்பயாகசாலாபிரவேசம், யாகபூஜை, அக்னி விபஜனம், ஹோமம், தீபாராதனை, வேததோத்திர திருமுறை பாராயணம், ஸ்தூபிஸ் தாபனம், தீவஸ்தாபனம், யந்திரஸ்தாபனம், விம்பஸ்தாபனம், அஷ்ட பந்தனம்.

**ஐப்பசி 15- ஆம் நாள் ( 01.11.2015) ஞாயிற்றுக்கிழமை**

காலை 8.30 விநாயகர் வழிபாடு, விஷேட சாந்தி, யாகபூஜை, விஷேட திரவியஹோமம், தீபாராதனை, வேததோத்திர திருமுறை பாராயணம், மாலை 5.00 மணிமுதல் விநாயகர் வழிபாடு, விம்பசுத்தி, நியாயசாதிகள், யாகபூஜை, ஹோமம், ஸ்பர்சாகுதி, தீபாராதனை, வேததோத்திர திருமுறை பாராயணம்.

**ஐப்பசி 16- ஆம் நாள் ( 02.11.2015) திங்கட்கிழமை**

காலை 07.00 மணிமுதல் விநாயகர் வழிபாடு, யாகபூஜை, ஹோமம், மஹா பூர்ணாகுதி, தீபாராதனை,வேத தோத்திர திருமுறை பாராயணம், கும்ப வீதிப்பிரதட்சணம், ஸ்தூபி, அபிஷேகம், மஹா கும்பாபிஷேகம், மஹா ஹவர் நிவேதனம் தசதரிசனம், எஜமான் அபிஷேகம் ஆசார்ய பூஜனம், ஆசீர்வாதம், மஹா அபிஷேகம், விஷேட பூஜை, திருவருள் பிரசாதம்.

## குருமார் விவரம்

**சர்வபோதகம்:**
சிரோன்மணி, பிரதிஸ்டா திலகம்
**விஸ்ணுஸ்ரீ.க.ச. சோமஸ்கந்தகுருக்கள்**
(பொன்னாலை வரதராஜப் பெருமாள் திருக்கோவில்)

**பிரதிஷ்டா பிரதமகுரு:**
வேதவித்தயா பூசணம், சிவாகம ஞான திவாகரன்
**ப்ரம்மஸ்ரீ சுந்தர. பாலமுரளீதரக்குருக்கள்**
(மீசாலை இலந்தைகூடல், வீரகத்திப்பிள்ளையார் திருக்கோவில்)

**சர்வ சாதகம்:**
ஸ்ரீ வாகீசவாரிதி
**ப்ரம்மஸ்ரீ கனேசபாபதிக் குருக்கள்** (சுன்னாகம்)
**ப்ரம்மஸ்ரீ முரளீதர. வித்தியானந்தக் குருக்கள்**
(மீசாலை இலந்தைக்கூடல், வீரகத்திப் பிள்ளையார் திருக்கோவில்)

**யாகசம்ரட்சகர்கள்:**
**ப்ரம்மஸ்ரீ இ.தினேஸ்வரசர்மா** (நுணாவில்)
**ப்ரம்ம ஸ்ரீ ந.யசோதரசர்மா** (யாழ்ப்பாணம்)
ப்ரம்ம ஸ்ரீ கு.கஜேந்திரசர்மா (மீசாலை)
**ப்ரம்ம ஸ்ரீ சி.ஸ்ரீரங்கசர்மா** (யாழ்ப்பாணம்)
**ப்ரம்ம ஸ்ரீ மு.ஈசாநந்தசர்மா** (மீசாலை)

**ஆலய பூசகர்:**
**சிவஸ்ரீ க.கைலைநாதன் ஐயா**

**ஒலி, ஒளி அமைப்பு:**
**மனோன்மணி கந்தஞானி (தம்பாட்டி)**

**கும்பாபிஷேகத்தை சிறப்பிக்கும் குருமார்கள்:**
**ப்ரம்மஸ்ரீ ச.நாராயணக் குருக்கள்** (வட்டுக்கோட்டை)
**ப்ரம்ம ஸ்ரீ க.சிவதாசக்குருக்கள்** (கொக்குவில்)
**ப்ரம்ம ஸ்ரீ பா.சபாரத்தினக் குருக்கள்** (காரைநகர்)
**ப்ரம்ம ஸ்ரீ சி.சிவசுப்பிரமணியக் குருக்கள்**
(கொக்குவில்)

**மங்கள வாத்தியம்**
**சுப்பிரமணியம் விபூசனன், வி.பிச்சந்துரு, வி.பி.சங்கர் குழுவினர்** (சங்கத்தானை)

**வர்ணவேலை**
**கலைவாரிதி நிஷாந்தன்**
(அராலி தெற்கு)

**கோப்பிசவேலை**
**சின்னத்துரை தர்மகுலசிங்கம்**
(அனலைதீவு)

**யாக அலங்காரம், பூமாலை**
**திரு.க.குகதாசன் குழுவினர்**
(யாழப்பாணம்)

**சிற்பாசாரி:**
**ப.கமலநாதன்**
(காரைநகர்)

வாரி முருகன் திருக்கோயில் வாயிலில் வந்தணுகிப்
பாரி ரவன் சந்தி தனத்தின் பாங்கினைப் பார்த்துநத்தி
தேர்வி சிவிழி நீர் சொரிவீ நுளந்தேங்க வன்பு
கூர்வி செழுவையுள்ளாரே திருவருள் கூடிடுமே
- எழுவை முருகாலங்காரம்-

வழுவில் அடியார்கள் வாழ்கின்ற வண்மை
எழுவைப் பதிமேவும் எந்தை - தொழுகின்ற
அன்பர்க் கருள் புரியும் ஆறுமுகன் தாள் பணிந்தார்
இன்பமுடன் வாழ்வார் இனிது
- திருமுருக கிருபானந்த வாரியார்-

**ஆலய கட்டட நிர்மாணம்:**
**நிஷாந்தன்**
(அராலி தெற்கு)

**சிறப்பு அனுசரணை:**

# சிகரம்
**பணப்பரிமாற்று சேவை**

# Indosri.com (செய்திகள்)

**Heinrich Str-120 8005 Zurich, சுவிசர்லாந்து**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**வேலுண்டு வினை இல்லை**
**மயிலுண்டு பயம் இல்லை**

**ஆலய பரிபாலனசபையினர்.**
**ஈழத்து திருச்செந்தூர் முத்தன் காடு, எழுவைதீவு.**

# உற்பத்தியாளரை ஊக்குவிக்கும் தேவை அனைவருக்கும் உண்டு

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. சுட்டிக்காட்டு



வவுனியா, ஒக்.29

வவுனியா மாவட்ட விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்களை சந்தைப்படுத்துவதில் பல்வேறுபட்ட சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். நாம் அனைவரும் இணைந்து உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க வேண்டிய தேவை இருக்கின்றது. – இவ்வாறு தெரிவித்தார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன். வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற முத்தான வியர்வை 2015 வர்த்தக கண் காட்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உண்மையில் நானும் ஒரு விவசாயி என்ற அடிப்படையிலே இந்த நிகழ்விலே கலந்துகொள்வதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த உற்பத்தியாளர்களை ஊக்குவிக் கும் முகமாக இந்தத் திட்டத்துக்குப் பக்கபலமாக இருந்து செயற்படுகின்ற சமுர்த்தித் திணைக்களம், ஏனைய திணைக்களங்களின் உத்தியோகத்தர்களை இந்த நேரத்திலே பாராட்டியாக வேண்டும்.

உண்மையிலே இங்கே உற் பத்தியாளர்கள் தாங்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்களை சந்தைப்படுத்துவதிலே பல்வேறுபட்ட சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள். அதேநேரம் தாங்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்களை குறைந்த விலையிலே விற்பனை செய்யவேண்டியிருக்கின்றது.

வவுனியா மாவட்டத்தைப் பொறுத்த வரையில் பெருமளவில் நிலம் இருக்கின்றது. தேவையான நீர் வசதியிருக் கின்றது. ஆனால், கடந்த போர்ச் சூழல் காரணமாக இவற்றை முழுமையாக பயன்படுத்த முடியாத நிலைமைகள் இருந்தது என நான் நினைக்கின்றேன். எதிர்வரும் காலங்களில் இந்த மாவட்டத்தினுடைய உற்பத்திகளைப் பெருக்குவதற்கான பல வசதிகள், சந்தைப்படுத்தல் வாய்ப்புக்கள், நிறையவே இருக்கின்றன. ஆகவே நாங்கள் எல்லோரும் இணைந்து இந்த உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கின்ற ஒரு தேவை எங்கள் எல்லோருக்கும் இருக்கின்றது – என்றார். (ற-21)

# தமிழ்த் தேசியம் என்பது பிற்போக்குத்தனமானது

## புதிய ஜனநாயக மாக்சீச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சாடல்

யாழ்ப்பாணம், ஒக்.29

இந்தியாவையும், அமெரிக்காவையும், மேற்குலகை நாடுகளையும் நீங்கள்தான் எமது சக்தி, எழுந்து வாருங்கள் சர்வ தேச விசாரணைக்கு என்று கோரி நிற்கின்றது இந்தத் தமிழ் தேசியம். இதை முற்போக்குடை யது என்று கூற முடியாது என்று புதிய ஜனநாயக மாக்சீச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.க. செந்தில்வேல் குற்றஞ் சாட்டியுள்ளார்.

ஒக்ரோபர் 21 எழுச்சியின் 49வது ஆண்டு நினைவு கருத்தரங்கு நேற்று செவ்வாய்க்கிழமை யாழ். பொதுநூலக உணவக மண்டபத்தில் நடைபெற்றது.

'சமகாலத்தில் சாதியம் தாக்கங்களும் தீர்வுகளும்' எனும் தொனிப் பொருளில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குற்றஞ் சாட்டியுள்ளார்.

இங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சிங்கள இராணுவத்தினரால் தாக்கப்படுகின்றோம். நாங்கள் தமிழர்கள் என்ற உணர்வு 30 வருட போரின்போது எழவில்லை. சாதியம் என்ற உணர்வு எமது தமிழ் மக்களிடையே எழுந்தது. சில ஆய்வாளர்கள் போரின் பின்னர் சாதியம் ஒழிந்து விட்டது. சமூகம் மாற்றம் கண்டு விட்டது எமது எழுதுகின்றார்கள். போருக்கு முன்னரே தீண்டாமை இருந் தது. வித்தியாசமான வரலாற்று நிகழ்வு நடந்து வந்தது.

சாதிக்கு சங்கங்களும் இருந்து வந்தன. சிறுபான்மை மக்கள் மகா சபை, ஒடுக்கப்பட்டோர் சங்கம், சிறுபான்மை ஐக்கிய விடுதலை முன்னணி இவ்வாறு பல சங்கங்கள் இருந்தன.

நாட்டின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்னுதாரணமாக காட்டக் கூடிய அளவுக்கு அப்போதைய வெகுஜன இயக்கம் பரந்த சக்திகளை கொண்ட வெகுஜன இயக்கமாக இருந்தது.

சாதி அடையாள அரசியல் நடத்திக்கொண்டிருக்கும் இந்தக் காலத்தில், வெகுஜன முன்னணி பரந்த ஐக்கியத்தை உடைய தீண்டாமையை ஒழிப்பதற்கான இயக்கமாக அன்றைய வெகுஜன இயக்கங்கள் உருவாக்கப்பட்டன.

அந்த போராட்டங்கள் வடமாகாணத்தில் பல்வேறு இடங்களில் நடைபெற்றது. போராளிகள் தமது உயிர்களை நீத்தார்கள். அவர்களை நாங்கள் இன்றும் நினைவு கூருகின்றோம். மதிக்கின்றோம். தமது உயிர்கள் பற்றிக் கவலைப்படாது தமிழ் மக்கள் மத்தியில் இருந்த அடிமைத்தனத்தையும், அடக்கு முறையையும் எதிர்த்து போராடி தமது உயிர்களை இழந்தார்கள்.

தாழ்த்தப்பட்டவர்களின் பொருளாதாரத்தை அழிப்பதற்கு இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டது என்று கூறினார்கள். ஆனால், தாழ்த்தப்பட்ட மக்களிடம் பொருளாதாரம் இருக்கவில்லை.

இன்று தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதாரம் மற்றும் கல்வி நிலை என்ன, புலம்பெயர் மக்கள் சிலருக்கு வழங்கும் நிதிகளையும், வெளிநாட்டில் உள்ள சிலரின் நிதி உதவிகளையும் வைத்து, தாழ்த்தப்பட்டவர்கள் சமூகத்தில் நல்ல முறையில் வாழ்கின்றார்கள் என்று நினைக்கின்றார்கள்.

2000 ஆண்டுக்கு முன்னரான சுமைகளை எமக்கு மேல் சுமந்துகொண்டு போனால் எம்மால் நடந்துபோக முடியாது. இந்தச் சுமையில் ஒன்று தான் சாதியச் சுமை. இந்த சுமையைத் தான் தமிழ்த் தேசியம் சுமந்து நிற்கின்றது. பெண் ஒடுக்கு முறையையும், மானத்தியத்தியத்தையும் தான் தமிழ்த் தேசியம் சுமந்து நிற்கின்றது.

தமிழ் தேசியம் என்பது பிற்போக்குத் தனமானது. சாதியத்தைத் தாங்கி நிற்கின்றது. பெண் அடிமைத்தனத்தைத் தாங்கி நிற்கின்றது. சமூகத்தில் முற்போக்கான சக்திகளை எதிர்த்து நிற்கின்றது. அன்னிய சக்திகளை ஆரா தனை செய்து நிற்கின்றது. தேசிய பொருளாதாரத்தை எதிர்த்து நிற்பதே தமிழ்த் தேசியம். தேசத்தில் நடந்த முற்போக்கான விடயங்களை எதிர்த்து நின்றது தமிழ்த் தேசியம்.

பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றுக் கொண்ட போது எதிர்த்து நின்றது தமிழ்த் தேசியம். 1956 ஆம் ஆண்டு விவசாய காணிச் சட்டத்தைக் கொண்டு வந்தபோதும், போக்குவரத்தை தேசியமயமாக்கப்பட்ட போதும் எதிர்த்து நின்றது தமிழ்த் தேசியம்.

எப்போது சரி முற்போக்கு பக்கத்தில் நின்றுள்ளீர்களா என்று கேட்டால் இல்லவே இல்லை. சாதாரண தொழிலாளிகள் மற்றும் விவசாயிகள் மத்தியில் இருந்து வரும் சக்திகளை ஏன் நட்புச் சக்தியாக பார்க்க வேண்டும்?

சாதியம் தமிழ்த் தேசியத்தின் கீழ் உடைக்கபடமாட்டாது. பாதுகாப்படும். எனவே மாற்றுச் சிந்தனையில் அடிப்படையில் வரலாற்றைப் புரட்சிகரமான முறையில் அல்லது விஞ்ஞான ரீதியான முறையில், உற்று ஆராய்வதன் மூலமாக, இன்றுள்ள சமூதாயத்தின் கீழ் உலக மயமாகுதலால், கலை கலாசாரம், மக்களுக்கு விரோதமாக இருக்கக் கூடிய இந்தச் சூழ்நிலையில், இவற்றைப் பற்றி ஆழமாக சிந்திக்கக் கூடிய ஒரு முறை இளம் தலைமுறையினர் மத்தியில் வளரா விட்டால், பழைமை வாதத்தை நோக்கிப் போக வேண்டிய சூழ்நிலை தான் உருவாகும்.

எனவே, ஏன்,எதற்காக, சமூகத்துக்கும் எமக்கும் உகந்த விடயங்களா என்று கேள்வி எழுப்பிப் பார்க்க வேண்டும். சாதியத்தை உடைத்தெறிய தமிழ் மக்கள் மத்தியில் உள்ள முற்போக்கான ஜனநாயகத்தை விரும்புகின்ற தேசிய சக்திகள் முன்வராத வரையில், சாதியத்துக்குள் புரள வேண்டிவர்கள் தான். எனவே, மாக்சீச வாதிகளாகிய நாங்கள் சாதியத்துக்கு எதிராகக் குரல் கொடுப்போம்.

சாதியத்தை எதிர்த்து இளம் தலைமுறையினர் சிந்தனைத் துளியுடன், முன்னோக்கி பயணித்தால், சாதியத்தை உடைத்தெறிந்து பயணிக்க முடியும் – என்றார். (ற-106)

# நெறியாளர் குழுவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

அச்சுவேலி, ஒக்.29


அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நெறியாளர் குழுவுக்கு எதிராக ஒன்பது குற்றச்சாட்டுக்களை முன்வைத்து சங்கத்தின் பொதுச் சபைப் பிரதிநிதிகள் 61 பேர் கையொப்பமிட்டு நம்பிக்கை இல்லாப் பிரேரணையொன்றைச் சமர்ப்பித்துள்ளனர். பொதுச்சபையின் பிரதிநிதிகள் 99பேரில் 61 பேர் கையொப்பம் இட்டுள்ள நம்பிக்கை இல்லாப் பிரேரணையை விவாதிப்பதற்கு பொதுச் சபையின் விசேட கூட்டத்தை உடனடியாக கூட்டுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொதுச் சபை உறுப்பினர்களின் கடிதம் சங்கத்தின் தலைவர், செயலாளருக்கு பதிவுத் தபால்மூலம் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதோடு, அதன் பிரதிகள் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அதிகாரி மற்றும் வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் மற்றும் கூட்டுறவுத்துறை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அச்சுவேலி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், யாழ்.மாவட்டத்தில் முதன் நிலையில் உள்ள சங்கமாக நீண்டகாலம் செயற்பட்டு வந்தது. சங்கத்துக்கான நெறியாளர் குழு கடந்தகாலப் பகுதியில் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டது. அந்த வகையில் 25 வருடங்களாகச் செயற்பட்டு வந்தது. 2013 ஆம் ஆண்டு புதிய நெறியாளர் குழு தேர்தலின்போது இரண்டு குழுக்கள் போட்டியிட்டன. புதிய அணி தெரிவு செய்யப்பட்டது. புதிய அணியின் நெறியாளர் குழு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டு, இரண்டு வருடங்கள் பூர்த்தியடையாத நிலையில் நெறியாளர் குழுவுக்கு எதிராக ஒன்பது குற்றச்சாட்டுக்களை முன்வைத்து நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது. (ற-11)

# வீதி விபத்துக்கள் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்றிட்டம்

## மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுப்பு



மட்டக்களப்பு, ஒக். 29

வீதி விபத்துக்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வித மாக ஓட்டோக்களுக்கு 'ஸ்ரிக்கர்' ஒட்டும் விசேட செயற்றிட்டம் ஒன்று மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சிறுவர்களுக்கு ஏற்படும் விபத்துக்களை தடுக்கும் வகையில் ஐரோப்பிய ஒன்றியம்–இலங்கை அபிவிருத்திக்கான ஒன்றிணைவு எனும் தொனிப் பொருளில் மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்துக்கான ஐரோப்பிய ஒன்றிய உதவி திட்டத்தின் கீழ் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் கொக்கட்டிசோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டோக்களுக்கு வீதி விபத்து பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் வசனங்கள் அடங்கிய ஸ்ரிக்கர் கள் ஒட்டப்பட்டன.

அவற்றில் 'வீதிச் சமிக்ஞைகளைப் மதித்து நடக்கும் சாரதிகளைப் பாராட்டுகின்றோம்', 'வீதி ஒழுங்குகளை கடைப்பிடிப்போம் விபத்துக்களை தவிர்ப்போம்', 'சாரதிகளே அதிக வேகம் வாழ்வின் ஆனந்தங்களை இல்லாது செய்துவிடும்', 'சாரதிகளே உங்களின் கவனமின்மை ஊரவரின் உயிரைக் குடிக்கும்' போன்ற வசனங்கள் எழுதப்பட்டிருந்தன.

கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையத்தின் மோட்டார் போக்குவரத்து பிரிவின் பொலிஸ் அதிகாரிகள் தலைமையில் நடைபெற்ற இந்த விசேட நிகழ்வில் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் பிரதிநிதிகள், மட்டக்களப்பு சர்வோதயத்தின் திட்ட உத்தியோகத்தர் பத்மா உட்பட கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையத்தின் மோட்டார் போக்குவரத்து பிரிவு பொலிஸ் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த ஸ்ரிக்கர்கள் ஒட்டும் விசேட நிகழ்ச்சித் திட்டத்துக்கு ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம், மட்டக்களப்பு சர்வோதயம், கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையத்தின் மோட்டார் போக்குவரத்து பிரிவு என்பன உதவி வழங்கியுள்ளன. (ற-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நகர மத்தியிலிருந்த வள்ளுவர் சிலை எங்கே?

## சமூக ஆர்வலர்கள் கேள்வி

யாழ்ப்பாணம், ஒக்.29

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்.நகரின் சத்திரச் சந்தியில் இருந்து அகற்றப்பட்ட புராதன வள்ளுவர் சிலைக்கு என்ன நடந்தது என்று சமூக ஆர்வலர்கள் வினா எழுப்பியுள்ளனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் வீதி அகலிப்பு மற்றும் சத்திரச் சந்தியில் வீதி சமிக்ஞை விளக்குகள் அமைப்பதற்காகவும் குறித்த வள்ளுவர் சிலை மக்களின் கண்ணுக்குப் படாமல் இரவோடு இரவாக அகற்றப்பட்டது. எனினும் அகற்றப்பட்ட இந்த வள்ளுவர் சிலை நகரின் முற்றவெளியில் வைக்கப்படும் என்று அப்போதைய மாநகராட்சியினரால் தெரிவிக்கப்பட்டது.

எனினும் இந்தச் சிலை அகற்றப்பட்டு இரண்டு வருடங்கள் கழிந்துள்ள நிலையில் நகரின் எந்தப் பகுதியிலும் குறித்த வள்ளுவர் சிலை வைக்கப்படவில்லை என்றும் சமூக ஆர்வலர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த வள்ளுவர் சிலை எங்கே கொண்டு செல்லப்பட்டது? இப்போது எங்கே வைக்கப்பட்டுள்ளது? என்றும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இது தொடர்பாக யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசனுடன் தொடர்பு கொண்டபோது- இந்த வள்ளுவர் சிலை குறித்த விவகாரம் எனக்குத் தெரியாது. வள்ளுவர் சிலையை நகரின் பிறிதொரு இடத்தில் வைப்பதற்கு முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது என்று அறிந்தேன். எனினும் அகற்றப்பட்ட இந்த வள்ளுவர் சிலை எங்கே உள்ளது என்பது எனக்குத் தெரியாது. எனினும் வள்ளுவர் சிலை விவகாரத்துக்கு விரைவில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்- என்றார். (ந-ரி5,17)

# கடந்த 23 ஆண்டுகளாக தமிழ் ஆசிரியர் இல்லை

## உடன் நியமிக்குமாறு கிராஞ்சி மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.29

கடந்த 23 வருடங்களாக கிராஞ்சி அ.த.க. பாடசாலையில் தமிழ்ப் பாடத்துக்கென ஆசிரியர் எவரும் பணியாற்றல்லை. முதலமைச்சரின் வருகையுடனாவது பாடசாலைக்கு தமிழ் ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் - இவ்வாறு அந்தக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் உள்ள வேரவில், வலைப்பாடு, கிராஞ்சி ஆகிய கிராமங்களுக்கு நேற்றுமுன்தினம் வடமாகாண முதலமைச்சர் மற்றும் மாகாண அதிகாரிகள், மாவட்ட அதிகாரிகள் அடங்கிய குழு நேரில் சென்று மக்களைச் சந்தித்தது. அதன்போதே கிராஞ்சி மக்களால் மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அந்தக் கிராம மக்கள் தெரிவித்ததாவது:-

நீண்ட காலமாகப்போக்குவரத்து வசதிகள்கூட இன்றி பெரும் சிரமத்தின் மத்தியில் இங்கு வாழ்கின்றோம். எமது கிராமப் பாடசாலையில் கடந்த 23 ஆண்டுகளாக தமிழ்பாடத்துக்கு ஆசிரியர் இல்லை. தமிழ் ஆசிரியர் ஒருவரை நியமிப்பதற்கு முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர்.

இதற்குச் சரியான பதிலை உடன் கல்வி அமைச்சின் செயலாளர் வழங்கவேண்டும் என முதலமைச்சர் தெரிவித்தார். இது குறித்துத் தெரிவித்த வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இரவீந்திரன் அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்கு முன்னர் ஓர் ஆசிரியர் கண்டிப்பாக நியமிக்கப்படுவார் -என உறுதி வழங்கினார்.(ந-101)

# இருதய சிகிச்சை கிளினிக் பிரிவின் இடநெருக்கடிக்கு தீர்வு

யாழ்ப்பாணம், ஒக். 29

யாழ். போதனா வைத்தியசாலையில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் இடம்பெறும் இருதய சிகிச்சைக் கிளினிக் பிரிவில் நோயாளர்களின் நலன்கருதி தற்போது பல மாற்றங்கள் நிர்வாகத்தால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

தற்சமயம் பிறப்பு, இறப்புப் பதிவாளர் காரியாலயப் பகுதிக்கும் குறித்த இருதய சிகிச்சைப் பிரிவுக்கும் இடையில் இருந்த தட்டிமறைப்பு அகற்றப்பட்டு, இரண்டு பகுதிகளும் ஒன்றாக்கப்பட்டு நோயாளர்கள் வசதியாக இருக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதேசமயம், குறித்த அறைக்கு வெளியில் உள்ள திறந்த மேடையில் மேலதிக இருக்கைகள் போடப்பட்டு மேலதிக நோயாளிகளும் வசதியாக அமர்ந்து இருக்கும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. முன்பு இருந்தமை போன்ற இடநெருக்கடிகள் தற்சமயம் நிர்வாகத்தால் அகற்றப்பட்டுள்ளன. (ந-122)

# எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் வன்னி மாவட்ட எம்.பிக்களின் கௌரவிப்பு நிகழ்வு 2 ஆம் திகதி

வவுனியா, ஒக்.29

எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வொன்று வவுனியா வர்த்தக சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வவுனியா நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா வர்த்தக சங்கத்தின் தலைவர் கே.இராஜலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சித் தலைவருமாகிய இரா.சம்பந்தன், வர்த்தக கைத்தொழில் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத்பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், கே.கே.மஸ்தான், சி.சிவமோகன், திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா ஆகியோர் தினச்சந்தை முன்றிலில் இருந்து மங்களவாத்தியம், பாண்ட் வாத்தியம் சகிதம் அழைத்துச் செல்லப்பட்டு, வவுனியா நகர சபை மண்டபத்தில்வைத்து கௌரவிக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் வடமாகாணசபை அமைச்சர்கள், வடமாகாணசபை உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், நிறுவனங்களின் தலைவர்கள், சமூகப் பிரதிநிதிகள் வர்த்தகப்பிரமுகர்கள் உட்படப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ந)

# பிறப்பு, விவாக மற்றும் இறப்பு பதிவாளர்களுக்கான நியமனம்

யாழ்ப்பாணம், ஒக்.29

பிறப்பு, விவாக மற்றும் இறப்புப் பதிவாளர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு அண்மையில் யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்டச் செயலக அரச அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந்தனன், உதவி மாவட்டச் செயலாளர் சா.சுதர்ஷன், வடக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகம் செல்வி ஆனந்தி ஆகியோர் நியமனக் கடிதங்களை வழங்கினர்.

யாழ்.நகர் மேற்கு, யாழ் நகர் கிழக்கு, யாழ்ப்பாண நகர், அல்லைப்பிட்டி, எழுவைதீவு, காரைநகர், வட்டுக்கோட்டை, புத்தூர் மற்றும் கட்டைவேலி ஆகிய பிரதேசங்களில் கடமையாற்றவென 10 பதிவாளர்களுக்கான நியமனங்களே வழங்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் கருத்துத் தெரிவித்த அரச அதிபர் புதிய பதிவாளர்கள் தமது பொறுப்புக்களை உணர்ந்து பொதுமக்களுக்குநேர்மையான முறையில் சேவையாற்றுவதுடன்- மக்களுக்கான தேவைகளை விரைவாக பூர்த்தி செய்யவும் முன்வர வேண்டும்- என்றார்.

இந்த நிகழ்வில் மாவட்ட மேலதிக பதிவாளர் பிரபாகர், பதிவாளர் சங்கீதா உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ந-10)

# திருமறைக் கலாமன்றத்தின் ஐப்பசித் திங்கள் பொற்தூறல்

யாழ்ப்பாணம், ஒக்.29

பொன் விழா ஆண்டை முன்னிட்டு திருமறைக் கலாமன்றம் மாதந்தோறும் நடத்தி வரும் பொற்தூறல் நிகழ்ச்சி நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

மாலை 5 மணிக்கு இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் நடை பெறவுள்ள, இந்த நிகழ்வுக்குபிரதமவிருந்தினராக இலங்கை ஐக்கிய நாடுகள் சிறுவர் கல்வி நிறுவனத்தின் (யுனி செவ்) சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் திருமதி சர்மிலி சதீஸ் கலந்து கொள்ளவுள்ளார்.

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ள பொற்தூறல் நிகழ்வில் சிறுவர்கள் வழங்கும் பரத நாட்டியங்கள், பாடல்கள், நாடகம், விசேட கூத்து என்பன இடம்பெறவுள்ளன என்றும் - கலை ஆர்வலர்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு திருமறைக் கலாமன்றத்தினர் தெரிவித்துள்ளனர். (ந-10)

# புனர்வாழ்வு அதிகார சபையின் நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம், ஒக்.29

புனர்வாழ்வு அதிகார சபையின் வீடமைப்பு கடன் சம்பந்தமான நேர்முகத் தேர்வு மற்றும் சுய தொழில் சம்பந்தமான நேர்முகத் தேர்வு என்பன எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற வுள்ளன.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறும் இந்த நேர்முகத் தேர்வில் புனர்வாழ்வு அதிகார சபையின் ஏற்பாட்டில் சுமார் எழுபத்தைந்து பயனாளிகள் கலந்து கொள்ளவுள்ளனர். இந்த நேர்முகத்தேர் வுகளில் வீடமைப்புக் கடன் சம்பந்தமான நேர்முகத் தேர்வு காலை 9.00 மணி யளவிலும்- சுய தொழில் சம் பந்தமான நேர்முகத் தேர்வு மு.ப. 11 மணியளவிலும் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவர், செயற்பாட்டுப் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர்கள், யாழ்.மாவட்ட அரச அதிபர், திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-10)

கோழிக்குஞ்சு விநியோகம்
35 நாளில் 2kg இற்கு மேல் வளர்ச்சியடைக்கூடிய No-1 BAHIRA புறொயிலர் குஞ்சுகள் 31.10.2015 விநியோகிக்கப்படும்.
றாஜீவ்
நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.
T.P: 077 609 0926
(64119)(12.16.17)

யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை
கந்தரோடை, சுன்னாகம்
நிறுவுநர் நினைவு தினமும் 5ஆவது பரிசளிப்பு விழாவும் 2015
காலம் : 30.10.2015 (வெள்ளிக்கிழமை)
நேரம் : பி.ப. ஒருமணி
இடம் : ஒறேற்றர் மண்டபம்
தலைவர்
வ.நந்தீஸ்வரன் (அதிபர்) அவர்கள்
யா/ஸ்கந்தவ ரோதயா ஆரம்பப்பாடசாலை
ஆசியுரை
பிரம்மஸ்ரீ இ.சோமேஸ்வரசர்மா அவர்கள்
பிரதம குருக்கள் -ஸ்கந்தன் ஆலயம்
பிரதம விருந்தினர்
Dr.க.சிவகுமார் (ஸ்கந்தவரோதயன்) அவர்கள்
(Consultant Paediatrician, Colombo East Base Hospital Mullariya)
தலைவர் -கொழும்பு ஸ்கந்தா பழைய மாணவர் சங்கம்
சிறப்பு விருந்தினர்
க.சண்முகநாதகுமாரன் அவர்கள்
கோட்டக்கல்விப் பணிப்பாளர் - உடுவில் கல்விக்கோட்டம்
கௌரவ விருந்தினர்
பா.கமலநாதன் (ஸ்கந்தவரோதயன்) அவர்கள்
அபிவிருத்தி உத்தியோகத்தர்- மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்.
நினைவுப்பேருரை
சி.மகேந்திரன் (ஸ்கந்தவரோதயன்) அவர்கள்
இளைப்பாறிய பிரதி அதிபர் - ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
பரிசில் வழங்குபவர்
திருமதி ஜெ.சிவகுமார் அவர்கள்
ஆசிரியர் - சென்.தோமஸ் கல்லூரி, கல்கிசை
நன்றியுரை
செல்வி வை.சாவித்திரி (உப அதிபர்) அவர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலைச் சமூகம்.
(66805) 13.15. கந்தரோடை, சுன்னாகம்.

யா/கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் மகா வித்தியாலயம்
பாராட்டி வாழ்த்துகின்றோம்
எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி ஜெயகௌரி பரமேஸ்வரன்
அவர்களுக்கு 06.10.2015 அன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சிறந்த ஆசிரியர்களுக்கான "பிரதீபா பிரபா" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
பாடசாலைச் சமூகம்
யா/கரம்பொன் சிறிய புஷ்ப ம.ம.வி
ஊர்காவற்றுறை.
Best Wishes





அக்ஷயன்
10 ஆவது பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்
29.10.2015
Happy Birthday
மோகன்- வெண்ணிலா தம்பதியின்
செல்வப் புதல்வன்
அக்ஷயன்
தனது பத்தாவது பிறந்த தினத்தை இன்று (29.10.2015) வியாழக்கிழமை சுவிஸில் அப்பா, அம்மா, அக்கா பிரணித்தா ஆகியோர் சகிதம் உற்றார், உறவினர், நண்பர்களோடு வெகுவிமர்சையாகக் கொண்டாடுகிறார்.
அக்ஷயன் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ எல்லாம்வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர் : அப்பா,அம்மா, அக்கா,
அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பா,
பெரியம்மா, சித்தப்பாமார், சித்திமார்,
மாமாமார், அத்தைமார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

அமரர் தம்பு நீலாம்பிகை

திதி: துதியை



அம்மா ஆண்டுகள் மூன்று ஆன துவோ! ஆனாலும் ஆயிரம் நினைவு கள் கவலைகள் எம் நெஞ்சினிலே பழகிய இனிய நாள்களைக் கனவாய் நினைப்பதா! அம்மா எப்படி மறப்பது நிஜமாய் இன்று எம்முடன் நீங்கள் இல்லை. நிச்சயமாய் முடியாதம்மா உங்களை மறந்திட.

என்றும் உங்கள் அழியாத நினைவுடன்....

மலர்வு 09.08.1943 உதிர்வு 31.10.2012

குடும்பத்தினர். (65617)(11.15.17)

அம்பகர்லேன், கோக்குவில் கிழக்கு, கோக்குவில்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

ஆறுமுகம் பஞ்சரத்தினம்

திதி: துதியை

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே என்றும் உமது அன்பான உறவு மதிக்கத்தக்கது மறக்க முடியாதது மனித நேயத்தின் மறுவிம்பமே

அன்னாரது ஓராண்டு நினைவுதினம் இன்று (29.10.2015) வியாழக்கிழமை அவரது இல்லத்தில்நடைபெறும். இந்நிகழ்விலும் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பிறப்பு 15.01.1944 இறப்பு 08.11.2014

தகவல்: குடும்பத்தினர்
புத்தூர் கிழக்கு
காளியாணைவீதி , புத்தூர்

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி

சந்திரசேகரம் செல்லம்மா



ஆண்டுகள் இரண்டு சென்றிடினும் மறைந்திடுமா உங்கள் நினைவு பரிதவிக்குதம்மா எம் நெஞ்சம் உங்கள் புன்சிரிப்பைக் காண விழியோரம் கண்ணீருடன்..

என்றும் உங்கள் நினைவுகளுடன்
கணவர்,
பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,உறவினர்கள்.

தோற்றம் 14.01.1953 மறைவு 20.10.2013

கைதடி கிழக்கு, கைதடி.

(சி/10048)(11,15)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தாவடியைப் பிறப்பிடமாகக் கொண்ட

அமரர்

இராசையா கனேஸ்வரலிங்கம்

திதி: துதியை - 29.10.2015

தோற்றம் 07 - 10 - 1956 மறைவு 08 - 11 - 2014

ஆண்டொன்று கழிந்திடினும்
ஆறுதில்லை எம் மனது. குடும்பத்தின் உயர்வுக்காய்
உழைத்ததுடன் நீர் எம்மேல் உள்ளார்ந்த அன்புடனே வாழ்ந்தீர்
பிறப்பவர் ஒருநாள் இறப்பதுதான் நியதி
இதையெண்ணி எம் மனதைத் தேற்றிடுவோம்...

உங்கள் ஆத்மா இறைநிழலில் சாந்தி பெற ஆண்டவன் பாதம் பணிகின்றோம்.

"அம்பிகை இல்லம்"
செல்லப்பா வீதி,உடுவில் கிழக்கு,
உடுவில்.

இ.பரமேஸ்வரலிங்கம் குடும்பத்தினர்,
இ.கனேசலிங்கம் (சின்னமணி) குடும்பத்தினர்
மற்றும் சகோதரர்கள்.

# கஞ்சா வைத்திருந்த நால்வருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஒக்.29

கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களுக்கு யாழ்.நீதவான் நீதி மன்றம் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன், 50 மணித்தியாலங் கள் சமுதாய சீர் திருத்த சேவையில் ஈடுபட வேண்டும் என்றும் உத்தர விட்டது.

குறித்த சந்தேககநபர்கள் மூன்று மாதங்களுக்கு முன்னர் யாழ்.பொலி ஸாரால் கைது செய்யப்பட்டனர். நீதிமன்றில் அவர்கள் முற்படுத்தப் பட்டபோது, நீதிமன்றக் கட்டளை யின்படி தொடர்ச்சியாக விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இது தொடர்பான வழக்கு விசார ணைக்கு எடுக்கப்பட்டபோது, பொலி ஸாரால் சந்தேகநபர்களுக்கு எதி ரான குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. சந்தேகநபர்கள் குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து அவர்களுக்கு நீதிமன்று மேற்குறித்த தீர்ப்பை வழங்கியது.

குறித்த நபர்கள் குருநகர் மற்றும் பாசையூரைச் சேர்ந்த இளைஞர் கள் என்று தெரிவிக்கப்படுகின் றது. (ற-103)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி வனஜாதேவி கதிரவேல் அவர்களின் அன்புத் தந்தை

சின்னத்துரை சிவகுருநாதன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்தி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் வட்டம்
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி (65613)(12.15)

## மரண அறிவித்தல்

திருமதி தனபாக்கியம் இரத்தினசிங்கம்



யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கு நாகபூசணி அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொட்டாஞ்சேனை கொழும்பில் வசித்து வந்தவருமான திருமதி தனபாக்கியம் இரத் தினசிங்கம் 27.10.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நட ராசா - சின் னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற இரத்தினம்மா திருஞானசுந்தரம் அவர்களின் அன்புச் சகோதரியும் காலஞ் சென்ற சின்னப்பு - இரத்தினசிங்கத்தின் (கிராமத்தலைமை அதிகாரி - விதானையார்) அன்பு மனைவியும் கிரிதரன், நிர்மலன்(இலங்கை வங்கி , தலைமைக் காரியாலயம், கொழும்பு), மைத்ரேயி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் குணநாயகம் (ஜேர்மனி), பத்மாவதி(கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சிறியதாயும், விமலாதேவி, ரஜிநாயகி(கொழும்பு), ஜெகநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் தர்சினி ஐங்கரன் (ஆசிரியை - யா/கோண்டாவில் இராம கிருஷ்ண ம.வி) சுகாசினி தயாளன் (லண்டன்), காயத்திரி சயந்தன் (லண்டன்), Dr.நிசா(யாழ் போதனா வைத்தியசாலை), அபிசன்(யாழ் இந்துக் கல்லூரி), அர்ஜூன் (கொ/பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), நிவேதிகா ஒலிவியர் (லண்டன்), அபிராம்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அஷ்வின், ஆகாஷ், ஆரணி, அபிஷயன், ஆரபி, ஆருஷி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கோண்டாவில் கிழக்கு, நாகபூசணி அம்மன் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நாளை(30.10.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கட்டையலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாகபூசணி அம்மன் வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
கிரிதரன்: 077 935 3065, 021 221 2232
நிர்மலன்: 071 130 2396, 011 233 8663
மைத்ரேயி: 0044 208 335 0616

தகவல்: குடும்பத்தினர். (65611)(14.15.)

## நீங்காத நினைவுகளில் ஓராண்டு நினைவு நாள்



மண்ணில் 08.01.1964 விண்ணில் 29.10.2014

திருமதி றெஜிவதனி ஜெயசிங்கம்

"கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின் அவரோடு வாழ்வோம் என்பதே நாம் கொண்டுள்ள நம்பிக்கை" (உரோ- 6:8)

தாயே தரணியில் தலை நிமிர்ந்து வாழ தயை கூர்ந்தவளே !
உம் பாசத்திற்கு தலை வணங்குகிறோம்.
கண்களில் கண்ணீர் மல்க உன் கருணை உள்ளம் நினைத்து கண் நெகிழுகிறோம்
ஓராண்டு கழிந்தாலும் உன்நினைவுகளில் வாழ்கின்றோம்
எம் இரத்தத்தோடு கலந்த அன்னை நீர் உடலால் பிரிந்தாலும்
உள்ளத்தால் உயிர்வாழ்கின்றீர்...

"நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன" (சா.ஞா - 3:1)

140, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (64402)(14.15)

என்றும் நினைவுகளில்
குடும்பத்தினர்.

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 29

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய பரிசளிப்பு விழா நிகழ்வுகள் இன்று வியாழக் கிழமை பாடசாலை பிரதான மண் டபத்தில் நடைபெறவுள்ளன. அதிபர் லு.மகேஸ்வரன் தலை மையில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்த நிகழ் வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேத நாயகன் கலந்து கொள்ளவுள் ளார். பரிசில்களை திருமதி பிரதீபா வேதநாயகன் வழங்கவுள்ளார். அனைவரையும் கலந்து கொள்ளு மாறு பாடசாலை அதிபர் தெரிவித் துள்ளார். (ற-ரி5)

## சடலம் மீட்பு

திருகோணமலை, ஒக். 29

திருகோணமலை பூவரசன்தீவுப் பகுதியில் வீடொன்றினுள் இருந்து கடந்த திங்கட்கிழமை ஆண் ஒருவரின் சடலம் ஒன்று கண்டெடுக் கப்பட்டுள்ளது.

சிலர் குறித்த நபரைத் தேடி வீட்டுக்குச் சென்றி ருந்த போது வீடு பூட்டப்படிருந்தமையால் சந்தேக மடைந்துள்ளனர்.

அதையடுத்து வீட்டை உடைத்துப் பார்த்த போது, குறித்த நபர் சடலமாகக் காணப்பட் டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற னர். (ற-10

## சர்வமதப் பேரவையின் பரிசளிப்பு விழா இன்று

யாழ்ப்பாணம், ஒக். 29

யாழ்.மாவட்ட சர்வமதப் பேரவை நடத் தும் பரிசளிப்பு விழா யாழ்.மத்திய கல் லூரியின் பிரதான மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

பேரவையின் தலைவர் ஜாக்கிரத சைதன்ஜா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேத நாயகன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக யாழ்.மத்திய கல் லூரி அதிபர் கே.எழில்வேந்தன் கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் பரிசில்கள் வழங்கலுடன், பரிசு பெற்ற 3 நாடகங்களும் அங்கு மேடை ஏற்றப்படவுள்ளன. நன்றியுரையை மருத்துவர் பராசக்தி நிகழ்த்துவார். (ற-4)

## இலவச கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்


யாழ்ப்பாணம், ஒக். 29

வவுனியா தொழில் நுட்பக் கல்லூரியில் அடுத்த கல்வியாண்டுக்கான கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன. நாளை வெள்ளிக்கிழ மைக்கு முன்னர் விண் ணப்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2016 ஆம் கல்வி ஆண் டுக்கான அனைத்து முழு நேர மற்றும் பகுதி நேரக் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. 17 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் இந்தக் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப் படிவங் களை கல்லூரியில் பெற முடியும். கற்கை நெறிகள் அனைத்தும் இலவசம். கற்பதற்கான ஊக்கு விப்புக் கொடுப்பனவும் வழங்கப்படும். கற்கை நெறி முடிவில் என்.வி.கியூ 3,4,5 தரச் சான்றிதழும் வழங்கப்படும். எனவே, ஆர்வமுடையவர்கள் விண் ணப்பிக்குமாறு தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விற்பனைக்கு வரும் கடவுச் சொற்கள்

இணையத்தளங்களில் எந்தவொரு கணக்கை ஆரம்பிப்பதற்கும் கடவுச் சொற்கள் (Password) அவசியப்படுகின்றன. இந்தக் கடவுச்சொற்களின் பாதுகாப்புத் தன்மை குறைவாகக் காணப்படுவதனால், அண்மைக்காலங்களில் திருடப்பட்டுத் தனிநபர் கணக்குகள் ஹேக் செய்யப்படுகின்றன. இவற்றைக் கருத்தில் கொண்ட அமெரிக்காவின் நியூயோர்க்கில் வசிக்கும் 11 வயது மாணவி ஒருவர் உயர் பாதுகாப்புடைய கடவுச்சொற்களை உருவாக்கி அவற்றை விற்பனை செய்து வருகின்றார். உயர் பாதுகாப்புடைய கடவுச் சொற்கள் தேவையானவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஒவ்வொரு கடவுச்சொற்களும் தலா 2 டொலர்கள் பெறுமதியில் வழங்கி வருகின்றார். மேலும் கடவுச்சொற்களை தனது கையினால் எழுதி மின்னஞ்சல் முகவரியின் ஊடாக அனுப்பி வருகின்றார்.




## வேகமாகச் சார்ஜ் ஏற வேண்டுமா?

அலைபேசிக்கு மிக வேகமாக சார்ஜ் ஏற்றும் ஸ்மார்ட் சார்ஜரை யுஎஸ்பிடிஐ என்ற நிறுவனம் வடிவமைத்துள்ளது. இந்த சார்ஜர் மூலம் மிகக் குறைவான நேரத்தில், இரண்டு மடங்கு வேகத்தில் சார்ஜ் ஏறுகிறது. இந்த சார்ஜரின் முனையில் மின்சக்தியை சேமித்து வைக்கும் வசதி இருப்பதால் இந்த சார்ஜரையே சார்ஜ் ஏற்றி வைத்துக் கொள்ளலாம். இந்த சார்ஜரில் எல்.டி. இண்டிகேட்டர் (LD Indicator) உள்ளது. சார்ஜிங் அளவுக்கேற்ப வண்ணங்கள் ஒளிரும். மிகவிரைவில் இது விற்பனைக்கு வரவுள்ளது.



## இந்தியாவில் அறிமுகமாகும் கூகுள் நெக்ஸஸ்

(Google Nexus 6P)

கூகுள் நிறுவனம் இந்த மாத ஆரம்பத்தில் நெக்ஸஸ் 6. (Nexus 6P) ஸ்மார்ட் அலைபேசியை அறிமுகம் செய்திருந்தது.

இந்த நிலையில் குறித்த அலைபேசியை இந்த வாரம் இந்தியாவில் அறிமுகம் செய்யவுள்ளதாக அறிவித்திருந்த நிலையில், இதுவரை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

எனினும் அடுத்த மாதம் அறிமுகம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்படி 32np, சேமிப்பு வசதியைக் கொண்ட அலைபேசி இந்தியப் பெறுமதியில் 39 ஆயிரத்து 999 ரூபாவுக்கும், 64np, சேமிப்பு வசதி கொண்ட அலைபேசி 42 ஆயிரத்து 990 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படவுள்ளன.




# முத்தான வியர்வை - 2015 கண்காட்சி வவுனியாவில்









வவுனியா, ஒக்.29

வாழ்வின் எழுச்சி வர்த்தகக் கண்காட்சி 'முத்தான வியர்வை 2015' வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச் சந்திரா தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதித்தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், மேலதிக அரச அதிபர் திரு மதி மேகநாதன், பிரதேச செயலாளர் கா. உதயராஜா மற்றும் வவுனியா [illegible] செயலக ஊழியர்கள், [illegible] லக ஊழியர்கள், பொதுமக்கள் என்பலரும் கலந்துகொண்டனர். பொது மக்களின் சுயதொழில் முயற்சிகளை ஊக்குவிப்பதை நோக்காகக் கொண்ட இந்தக் கண் காட்சியில் விவசாயிகளின் உற்பத்திப் பொருள்கள், சுயதொழிலில் ஈடுபடுபவரின் உற்பத்திப் பொருள்கள் என் [illegible] வரை இந்தக் கண்காட்சி இடம்பெற வுள்ளது. (ர)

# மன்னாரில் சிறப்பான பிரதேச இலக்கிய விழா

மன்னார், ஒக்.29

மன்னார் பிரதேச செயலகமும், மன்னார் பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த பிரதேச இலக்கிய விழா நேற்றுக் காலை மன்னார்–சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியில் சிற்பக் கலைஞர் ஜே.சி.லியோன் அரங்கில் விமரிசையாக நடை பெற்றது.

பிரதேச கலாசாரப் பேரவையின் தலைவரும், மன்னார் பிரதேச செயலாளருமான கே.எஸ்.வசந்த குமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் இலக்கியம் தொடர்பிலான கருத்துரைகள், பல்வேறு கலை நிகழ்வுகள், பட்டிமன்றம் ஆகியவை இடம்பெற்றன.

அத்துடன் விழாவின் சிறப்பு அம்சமாக 'மன்னல்- 2015' என்ற மலரும் வெளியிடப்பட்டது. குறித்த மலரை மன்னார் பிரதேச செயலாளர் கே.எஸ்.வசந்தகுமார் வெளியிட்டு வைத்தார்.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரியவும், விசேட விருந்தினராக மன்னார் மாவட்ட ஓய்வு நிலை அரச அதிபர் எஸ்.எம்.குரூஸ் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் திரு மதி நந்தினி ஸ்ரான்லி டிமெல், வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் செ. வனஜா ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக நானாட்டான் பிரதேச செயலாளர் எம்.பரமதாசன், முசலி பிரதேச செயலாளர் செ.கேதீஸ்வரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் எழுத்தாளர்கள், ஆசிரியர்கள், கலைஞர்கள், மாணவர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்டனர். (ற-21)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தென் சீனக் கடற்பரப்பில் அமெரிக்கப் போர்க் கப்பல்

## வெடிக்கின்றது சர்ச்சை





பீஜிங், ஒக்.29
தெற்கு சீன கடற்பகுதியில் உள்ள சீனாவின் செயற்கை தீவு அருகே அமெரிக்காவின் போர்க்கப்பல் நிறுத்தப்பட்டுள்ளது என்பதை பீஜிங் உறுதி செய்துள்ளது.
ஆயினும், இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரி, செவ்வாய்க்கிழமை காலை யு.எஸ்.எஸ் லாசன் போர்க் கப்பல் ஸ்பார்ட்லி தீவுக்கு அருகே ரோந்து சென்றது. அந்தப் பகுதி சீனாவுக்கு உட்பட்ட பகுதி அல்ல. அது சீனாவால் அறிவிக்கப்பட்ட செயற்கைத்தீவுதான். அதிபர் ஒபாமாவின் ஒப்புதலின்பேரில் இந்த ரோந்துப் பணி நடைபெற்றது என்றார்.
எனினும் அமெரிக்காவின் இந்தக் கருத்தை சீனத் தரப்பு கண்டித்துள்ளது. சீன வெளியுறவுத் துறை அமைச்சர் இது தொடர்பில் தெரிவிக்கும்போது அமெரிக்கா எதையும் செய்ய முன்னர் ஒரு தடவைக்கு இரு தடவை யோசிப்பது நல்லது என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.
தென் சீனக் கடல் பகுதியில் புதிதாகப் பெரும் தீவு ஒன்றை சீனா உருவாக்கி வருகிறது. விமானத் தளம் அமைக்கும் விதத்தில் இந்தத் தீவு உருவாக்கப்படுகின்றது என்று அமெரிக்கா ஏற்கெனவே குற்றம் சுமத்தியிருந்தது. (ற)



## சிரிய ஜனாதிபதி - ஓமான் அமைச்சர் திடீர்ச் சந்திப்பு

டமஸ்கஸ், ஒக்.29
சிரிய ஜனாதிபதி பர் அல் அசாத் மற்றும் ஓமான் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் யூசுப் பின் அளவி ஆகியோருக்கு இடையே சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. குறித்த சந்திப்பு கடந்த திங்கட்கிழமை சிரியத் தலைநகர் டமஸ்கசில் இடம்பெற்றுள்ளது.
இதன்போது, சிரியாவில் கடந்த நான்கு ஆண்டுகளாக இடம்பெற்று வரும் மோதல்களுக்கு எந்த விதத்தில் தீர்வு காணலாம் என்பது தொடர்பில் இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.
சிரியா உள்நாட்டு மோதல், தீவிரவாத செயற்பாடுகள், சர்வதேச அழுத்தங்கள் போன்ற பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ள நிலையிலேயே நேற்று ஓமான் தலைவரினூடான அசாத்தின் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.
சிரியாவில் நாடாளுமன்ற மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களை விரைவில் நடத்த வேண்டும் என்று அண்மையில் ரஷ்யா வேண்டுகோள் விடுத்திருந்தது. எனினும் அதற்கு சிரியத் தரப்பில் இருந்து இதுவரை எந்தவித உத்தியோகபூர்வ பதிலும் கொடுக்கப்படவில்லை. (ற)

## போர் வடு அகலாத நகரில் திருமணம்

தமஸ்கு, ஒக்.29
ஐ.எஸ். தீவிரவாதிகளிடமிருந்து மீட்கப்பட்ட கோபானி நகரத்தில் முதல் முறையாக திருமணம் ஒன்று நடைபெற்றுள்ளது.
ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்கக் கூட்டுப்படையினர் தாக்குதல் நடத்தி வருகின்ற நிலையில், கடந்த ஒரு மாதமாக ரஷ்யாவும் தனது தாக்குதலை ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக நடத்தி வருகிறது. இந்தநிலையில், வட சிரியாவின் துருக்கி எல்லைக்கு அருகேயுள்ள கோபானி நகரம் ஐ.எஸ் தீவிரவாதிகளின் பிடியிலிருந்து குர்திஷ் படைகளால் அண்மையில் மீட்கப்பட்டது. குண்டுவெடிப்புகளால் பாதிக்கப்பட்ட அடையாளம் இன்னமும் மாறாத இந்தப் பகுதியில் குர்திஷ் ஜோடியொன்றின் திருமணம் கடந்த 23ஆம் திகதி நடை பெற்றுள்ளது.






இந்தப் பகுதியின் தற்போதைய நிலையைத் தமது திருமணத்துடன் நினைவில் வைத்துக்கொள்ள விரும்பிய தம்பதியர், பாதிக்கப்பட்ட பகுதிகளிலேயே நின்று எடுத்துக்கொண்ட புகைப் படங்களை வெளியிட்டுள்ளனர். இந்தப் பகுதியில் ஐ.எஸ் தீவிரவாதிகள் கண்ணிவெடிகளைப் புதைத்துவைத்துள்ளனர், அத்தகைய கண்ணிவெடியில் சிக்கி கடந்த செப்ரெம்பர் மாதம் 8 குழந்தைகள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-ரி4)

# தந்தங்களுக்காக யானை வேட்டை

## சிம்பாப்வேயில் தொடரும் சோகம்



ஹவாங்கி, ஒக்.29
சிம்பாப்வேயில் உள்ள ஹவாங்கி உயிரியல் பூங்காவில் தந்தங்களுக்காக யானைகள் வேட்டையாடப்படுவது அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றது என்று கவலை தெரிவிக்கப்படுகின்றது.
ஹவாங்கி உயிரியல் பூங்காவானது 15 ஆயிரம் சதுர கி.மீ பரப்பளவில் உள்ளது. இங்கு தொடர்ச்சியாக விலங்குகள் சட்டத்துக்கு புறம்பாக வேட்டையாடப்பட்டு வருகின்றன.
இதற்கு அந்நாட்டு வனவிலங்கு அதிகாரிகள் சிலரே உடந்தையாக இருக்கின்றனர் என்று குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. அதிலும் குறிப்பாக யானைகள், தந்தங்களுக்காகக் கொல்லப்பட்டு, தந்தங்கள் வெளிநாடுகளுக்குக் கடத்தப்படுவது தொடர்ந்து நடைபெற்று வருகிறது.
இந்த நிலையில் தற்போது [illegible] 22 யானைகள் தந்தத்[illegible] விசம் வைத்துக் கொல்லப்பட்டுள்ளன. பாதுகாக்கப்பட்ட காட்டுப்பகுதியான சினமடெலாவில் நேற்று [illegible] மேற்பட்ட தந்தங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதற்கு எதிராக பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதும் அவற்றால் பயன் எதுவும் கிடைக்கவில்லை என்று வனவிலக்கு பாதுகாப்பு அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர். (ற)



கோஸ்டாரிக்காவின் துர்ரில
பெரும் எரிமலைக் குமுறல
குறித்த எரிமலையானது உ
என்றும் அந்தப் பிராந்திய
இது குறித்த ரொயிட்டர்ஸ் செ
நேற்றுக் காலை 8.37 மண
இதுவே பெரும் இயக்கமாகு
இது இயங்க ஆரம்பித்ததில்
அண்மைய ஆண்டுகளாக
எனவும் கூறப்படுகின்றது. ம
எரிமலை குமுறத் தொடங்கி

## சிறிய ரக வி[...] புளோரிடாவி[...]



நியூயோர்க், ஒக்.29
அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் சிறிய ரக விமானம் ஒன்று விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. விமானத்தில் பயணித்த மூவர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
இரண்டு இயந்திரங்கள் பொருத்தப்பட்ட குறித்த சிறியரக விமானம், நேற்றுமுன்தினம் புளோரிடாவில் பறந்துகொண்டிருந்தபோது, ரோவர்ட் கவுண்டி பகுதியில் கட்டுப்பாட்டை இழந்துள்ளது. பின்னர் அது தரையில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்தச் சம்பவம் ரோவர்ட் கவுண்டி பகுதியில் உள்ள நெடுஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ன் துர்ரிலபா எரிமலை நேற்றுமுன்தினம் முதல் சாம்பலையும் எரிவாயுவையும் வெளியிட்டு வருகின்றது. அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் 5 குமுறலாக இது பதிவாகியுள்ளது.
பான்து உள்ளூர் நேரப்படி காலை 8.37 மணியளவில் குமுற ஆரம்பித்தது என்றும், எரிமலைக் குமுறலானது தொடர்ந்து அதிகரித்து வருகின்றது ிராந்திய இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.
ிட்டர்ஸ் செய்திச் சேவைக்கு கருத்து வெளியிட்ட அந்தநாட்டு புவியியலாளர் ஃபுளோரிபெட் வேகா, சமீப நாள்களாக எரிமலை குமுற ஆரம்பிக்கவில்லை. 3.37 மணிமுதலே குறித்த எரிமலை சாம்பலையும் எரிவாயுவையும் உமிழ்ந்து வருகின்றது. ஆயினும் இதுவரை இந்த எரிமலை செயற்பட்ட விதத்தில் யக்கமாகும்.
ம்பித்ததில் இருந்து இதுவரை சுமார் 30 வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
ாடுகளாக புகையையும் சாம்பலையும் வெளியேற்றி, வளி மாசுபாட்டை ஏற்படுத்தி வந்த போதிலும், குறித்த எரிமலை மக்மா குழம்பைக் கக்கவில்லை ின்றது. மக்களின் பார்வைக்காகத் திறந்து வைக்கப்பட்டிருந்த துர்ரிலபா எரிமலை வலயத்தைச் சுற்றி அமைக்கப்பட்ட தேசியப் பூங்கா 2009 ஆம் ஆண்டில் தொடங்கியதில் இருந்து மூடப்பட்டுள்ளது. (ற)

## உதைபந்து விளையாடி பிறந்ததினம் கொண்டாடிய பொலிவியா ஜனாதிபதி

நியூயோர்க், ஒக்.29
தென்அமெரிக்க நாடான பொலிவியாவின் ஜனாதிபதி ஏவோ மோரல்ஸ்உதைபந்துவிளையாடித்



தமது பிறந்தநாளைக் கொண்டாடியுள்ளார். அந்த நிகழ்வுகள் கடந்த திங்கட்கிழமை நியூயோர்க் நகரில் இடம்பெற்றுள்ளது.
மோரல்ஸ், அமெரிக்க முதலீட்டாளர்கள் மற்றும் வங்கி, நிதி நிறுவனங்களின் முக்கியஸ்தர்களை சந்திப்பதற்காக அமெரிக்கா சென்றிருந்தார். இந்த நிலையிலேயே தனது 55ஆவது பிறந்த தினத்தை உதைபந்து விளையாடிக் கொண்டாடியுள்ளார்.
குறித்த நிகழ்வுகள் குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்,
இங்கு எனக்கு ஆதரவு வழங்கிய அனைத்துப் பொலிவிய மக்களுக்கும் நான் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றேன். அவர்களது தொழில்கள் உட்பட அனைத்துவிடயங்களும்நிறைவேற வேண்டும் என்று நான் வாழ்த்துகின்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். உதைபந்துப் போட்டிகள் இடம் பெற்று முடிந்ததும் அவர் தமது குடும்பத்தினர் மற்றும் அங்கிருந்த மக்களுடன் இணைந்து கேட் வெட்டி மகிழ்ந்தார். (ற)

## காஸா மீது இஸ்ரேல் விமானத் தாக்குதல்

ஜெருசலேம், ஒக்.29
பலஸ்தீனத்தின் காஸா எல்லை மீது இஸ்ரேல் ராணுவத்தினர் [illegible] தாக்குதல்களை நடத்தியுள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. குறித்ததாக்குதல்கள்நேற்றுமுன்தினம் இடம் பெற்றுள்ளன.
காஸா தரப்பில் இருந்து இஸ்ரேலின் தென்பகுதி மீது தாக்குதல் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து தாமும் காஸா எல்லை மீது [illegible] தாக்குதல் நடத்தினோம் என இஸ்ரேல் ராணுவ உயர் அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டிருந்தார். ஜெருசலம் அல் அக்ஸா பள்ளிவாசல் பிரச்சினை தொடர்பில் பலஸ்தீன் மற்றும் இஸ்ரேல் ஆகிய இரு தரப்பினர் இடையேயும் தொடர்ச்சியான மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. இதனால் கடந்த சில நாள்களாக அங்கு அமைதியின்மை அதிகரித்துள்ளது.



## ...5 விமானம் ...வில் விபத்து



...சாலை ஒன்றுக்கு அருகிலே இடம்பெற்றுள்ளது.
விபத்து இடம்பெற்ற தகவல் அறிந்தவுடனேயே தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்துக்குச் சென்றுள்ளனர். பின்னர் குறித்த விமானத்தில் பயணம் செய்த மூன்று பேர் உயிருடன் இருப்பதை அறிந்த அவர்கள் அவர்களை மீட்டுள்ளனர்.
பின்னர் அவர்கள் அவசரமாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இந்த விபத்து இடம்பெற்றமைக்கானகாரணம்இன்னமும் அறியப்படாதநிலையில்பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

## காட்டுத் தீயை கட்டுப்படுத்த தொடர்ச்சியான நடவடிக்கை

### இந்தோனேசியப் பிரதமர் தெரிவிப்பு

லண்டன், ஒக்.29
தற்பொழுது தமது நாட்டில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீயை கட்டுப்படுத்துவதற்குத் தொடர்ச்சியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று இந்தோனேசியப் பிரதமர் யூசுப் கல்லா தெரிவித்துள்ளார்.
ஊடகம் ஒன்றுக்கு நேற்றுமுன்தினம்கருத்துத்தெரிவிக்கும்பொழுதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- தற்பொழுது ஏற்பட்டுள்ள காட்டுத் தீயானது முன்னெப்போதும் இல்லாத அளவுக்குப் பெரிய அளவில் ஏற்பட்டுள் ளது. நாம் இது இவ்வளவு பெரிதாக ஏற்படும் என்று எதிர்பார்க்க வில்லை. இந்தத்தீயைக்கட்டுப்படுத்துவதற்காக தற்பொழுது அதிக தொகையான தீயணைப்பு வீரர்கள் ஈடுபடுத்தப் படுத்தப்பட்டுள்ளதுடன், பல ஹெலிகொப்டர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. தற்பொழுது இருக்கும் நிலைமையைக் கருத்தில் கொண்டு நாம் சில ரசாயனப் பொருள்களையும் பயன்படுத்தி தீயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம். - என்றார். (ற)



## 30 ஐ.எஸ். தீவிரவாதிகள் துருக்கியில் கைதாகினர்

### பொலிஸார் மேற்கொண்ட திடீர்த் தேடுதலில்

டியார்பாகிர், ஒக்.29
துருக்கியின் தென்கிழக்கு மாகாணத்தில் உள்ள டியார்பாகிர் நகரில் துருக்கியப் பொலிஸார் மேற்கொண்ட திடீர்த் தேடுதல் நடவடிக்கையில் சுமார் 30 இஸ்லாமிய அரசு (ஐ.எஸ்) தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
மத்திய அனரோலியன் நகரான கொன்யாவில் துருக்கியப் பொலிஸாருக்கும் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்குமிடையில் கடுமையான ஆயுத மோதல் நடைபெற்ற பின்னர் இந்தத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
[illegible] நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் ஏழு ஜிஹாதிகள் மற்றும் இரு பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டனர்.
பொலிஸ் படையினர் ஐ.எஸ் தீவிரவாதிகள் இருந்த வீடுகளின் கதவைத் திறக்க முயற்சித்தபோது கண்ணிவெடி வெடித்ததில் இரண்டு அதிகாரிகள் கொல்லப்பட்டனர். ஐந்து பேர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதல் நடவடிக்கையின்போது ஒரு தொகுதி ஆயுதங்கள், வெடிமருந்துகள், ஆவணங்கள் என்பவை கைப்பற்றப்பட்டன.
ஒக்ரோபர் மாதத்தின் தொடக்கத்தில் துருக்கி தலைநகர் அங்காராவில் நடந்த தற்கொலைத் தாக்குதலில் நூறு பேருக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்ட சம்பவத்திலிருந்து, துருக்கி, ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான நடவடிக்கைகளை அதிகரித்துள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றுபட்டால் நிச்சயம் உண்டு வாழ்வு

இளம் தலைமுறையினரே நாம் ஒன்றுபட்டால்தான் எமக்கு உண்டு வாழ்வு. சந்திகளிலும் தெருவிலும் அல்ல உங்கள் ஆன்மாவுக்குள் ஒன்றுபடுங்கள். எமது தேசத்தில் வன்முறையையும், பதற்றத்தையும் ஏற்படுத்துவதற்கு அல்ல நிரந்தரமான எமது இனத்தின் நீடித்த அமைதிக்காக ஒன்று படுங்கள்.

எமது தேசத்தில் தமிழர் என்ற நாமத்துடன் தலைநிமிர்ந்து எமக்குள் சகோதரத்துவத்துடன் முன்னைய காலங்களில் வாழ்ந்த நாம், இனவாதிகளின் திட்டமிட்ட சதியால் தற்போது போதையெனும் கலாசாரத்துக்குள் உள்வாங்கப்பட்டு, எமது இனத்துக்குள்ளேயே கொலை, வன்புணர்வு, தெருச் சண்டித்தனம், வாள்வெட்டு என்று சீரழிந்து சின்னாபின்னமாகிப் போகின்றோம். எமது தேசத்தின் நீதித்துறையாலும் சட்டங்களாலும் மற்றும் பெற்றோர்களாலும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு தர்மத்துக்கு எதிரான எமது இளைஞர்களின் தீய செயல்கள் எங்கும் பெருகி விஸ்வரூபம் எடுத்துள்ளமை கவலைக்குரியது.

மூன்று தசாப்த காலமாக இனவாதப் போரினால் விழுங்கப்பட்டு சப்பித்துப்பப்பட்டு முழுதாகச் சக்கையாகிப் போனதுதான் எம் இனம். இருந்தும் அந்தச் சக்கையிலிருந்து துளிர்விட்டு எம் சிவபூமியில் சிவத்தாலே சிவமாக எத்தனிக்கின்றோம். போர் இழப்புக்களையும் எமது மனதின் வடுக்களையும் ஈடு செய்து கொள்வதற்காக அந்தத் தருணம் பார்த்து எமது இளைஞர்கள் தீய செயல்களில் மிதப்பது எந்த வகையிலும் நியாயமாகாது.



நாம் ஒற்றுமையாக, இன வாதத்துக்கு எதிரான அகிம்சை வழியில் பலமாக வேண்டும். அதற்கு இளைஞர்களாகிய (உங் கள்) எமது கைகளும் மனதும் புனிதமடைய வேண்டும். எமது தேசத்துக்கு இளம் சமூகத்தின் பங்களிப்பு இன்றியமையாதது. அந்த வகையில் எமது தேசத்தில் அமைதி நிலைக்க வேண்டுமானால், முதலில் எமது மனதில் அமைதிக்கான விருப்பம் துளிர்விட வேண்டும். தனி மனிதர் ஒவ்வொரு வரினதும் அமைதியே பின்னர் தேசத்தின் அமைதியாக மலருகின்றது. அதன் பின்பு உலகத்தின் அமைதியாக மாற்றமடைகின்றது.

எம்மையெல்லாம் தர்ம சக்கரத்துக்குக் கூவிக்கூவி அழைத்து ஒன்றிணைப்பதற்கு சுவாமி விவேகானந்தரோ, மகாத்மா காந்தியோ, எம் ஈழ மகான் சிவயோகரோ தற்சமயம் இந்த உலகில் எம்மோடு இல்லை. அவர்கள் அனைவரும் இந்த மண்ணிலிருந்து மறைந்தாலும் அவர்களது ஆன்மாக்களின் அருள் கொண்டு தீமையெனும் அடர்ந்த வனத்துக்குள் நாலாபுறமும் சுற்றித் திரியும் எமது மனதை நாமே கூவிக்கூவி அழைத்து தர்மத்தில் ஒன்றிணைக்க வேண்டும். அதுவே எமது தேசத்தின் தற்காலச் சூழ்நிலைக்கு இளைஞர்களாகிய நாம் செய்யும் நன்றிக் கடனாகும்.

எம் சிவயோகரோ தாம் தூலவுடம்பில் வாழும் காலத்திலேயே உலகத்தின் தர்மத்துக்காக எம்மையெல்லாம் கூவி எப்போதோ அழைத்துவிட்டார் தம்பி கேளடா எனும் நற்சிந்தனைப் பாடல் மூலம். மீண்டும் ஒருமுறை தர்மத்துக்காக அந்தப் பாடலின் சிலவரிகள் இந்தக் கட்டுரையில் கூவுகின்றது.

தாவிச் செல்லும் மனத்தைத் தம்பி கேளடா
கூவிக்கூவி யழைத்துக் கூடாத குடியிருத்தடா
வாவியாறு சேரிலங்கை நல்ல நாடடா
பாவியென்ற நாமந்தன்னைப் பகைத்து நில்லடா

சாம்-ரமேஸ்குமார்

# அதி உச்ச சேவையை வழங்கும் எயார்டெல்

*எயார்டெல் சேவை பற்றி அதன் முகாமைத்துவப் பணிப்பாளர் ஜினேஸ் ஹெட்ஜ் வழங்கிய செவ்வி இது*

**கேள்வி:-** பார்தி எயார்டெல் நிறுவனத்தைப் பற்றிக் கூற முடியுமா?

**பதில்:-** 20 நாடுகளில் தனது செயற்பாடுகளை முன்னெடுத்துவரும், சர்வதேச தொலைத்தொடர்பாடல் சேவைகளை வழங்கும் பார்தி எயார்டெல், ஆசியா மற்றும் ஆபிரிக்காவில் தனது பிரசன்னத்தைக் கொண்டுள்ளது. இந்த நிறுவனம், தனது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதைக் குறிக்கோளாகக் கொண்ட நிறுவனமாகும்.

**கே:-** பார்தி எயார்டெல் லங்கா நிறுவனப் பிரதம நிறைவேற்று அதிகாரியாக இலங்கையில் கடமையாற்றுவதற்காகக் கிடைத்த சந்தர்ப்பத்தையும், உங்களின் எதிர்காலத் திட்டத்தையும் பற்றிக் கூறுங்கள்?

**ப:-** எனக்கு இலங்கையில் கடமையாற்றுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். இலங்கை அழகான நாடு, இலங்கை வாழ் மக்களும் அன்பாகப் பழகக்கூடியவர்கள். நானும் அவர்களுடன் அன்பாகப் பழகுகின்றேன். அவர்களின் தேவையறிந்து அவர்களுக்கு ஏற்றாற்போல் எமது நிறுவனத்தின் மூலம் சேவைசெய்ய எண்ணியுள்ளேன். குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் அவர்களின் தேவையறிந்து அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவுள்ளேன்.

**கே:-** இலங்கை இளைஞர்களுக்கு எத்தகைய சேவையைச் செய்யவுள்ளீர்கள்?

**ப:-** எயார்டெல்இலங்கையில் குறுகிய காலத்தினுள், உபகண்ட பிராந்தியத்தில் உயர்ந்த 3G வலையமைப்பு விகிதத்தைக் கொண்ட தொலைத்தொடர்பாடல் சேவை வழங்குநர்களில் ஒன்றாகத் தரப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இலங்கையில் எயார்டெல்லின் பிரவேசம் இளைஞர்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றுள்ளது. குறிப்பாக மூன்று நாள்களில் (Facebook,Youtube) ஒரு மில்லியன் வாடிக்கையாளர்கள் எயார்டெல் இணையத்தளத்தைப் பார்வையிட்டுள்ளனர். இது எமக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகும். இளைஞர்கள் கூடுதலாக கையடக்கத் தொலைபேசியில் எயார் டெல்லைப் பாவிப்பது எமது எதிர்காலத் திட்டத்தை நடை முறைப்படுத்துவதற்கு இலகுவாக அமைந்துள்ளது.

**கே:-** இளைஞர்கள் மத்தியில் எயார்டெல் பாவிப்பதற்கான முக்கிய காரணம்?

**ப:-** இலங்கையில் எயார்டெல் பிரபல்யமடைவதற்கான முக்கிய காரணம், இந்தியாவின், முன்னணி நடிகர் சாருக்கான் 'ஆயுபோவன் ஸ்ரீலங்கா' என்று அறிமுகப்படுத்தியது இலங்கை மக்கள் மத்தியில் திருப்புமுனையாக அமைந்தது. அதுமட்டுமல்லாது, எயார்டெல்லின் 75 சதவீதமான வலையமைப்பு 3GஐA கொண்டுள்ளது. அத்துடன், Internet download போன்றவற்றை இலகுவான முறையில் எமது நிறுவனத்தின் ஊடாக சிறந்த சேவையை வழங்குவதன் மூலம் இளைஞர்கள் மத்தியில் பிரபல்யமடைய முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

**கே:-** மற்றைய நிறுவனங்கள் 4Gஐ அறிமுகப்படுத்தியுள்ளன. இதைப்பற்றிக் கூறுங்கள்?

**ப:-** எங்கள் நோக்கம் வாடிக்கையாளர்களுக்குச் சிறந்த சேவையை வழங்குவதே. இலங்கையில் வேகமாக விரிவடைந்துவரும் வலையமைப்பு எனும் வகையில் பார்தி எயார்டெல் லங்கா நிறுவனம், 2014/2015 நிதியாண்டின் இறுதி இரு காலாண்டுகளில் ஒரு பில்லியன் ரூபாவரை தனது 3G வலையமைப்பை விஸ்தரிப்பதற்காக முதலீடு செய்திருந்தது. தொடர்ந்தும் தனது முதலீடுகளை மேற்கொள்ள நிறுவனம் திட்டமிட்டுள்ளதுடன், தனது வலையமைப்பை மேலும் உறுதியடையச் செய்து, ஒன்றுக்கு மேற்பட்ட இடை இணைப்பு மையங்களை நிறுவி, வாடிக்கையாளர்களுக்கு உயர்தர 3G அனுபவத்தை ஏற்படுத்திக் கொடுக்கவும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. நாம் அறிமுகப்படுத்தும் பக்கேஜ்களை முழுமையாகத் திறம்படச் செய்வதே எமது குறிக்கோளாகும். மேலும் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த டேட்டா அனுபவத்தைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடன் வலையமைப்பு விஸ்தரிப்புத் திட்டத்தின் மூலமாக எயார்டெல் லங்கா நாடு முழுவதும் தனது 3G வலையமைப்பை 75 சதவீதத்துக்கும் அதிகமாக விஸ்தரிப்பதற்குத் திட்டமிட்டுள்ளது.

**கே:-** தொலைத்தொடர் பாடல் சந்தையில் புதிய மாற்றங்கள் ஏற்படுகின்றன. உங்கள் நிறுவனத்தின் மாற்றங்கள் எவ்வாறு உள்ளன?



**ப:-** தொலைத்தொடர்பாடல் வியாபாரத்தில் புதிய மாற்றத்தை செயற்படுத்துவதற்கான வேளை தற்போது எழுந்துள்ளது. இலங்கைச் சந்தையில் வியாபார செயற்பாடுகளை முன்னெடுக்க ஆரம்பித்து குறுகிய காலப்பகுதியில் நாம் தொடர்ந்து வேகமாக வலையமைப்பு விஸ்தரிப்பு செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் நிறுவனமாகத் திகழ்கிறோம். இதன் மூலமாக எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த வலையமைப்பு பெற்றுக் கொடுக்கப்படுவதுடன் தொலைத் தொடர்பாடல் சேவைகளை வழங் கும் நிறுவனம் என்பதிலிருந்து மொபைல் இணைய சேவைகளை வழங்கும் விசேட நிறுவனம் எனும் நிலையை எய்த வேண்டும். இதைக் கவனத்திற்கொண்டு எமது 3G வலையமைப்பில் நாம் தொடர்ந்து பெருமளவு முத லீடுகளை மேற்கொள்வோம். எமது HSPA+ வலையமைப்பு உட்கட்டமைப்பு புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதுடன் உலகத் தரம்வாய்ந்த டேட்டா அனுபவத்தை இலங்கையின் வாடிக்கையாளர்களுக்குப் பெற்றுக் கொடுக் கும் வகையில் அமைந்துள்ளது. இந்த வலையமைப்பு விஸ்தரிப்பின் மூலமாக இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் வசிக்கும் வாடிக்கையாளர்களுக்கும் உயர் வேகமான இணைய அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் அதனூடாக Email - ling, downloading, uploading, live streaming, social networking ஆகியவை தொடர்பில் சிறந்த ஒன்லைன் அனுபவத்தைப் பெற்றுக் கொடுக்க எண்ணியுள்ளோம்.

**கே:-** இந்தியா மிகப் பெரிய வியாபார சந்தையுடைய நாடு. ஆனால், இலங்கையில் வியாபாரச் சந்தை சிறிய அளவில் காணப்படுகின்றது. இதைப் பற்றிக் கூறமுடியுமா?

**ப:-** இந்தியாவின் சனத்தொகைக்கு ஏற்றவாறு இந்தியாவின் வியாபாரச் சந்தை உள்ளது. இலங்கையின் சனத்தொகைக்கு ஏற்ப இலங்கையின் வியாபாரச் சந்தை உள்ளது.

**கே:-** விளையாட்டில் எயார்டெல்லின் அனுசரணையைப் பற்றிக்கூறமுடியுமா?

**ப:-** வாழ்க்கையை மேம்படுத்தும் அம்சங்களை உருவாக்குவதன்மூலம் மக்களின் வாழ்க்கையை மறுமலர்ச்சியடையச் செய்தல் என்ற எமது இலக்குடன் தொடர்புபட்ட வகையில் எயார்டெல் லங்கா புத்தம்புதிய வழிவகைகளை எப்போதும் தேடிவருகிறது. இதனை அடைவதற்கு விளையாட்டு என்பது மிகப் பொருத்தமான துறையாகும். இதனைக் கருத்திற்கொண்டு கிரிக்கெட், உதைபந்தாட்டம், டென்னிஸ், கோல்ப், படகுப்போட்டி, ரக்பி போன்ற விளையாட்டுகளுக்கு எமது நிறுவனம் அனுசரணை வழங் குகிறது. எயார்டெல் சம்பந்தப்பட்ட மட்டில் விளையாட்டுத் துறைக்கு எமது ஆதரவை வழங்கும் அதே சமயத்தில் மக்களால் பெரிதும் விரும் பப்படும்தொலைத்தொடர்புச் சேவை வழங்கும் நிறுவனமாக எயார் டெல் விளையாட்டுத் துறைக்கு அனுசரணை வழங்கி வருகின்றமை எமது நிறுவனத்துக்குப்பெருமை சேர்க்கும் விடயாகும்.

**கே:-** CSR திட்டங்களைப் பற்றிக் கூறமுடியுமா?

**ப:-** எமது நிறுவனம் கடந்த காலங்களில் மக்களுக்கு விழிப்பூட்டும் திட்டங்களைச் செய்துள்ளது. சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் பாலியல் கொடுமைகள், சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக பாடசாலைகளுக்கு விஜயம்செய்து மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளோம். Lady Ridgeway ஆஸ்பத்திரிக்குத் தேவையான உதவிகளைச் செய்துள்ளோம். ஒவ்வொரு வருட இறுதியிலும் வைத்தியசாலைக்கு விஜயம்செய்து நோயாளர்களின் குறைகளை விசாரித்து அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்துவருகிறோம்-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனை மரங்களைப் பாதுகாப்பார்களா?

யாழ்ப்பாணப் பிரதேசத்தை அடையாளப்படுத்தி இயற்கையின் கொடையாக உயர்ந்து வளர்ந்து அழகாக அசைந்தாடிக் கொண்டு நிற்பவையே பனை மரங்களாகும். இந்தப் பனை மரங்களின் பயன்பாடுகள் பல. இது ஏழைகளுக்கு உணவளிக்கும் கற்பகதரு எனவும் போற்றப்படுகிறது. இத்தகைய பனை மரங்களில் அனேகமானவை போர்க் காலத் தில் அழிந்து போனதை யாவரும் அறிவார்கள். எஞ்சியிருப்பவையும் தற்போது நடைமுறையிலுள்ள அரச வீட்டுத்திட்ட வீடுகள் அமைப்பதற்காகவும் ஏனைய கட்டடத் தேவைகளுக்காகவும் கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கப்படுகின்றன. இப்படியே தொடர்ந்து அழிக்கப்படுமானால் வருங் காலத்தில் பனை மரங்களை எமது பிரதேசம் இழந்து விடக்கூடிய அபாயமுள்ளது. இந்த நிலை யிலிருந்து மீள்வதற்காக பிளாஸ்ரிக் உற்பத்தி யாளர்கள் அலுமினிய உற்பத்தியாளர்கள் போன்றோர் வீடமைப்புக்குத் தேவையான பனை மரங்களைப் போன்ற வடிவமைப்பில் பிரதியீட்டுப் பொருள்களை உற்பத்தி செய்து கட்டுமான விலையில் விற்பனைக்கு விடுவார்களேயானால் தற்போதுள்ள பனைகள் யாவும் காப்பாற்றப்படலாம். தற்போது விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் வளர்ச்சியடைந் துள்ள சீனா, யப்பான் போன்ற நாடுகளில் முழுவீட்டையுமே பிளாஸ் ரிக் உற்பத்திகளால் உருவாக்குகிறார்கள் என்றால் எமது நாட்டில் கூரை வேலைக்குரிய மரங்களை மட்டும் ஏன் உற்பத்தி செய்ய முடியாது? இதற்காக எமது மண்ணிலுள்ள தொழில் வல்லுநர்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஆலோசனை வழங்கி எமது பிரதேசத்திலுள்ள பனைகளைப் பாதுகாப்பார்களா?

சி.காசிப்பிள்ளை
அல்லாரை வடக்கு, கொடிகாமம்

## உரியவாறு பெறப்படும் விண்ணப்பங்கள் காலக்கிரமத்தில் அனுப்பிவைக்கப்படும்

கடந்த 27.10.2015 ம்திகதி உதயன் பத்திரிகையில் வாசகர் திருமுகம் பகுதியில் பிரசுரமாகிய கடிதம் தொடர்பாக குறித்த விடயம் தொடர்பான அலுவலகத்தின் பொறுப்பான அதிகாரி என்றவகையில் எனது கருத்தினைத் தெரிவிக்கின்றேன்.

அப்பகுதியில் குறித்த நபர் பொதுமக்கள் முறைப்பாடு செய்கிறார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். பொதுமக்கள் முறைப்பாடு செய்வதாயின் குறித்த நபர் ஒரு பொறுப்பான அரச அதிகாரி அல்லது பொது அமைப்பு ஒன்றினைச் சார்ந்தவராக இருக்க வேண்டும். அவ்வாறிருப்பின் குறித்த நபர் தனது உண்மையான பெயரையும் தான் சார்ந்த நிறுவனத்தின் பெயரையும் குறிப்பிட்டிருக்க வேண்டும். அதை விடுத்து தனியொரு நபர் தன்னிடம் பொதுமக்கள் முறைப்பாடு செய்வதாகக் குறிப்பிடுவது பொருத்தமற்றது. தனி நபராக இருப்பின் தான் எதற்காக எப்போது விண்ணப்பம் செய்தார் என்பதை குறிப் பிட்டிருக்கவேண்டும்.

சட்டரீதியான ஆவணங்கள் தொடர்பாக உரியவர் அல்லது அவரால் முறையாக அதிகாரமளிக்கப்பட்டவரே விண்ணப்பிக்க முடியும். அவ்வாறு இல்லாதபோது அந்த விண்ணப்பத்தின் பேரில் நடவடிக்கை எடுக்க முடியாது. உரியவர் வெளிநாட்டில் இருக்கையில் இங்குள்ள எவராவது ஒருவர் அவருடைய பெயரை மாற்ற அல்லது பிறப்பைப் பதிவு செய்ய விண்ணப்பிக்கின்றனர். அவ்வா றான சந்தர்ப்பத்தில் அவருடைய விண்ணப்பம் நிராகரிக்கப்படுகிறது. உரியவர் நேரில் சமுகமளிக்கும்போது அவருடைய விண்ணப்பம் சட்டரீதியான தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யும் பட்சத்தில் அனுமதிக்கப்படும்.

கிடைக்கின்ற எல்லா விண்ணப்பங்களும் அனுமதிக்கப்பட முடியாதென்பதை எவரும் இலகுவில் புரிந்து கொள்ள முடியும். பிறப்பு இறப்புச் சான்றிதழ்களைப் பதிவுசெய்தல் மற்றும் பெயர்மாற்றம் திருத்தங்கள் என்பன சட்டரீதியானவை. அவற்றைச் சட்டதிட்டங்களுக்கு அமைவாகவே மேற்கொள்ள முடியும். உதாரணமாக ஒருவர் தனது பெயரை மாற்ற முற்படின் பத்திரிகையில் விளம்பரம் செய்து ஒரு வருடகாலம் உபயோகித்து அதன் பின்னரே பெயரை மாற்றம் செய்துகொள்ள முடியும். வெளிநாடு செல்ல முற்படும் அல்லது சென்ற பலர் வேறு ஒருவருடைய பெயரை சான்றிதழை அல்லது கடவுச்சீட்டை உபயோகித்து அல்லது மோசடி செய்து வெளிநாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்கின்றனர். பின்னர் அந்த விவரங்களைத் தமது சான்றிதழ்களில் உட்புகுத்திக் கொள்ள முயல்கின்றனர். இவ்வாறான காரணங்களால் விண்ணப்பம் அனுமதிக்கப்படாமல் நிராகரிக்கப்படும்போது முரண்படுகின்றனர்.





உரிய வகையில் பெறப்படுகின்ற விண்ணப்பங்கள் காலக்கிரமத்தில் அனுமதிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்படும். குறைபாடுகளுடன் பெறப்படுகின்ற விண்ணப்பங்கள் திருப்பி அனுப்பப்பட்டு குறைபாடுகள் நிவர்த்திக்கப்பட்டு அனுப்பப்படும்போது அனுமதிக்கப்படும். இதன்போது காலதாமதம் ஏற்படுவது தவிர்க்கமுடியாதது.

அனுமதிக்கப்பட்ட விண்ணப்பங்களை விண்ணப்பதாரிகளின் கையில் கொடுத்தனுப்ப முடியாதென்பதை நிர்வாக நடைமுறை தெரிந்தவர் அறிவர். மேலும் புதன்கிழமை பொதுமக்கள் சந்திப்புத் தினமாக அரசினாலேயே நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**- உதவிப் பதிவாளர் நாயகம், வடக்கு வலயம்.**

## கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

## மீனவர்கள் விடயத்தில் விளையாடும் அரசியல்

மீனவர் பிரச்சினை இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் தீர்க்கமுடியாத பிரச்சினையாக மாறிவருகிறது. இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்துவதற்கு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது அவசியமாகும். இரு நாடுகளினதும் மீனவர் சங்கங்கள்மூலம் பிரச்சினையைத் தீர்க்க முயற்சிப்பது நிரந்தரமான ஒரு தீர்வைத் தராது. இரு நாட்டு அரசுகளும் பேச்சு நடத்தி தீர்வுகாண முயற்சிப்பது அவசியமாகும்.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலங்கை-இந்திய அரச மட்டத்தில் பேச்சுக்ள் நடைபெற்றுள்ளன. இரு நாடுகளின் மீனவர் சங்கங்களுக்கிடையிலும் பேச்சுகள் நடைபெற்றுள்ளன. வடபகுதி மீனவர் சங்கப் பிரதிநிதிகளை கொழும்புக்கு அழைத்து அரசு பேச்சு நடத்தியுள்ளது. ஆனால், முடிவு பூச்சியம்தான்.

இந்திய மீனவர்கள் வடகடலில் அத்துமீறி வந்து மீன் பிடிப்பதால் வடபகுதி மீனவர்கள் பெரும் இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர். அவர்களது வாழ்வாதாரப் பிரச்சினை இது. கைதாகும் இந்திய மீனவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். பறிமுதல் செய்யப்படும் அவர்களது படகுகளை இலங்கை அரசு எக்காரணம் கொண்டும் திருப்பிக் கொடுக்கக்கூடாது. அவர்களுக்கு பெருந்தொகைப் பணத்தை அபராதமாக விதித்து சிறையில் அடைக்கவேண்டும். இப்படியான கடுமையான செயற்பாடுகள் மூலமே அவர்களது ஊடுருவலைத் தடுக்கமுடியும் என்கின்றனர் வடபகுதி மீனவர்கள். கடந்த 23ஆம் திகதி கொழும்பில் மீன்பிடித்துறை அமைச்சருடனான சந்திப்பின்போதும் இதனையே வடபகுதி மீனவர்கள் வலியுறுத்தினர்.

ஆனால், இந்தப் பிரச்சினையால் இந்தியாவுடனான உறவு பாதிக்கப்படக்கூடாது என்பதில் இலங்கை அரசு கூடுதல் கவனம் செலுத்திவருவது தெரிகின்றது. கடுமையான நடவடிக்கை எதனையும் தற்பொழுதுள்ள சட்டதிட்டங்களின் அடிப்படையிலேயே மேற்கொள்ள முடியும். அத்துமீறும் மீனவர்களுக்குப் பெருந்தொகைப் பணத்தை அபராதமாக விதிப்பதாக இருந்தாலும்கூட அதற்கும் சட்டத்தில் மாற்றம் தேவை.

இலங்கை மீனவர்களைப்போன்று இந்திய மீனவர்களும் தமது வாழ்வாதாரப் பிரச்சினையாக இதனைக் கருதுகின்றனர். அதனால்தான் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாதிருக்கிறது. எத்தனை சந்திப்புகள், கலந்தாலோசனைகள் நடைபெற்றாலும் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடிப்பதை நிறுத்துவதாக இல்லை. நேற்றுமுன்தினம் இரவும் காங்கேசன்துறை, தலைமன்னார், நெடுந்தீவு கடற்பகுதிகளில் ஊடுருவி மீன் பிடித்தலில் ஈடுபட்டிருந்தபோது 34 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பயன்படுத்திய ஏழு ட்ரோலர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இவர்களை விடுவிக்கும்போது இவர்களது படகுகளையும் இவர்களிடம் ஒப்படைப்பது சட்டவிரோத நடவடிக்கைக்கு ஊக்கம் அளிப்பதாகும்.

அநுராதபுரம், வவுனியா, புத்தளம் சிறைகளில் உள்ள இந்திய மீனவர்களை இலங்கை அரசு விடுதலை செய்துள்ள சமயம், இந்திய மீனவர்கள் தொடர்ந்தும் இலங்கைக் கடற்பரப்பில் தமது சட்டவிரோத மீன்பிடித்தலைத் தொடர்வதை அவதானிக்கும்போது இலங்கை அரசின் எந்தவொரு மனிதாபிமான நடவடிக்கையும் இந்திய மீனவரின் சட்டவிரோத நடவடிக்கையைக் கட்டுப்படுத்தாது என்பது தெளிவாகிறது.

இந்தப் பிரச்சினை இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவில் மட்டுமல்லாது, அ.தி.மு.க. தலைமையிலான தமிழ்நாடு மாநில அரசுக்கும், மோடி தலைமையிலான மத்திய அரசுக்கும் இடையிலான உறவில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதால் மோடி அரசு முன்னுரிமை வழங்கி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944

விளம்பரம் : 021-493 1111

விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அரசியற் சாயங்களைப் பூசி "பூமராங்" வீசாதீர்

இந்த நாட்டில் போர்க் காலத்தில் இடம்பெற்ற பாதிப்புக்கள் குறித்த விசார ணைகள் முடிவடைவதற்கு ஐந்தாறு வருடங் களோ, அதற்கும் அதிகமான காலமோ எடுக் கக்கூடும்--

அத்தகைய ஒரு களநிலையில், போரால் பாதிப்புற்ற மக்களின் வாழ்க்கையை சுமுக நிலைக்குக் கொண்டு வருவது உடனடித் தேவையாகும். அதற்கான செயற்பாடுகளை விரைந்து மேற்கொள்வது அவசியமும் தவிர்க்க முடியாததும் ஆகும்--

இவ்வாறு கருத்துத் தெரிவித்திருக்கிறார், யாழ்.மறை மாவட்டத்தின் புதிய ஆயர், பேரருட் கலாநிதி ஜஸ்ரின் பேணாட்.

வலிகாமம் மக்கள், போரின் அகோரத்தால் தமது இல்லிடங்களில் இருந்து இடம்பெயர்ந்து, வீதிகளிலும், அகதி முகாம்களிலும் வாழ்ந்த அவல நிலையைத் தாம் நேரில் கண்டுள்ளதாகவும், இந்த மாதம் முற்பகுதியில் கொழும்பில் தங்கியிருந்த வேளையில், மேற்கண்ட கருத்துக்களை அவர் மிகுந்த மனவருத்தத்துடன் தெரிவித்தார்.

கொழும்பு சென்றிருந்த வேளை, ஊடகவியலாளர் அவரைச் செவ்வி கண்டிருந்தபோதே மேற்போந்தவற்றை அவர் வெளிப்படுத்தினார்.

போரினால், பாதிப்புற்ற மக்களுக்குப் புனர் வாழ்வு, மீள்குடியேற்றம், வீட்டுத்திட்டங்கள் மற்றும் வாழ்வாதாரங்களை, காலத்தை வீணடிக்காமல், அவற்றுக்கான தீர்வுகளை பெற்றுக்கொடுப்பது மிக அவசியம் என்றும் சுட்டிக்காட்டி உள்ளார் யாழ். ஆயர்.

புதிய ஜனாதிபதியும், புதிய அரசும் ஆட்சிக் கட்டில்களில், அதிகார பீடங்களில் அமர்ந்து வாரங்கள் பலப்பல கடந்து ஏகிவிட்டன. ஆனால் போரால் பாதிப்புற்ற தமிழ் மக்கள் இன்னமும் இல்லிடங்களையும் வாழ்வாதாரங்களையும் இழந்து அல்லாடிக் கொண்டிருக்கின்றனர்.

அவர்களின் அனாதரவான நிலைமையை, விரைந்து போக்குவதற்கான பயன்தரு செயற்பாடுகள் மேலெழுவதைக் காண இயலவில்லை; கேட்கத் தானும் முடியவில்லை.

அவர்களைப் பீடித்துள்ள, பீடிக்க வாய்க்கால் வெட்டிய கொழும்பின் முந்தைய(மகிந்த) அரசைப் போன்றே, இப்போதைய மைத்திரி பால-ரணில் ஆட்சியாளரும், அவர்களது அவல நிலை குறித்துத் தெரிந்திருந்தும் தெரியாத பாவனையில் மெல்ல மெல்ல, அனுங்கிச் சிணுங்கி நாள்களை நகர்த்தும் கோலம் விரிகிறது.

போரினால் பாதிப்புற்ற மக்களின் மீள்குடியேற்றம், வீட்டு வசதி, வாழ்வாதாரங்களை முன்னேற்றுதல் ஆகிய உடனடித் தேவைகளை விரைந்து வழங்க வேண்டும்.

காலத்தை இழுத்தடிக்காமல், சாக்குப் போக்குகள் கூறாமல், உடனடித் தீர்வே இப்போதைய தேவை என்பதையும் ஆயர் விரிவாக எடுத்துக் காட்டி உள்ளார்.

அரசு அக்கறையுடன் செயற்பட்டால் மட்டுமே அவர்களுக்கு புதிய வாழ்வு கிடைக்க வழி பிறக்கும் என்றும் அவர் அழுத்திக் கூறியுள்ளார்.

எதிர்காலச் சந்ததியினருக்கு முறையான கல்வி, அதனூடான தொழில் வாய்ப்பு மற்றும் வாழ்வியல் தேவைகளை ஓட்டை, ஒழுக்குகள் இன்றி வழங்குவது அரசின் தவிர்க்க முடியாத கடமை.

கொழும்பு நடவடிக்கைகளால் அரசுகளின் வேண்டா வெறுப்பான போக்குகளால், தமிழர்களின் இரண்டு, மூன்று சந்ததிகள் பெரும் பின்னடைவுகளை அனுபவிக்க நேர்ந்தது. அந்த நிலை இனியும் தொடரியாகக் கூடாது.

மேற்போந்தவைக்கு, அரசியல் சாயங்களைக் கலந்துவிடாது, தமிழ் இளையோரை, இந்நாட்டுப் பிரசைகள், எதிர்காலப் பிரசைகள் என்று மனதிருத்தி செயற்படும் பெரும்பொறுப்பு இன்றைய அரசுக்கே உண்டு. அப்பழுக்கில்லாமல் செயற்படாவிடில், அதன் விளைவு, பூமராங் போன்று எய்தவர் பக்கமே திரும்பி வந்து தாக்கலாம் யார் கண்டார்.....!

வேறென்ன சொல்ல.....!



# அம்பாறை ஆர்ப்பாட்டம் உணர்த்துவது என்ன?

திருச்செந்தூரன்
திருகோணமலை

அண்மைக் காலமாக செய்தித்தாள்களில் அடிக்கடி வெளியாகும் செய்தி பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம். அதாவது அரச நியமனம் கோரி அவர்களது போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவது யாம் அறிந்ததே. அந்தப் பட்டதாரிகள் மேற்கொண்ட உணவு தவிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஒரு வரின் உருக்கமான கண்ணீர் கலந்த பேச்சு அனைவரையும் துன்பியல் கலந்த மனநிலைக்கு இட்டுச் சென்றது.

ஏன் இந்தப் பட்டதாரிகள் அரச வேலைக்காக படாதபாடுபடுகிறார்கள் என்ற கேள்வி எம்மனங்களில் ஒருமுறையென்றாலும் எழுந்திருக்கும் அல்லவா?

இது சிக்கலானதும்கூட. நாட்டின் உயர்கல்விக்கூடமான பல் கலைக் கழகத்தில் படித்தவர் களுக்கு வேலையில்லை. ஆனால் சாதாரண தரம் சித்தியடைந்தவர் தனியார் வங்கியில் பிராந்திய முகாமையாளராக முடிகிறது. இங்கு எவ்வகையான எதிர் விளையாட்டம் நிகழ்ந்திருக்கிறது? இதற்கு என்ன காரணம்? இவை பற்றிச் சிந்திக்க வேண்டிய காலப் பெருவெளியில் நாம் இருக்கிறோம்.

நாளுக்குநாள் உலக சனத்தொகை அதிகரித்துக்கொண்டிருக்கிறது. இன்று முதியோர் சனத்தொகை தெற்காசியாவில் பெரும் சவாலாக ஆகி, முதியோர் நலன்சார் பிரச்சினைகளும் ஒருபுறம் மேலோங்கி வருகின்றன. இவை ஒருபுற மிருக்க இளைய தலைமுறையினரின் பெருக்கமும் மேம்பட்டு வருகிறது. கல்வி என்பது என்ன என்ற சிந்தனை மரபு பற்றி ஆழமாக நோக்க வேண்டியுள்ளது. "மனிதனிடம் ஏலவே இருக்கும் அறிவை இன்னும் ஒருபடி மேம்படுத்துவது தான் கல்வி" என்றார் விவேகானந்தர்.

கல்வி, அறிவுக்காகக் கற்க வேண்டியதா? மனிதனை உன்னதப் படுத்துவதற்காகக் கற்க வேண்டியதா? அல்லது தொழிலைப் பெறுவதற்காகக் கற்கவேண்டியதா? இவையே எம் ஒவ்வொருவரினாலும் விடை காணப்பட வேண்டிய கேள்விகள். கல்வி இவையெல்லாவற்றுக்குமானதாக இருக்க முடியும் என்றாலும் அதில் எந்தப் பிரிவில் நாம் தோகசிபெறுகிறோம் என்பதும் முக்கியமானது.

எமது இனத்தவரைப் பீடித்திருக்கும் பிரதான நோய் அரச பணி நாட்டம். அரச பணி என்றால் ஓய்வூதியம் கிடைக்கும் என்ற ஒரு குறுகியமட்ட சிந்தனை மரபு எம்மினத்தவரைப் பீடித்து இருக்கிறது. அரச பணியில் சலுகைகள், சிறப்புரிமைகள் இருப்பது உண்மைதான். ஆனால் அனைவரும் அரச பணிதான் செய்ய வேண்டும் என விரும்பினால் அது இயலாத ஒன்றல்லவா? இன்னொரு விதத்தில் சொல்லப் போனால் ஒரு பணியைச் செய்ய இருவர் தேவைப்படுமிடத்து இருபது பேரை நியமித்துவிட்டு அரசு என்ன செய்வது என்பதைப் பற்றி நாம் என்றாவது சிந்தித்திருக்கிறோமா?

இன்றைய உலகத்தை ஆள்வது முதலாளித்துவம். ஓர் அரச நிறுவனத்தை இயக்குவது பொருளாதாரக் கட்டமைப்புள்ள முதலாளிச் சக்திகள் என்பதை எவரும் மறுத்துவிடமுடியாது. எமது இன்றைய ஜனாதிபதியின் வெற்றியில்கூட பெரும்பாலான வர்த்தக சக்திகளின் ஆதிக்கம் இருந்ததை எவரும் நிராகரிக்க முடியாது. எனவே தனியார், பல்தேசிய கம்பனிகள் அரச கட்டமைப்பைக் காட்டிலும் மிகவும் துரிதமாக வளர்ந்து வருவதைப் பட்டதாரிகளும் புரிந்துகொள்ளவேண்டும். அதிலும் தமிழ்ப் பட்டதாரிகள் புரிந்துகொள்ள வேண்டும்.

இன்று தனியார் நிறுவனங்களில், குறிப்பாக வடக்கில் உள்ள தனியார் நிறுவனங்களில் உயர் நிர்வாகப் பதவிகளில் இளைஞர்களுக்குப் பெரும் பற்றாக்குறை காணப்படுகிறது. ஆனால் இந்த இடங்களை நிரப்புவதற்குப் பட்டதாரிகள் தயாராக இல்லை. அதே நேரத்தில் தமது கல்வித் தகைமைக்கு குறைந்த தரமுள்ள அரச எழுது விணைஞர் சேவை போன்றவற்றில் இணைந்துகொள்வதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள்.

தனியார் நிறுவனங்கள் அறிவைவிடத் திறன்களை அதிகம் எதிர்பார்க்கின்றன என்பது உண்மைதான். எமது பட்டதாரிகளோ புத்தக அறிவுக்கு அப்பால் திறன்களை வளர்த்துக்கொள்வதில்லை. தனியார் நிறுவனங்களுக்கும் பட்டதாரிகளுக்கும் இடையிலான இடைவெளி இதனால்தான் அதிகரிக்கின்றது.

பட்டதாரிகளிடம் உயர் தொழில்நுட்ப அறிவு உண்டு. ஆனால் அவற்றைப் பிரயோகிக்கும் ஆற்றல், பகுப்பாய்வுத்திறன், மனிதத் தொடர்புத் திறன் என்பன அவர்களிடம் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. ஆனால் தனியார் நிறுவனங்களோ மேற்குறித்த திறன்களை பட்டதாரிகள் மற்றும் இளைஞர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றன என்பதை இலங்கைத் தனியார் துறையினர் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

ஆங்கிலமொழித் தேர்ச்சி, தகவல் தொழில்நுட்பத் தேர்ச்சி, சிறந்த தொடர்பாடல் திறன், தலைமை தாங்கும் திறன், குழுவில் சுமுகமாகப் பணியாற்றும் திறன், பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன், புத்தாக்கத்திறன், புத்தாக்கச் சிந்தனை, இடர்களை எதிர்நோக்கும் ஆற்றல், புதிய கருத்துக்களை ஏற்கும் மனப்பாங்கு என்பவை அந்தப் பட்டியலில் முக்கியத்துவம் பெறுகின்றன.

இவை யாவும் பட்டதாரிகளாக இருக்கக்கூடிய ஒவ்வொருவரிடமும் இருக்கிறதா? என்பதைச் சுயபரிசோதனை செய்துகொள்ள வேண்டும். அரச பணியில் இருந்து சோம்பலாகப் பணி யாற்ற விரும்புபவர்கள் பலர். இவர்கள் து[illegible]யாட்டமாகப் பணியாற்ற தனியார் துறையில் இணைந்து பணியாற்றி தமது திறன்களை வளர்க்குமிடத்தில் காலப்போக்கில் ஒரு பெறுமதி மிக்க வளமாக மாறுமிடத்தில் அரசே தாமாக இவர்களைப் பணிக்குள் உள்ளீர்த்துக்கொள்ளும். அரசு மக்களின் நிறுவனம். தனியார் ஒருவரின் நிறுவனம் கம்பனிகள். ஒப்பீட்டளவில் இரண்டும் ஒன்றே என்பதை நாம் சிந்திக்கத் தலைப்பட வேண்டும்.

ஊடகத்துறை, சுற்றுலாத்துறை, மருத்துவத்துறை, காப்புறுதித் துறை, நிதி நிறுவனத்துறை என்று இவ்வாறு ஒவ்வொரு தனியார் துறைகளினுள்ளும் ஏராளமான வேலை வாய்ப்புக்கள் கொட்டிக் கிடக்கின்றன.

தத்தமக்கு ஆர்வமுள்ள துறைகளில் தம்மை ஈடுபடுத்தி முழுமூச்சோடு பணியாற்றி உச்சக்கட்ட ஊதியத்தையும் சிறப்பு வசதிகளையும் பெற்றுத் தமது குடும்பத்தினது மட்டுமல்லாது தனது சமூகத்தின் விடிவெள்ளியாக எழுவதே பட்டதாரிகளின் இலட்சியமாக இருக்க வேண்டுமே தவிர, இவ்வாறு தொடர்ந்தும் அரச பணிகளை எதிர்பார்த்து பட்டதாரிகளின் தரத்தைக் குறைத்துக் கொள்ளக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.ஈழத்தமிழ்மணி

# கைதிகளுக்குப் பிணைவேண்டாம் உடனடி விடுதலையே அவசியம்

தமிழ் அரசியல் கைதிகளின் உணவு தவிர்ப்புப் போராட்டம் கொழும்பு அரசுக்கு நெருக்கடியைக் கொடுத்திருந்தது. இலங்கைச் சிறைச்சாலைகளில் நீண்டகாலமாக வழக்குகள், விசாரணைகள் இன்றியும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படாமலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் தங்களைப் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்குமாறு கோரி 12 ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் வரை உணவு தவிர்ப்புப் போராட்டத்தை சிறைச்சாலைகளில் மேற்கொண்டிருந்தனர்.

போராட்டம் சிறைகளுக்குள்ளேயே நடைபெற்றுக் கொண்டிருக்கையில் வடக்கு - கிழக்கு மற்றும் கொழும்பு மாவட்டங்களில் அந்தப் போராட்டத்துக்கு ஆதரவான போராட்டங்கள் உறவுகளாலும், ஏனைய அமைப்புகளாலும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன.

அரச தரப்பில் ஒரு சில அமைச்சர்கள் தமிழ் அரசியல்கைதிகள் விடயத்தில், தமிழ் அரசியல்கைதிகள் என்று ஒருவருமில்லை என்றவாறு கண்மூடித்தனமாகவும், பொறுப்பற்ற முறையிலும் பதிலளித்திருந்தாலும், அரசு இந்த விடயத்தில் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டிய நெருக்கீட்டை இந்தப் போராட்டம் ஏற்படுத்தியது.

நீதி அமைச்சர் உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் நேரடியாகச் சென்று தமிழ் அரசியல்கைதிகளைப் பார்வையிட்டிருந்தனர். ஆறு நாள்வரையில் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டிருந்ததால் பல கைதிகளின் உடல் நிலை மோசமாகிக் கொண்டிருந்தாலும் அவர்கள் தங்களது கொள்கையில் உறுதியாகவே இருந்தார்கள்.

தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் சாதாரண பிரச்சினையல்ல. பத்துவருடம் முதல் 20 வருடங்கள் வரையில் வார்த்தைகளில் சொல்ல முடியாத துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருப்போர் அவர்கள். ஜனவரி எட்டாம் திகதிக்குப் பின்னர் நாட்டில் நல்லாட்சி ஏற்பட்ட பின்னர் தங்களது விடுதலை சம்பந்தமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சாதகமான முடிவை எடுப்பார் என நம்பியிருந்தார்கள். விடுதலை சாத்தியமாகாத நிலையிலேயே சாகும் வரை உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

தம்மைச் சந்தித்த அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பல கேள்விகளையும் முன்வைத்திருந்தனர். நீதி அமைச்சரான விஜயதாச ராஜபக்ச தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்களின் மனதையும் நோகடித்திருந்தார். உணவு தவிர்ப்பை மேற்கொண்ட தமிழ் அரசியல் கைதிகளை கொலை, கொள்ளைகளில் ஈடுபட்டவர்களாகவே காட்டிக்கொள்ள முயன்றிருந்தார். என்றாலும் நீதி அமைச்சர், இந்த வருடத்துக்குள் தீர்வு காணப்படுமெனக் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் எழுத்து மூல உத்தரவாதத்தையடுத்து தமிழ் அரசியல் கைதிகளின் உணவு தவிர்ப்புப் போராட்டம் முடிவுக்கு வந்தது. 20 முதல் 30 தமிழ் அரசியல் கைதிகள் தவிர ஏனைய அனைவரும் விடுதலை செய்யப்பட்டு விடுவார்கள். இதில் எமக்கு எந்தவிதச் சந்தேகமுமில்லை. நாம் ஜனாதிபதியை முழுமையாக நம்புகின்றோம் என எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் கூடத் தெரிவித்திருந்தார்.

ஆனால், இப்போது மீண்டும் பூதம் வெளிக்கிளம்ப ஆரம்பித்துள்ளது. கைதிகளுக்கு விடுதலையோ பொது மன்னிப்போ கிடையாது, அவர்களுக்குப் பிணைதான் வழங்கப்படும் என்று கொழும்பு அரசு கூறுகின்றது. இது இந்தப் பிரச்சினையை மேலும் தணியாது வைப்பதற்குப் போதுமானதாக இருக்கிறது. புதிய அரசு பதவியேற்றபோது தமிழ் அரசியல் கைதிகளிடையே தமது விடுதலை தொடர்பில் அரசு மீது ஒரு நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. ஆனால் அந்த நம்பிக்கையை வைப்பதற்கு அரசு தவறிவிட்டது. ஜனவரி எட்டாம் திகதிக்குப் பின்னர் - ஆட்சிமாற்றம் ஏற்பட்ட பின்னர் - ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நல்லெண்ண அடிப்படையில் சுமார் பத்துத் தமிழ் அரசியல் கைதிகளை விடுவித்திருக்கலாம்.




அப்படி விடுவிக்கப்பட்டிருந்தால் தமிழ் அரசியல் கைதிகள் ஜனாதிபதி மீது அந்த நம்பிக்கை கொண்டிருப்பர். நல்லாட்சிக்கும் மதிப்புயர்ந்திருக்கும். ஆனால் அது நடக்கவில்லை.

இந்த நிலையில் பொதுத் தேர்தல் வந்த போது, அரசியல் கைதிகள் விவகாரம் மீண்டும் முதன்மையான பேசுபொருளானது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் மற்றும் முன்னாள் அமைச்சர்களான சுவாமிநாதன், விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் இந்த விவகாரம் குறித்து மேடைக்கு மேடை பேசினார்கள். தேர்தலின் போது கைதிகளை விடுவித்தால் அது நல்லிணக்க அரசின் வெற்றியைப் பாதித்துவிடக்கூடும் என்பதாகச் சொல்லப்பட்டு தேர்தல் முடிவு வெளிவரும் வரை இந்த விடயம் பின் தள்ளப்பட்டது. ஆனாலும் அதன் பின்னரும் கைதிகள் விடுவிக்கப்படவில்லை. பொதுத் தேர்தலும் நடைபெற்று இரண்டு மாதங்களாகிவிட்ட நிலையில் தங்களின் விடுதலை சம்பந்தமான விவகாரத்தை அரசு தட்டிக் கழிக்கப்போகின்றது. முன்னைய ஜனாதிபதியான மகிந்த அரசு காலத்தில் தங்களது போராட்டங்களை முறியடித்ததுபோல், எந்தவித நடவடிக்கையையும் எடுக்காது உதாசீனம் செய்தமை போல் மைத்திரி அரசும் தங்கள் மீது அக்கறைகொள்ளாதிருக்கின்றது என்பதையுணர்ந்த தமிழ் அரசியல் கைதிகள் நல்லாட்சியிலும் நல்லது செய்யமாட்டார்களா? என்ற மனக்கொதிப்போடு விடுதலை அல்லது சாவு என்ற உறுதிமொழியெடுத்துக்கொண்டு உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் குதித்திருந்தனர்.

ஜனாதிபதி மைத்திரி எழுத்து மூலம் அறிவித்த பின்னர் அந்த வாக்குறுதியை நம்பி உணவு தவிர்ப்புப் போராட்த்தைக் கைவிட்டிருந்தனர். ஆனால், அவர்களுக்குப் பிணைதான் வழங்கப்படும் என்கிற முடிவு அவர்களின் போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றியாகாது. பிணைகேட்டு அவர்கள் போராடவில்லை. பிணை வழங்கப்பட்டால் கைதிகள் தொடர்ந்தும் வழக்குகளுக்காக நீதிமன்றங்களுக்கு அலைய நேரிடும். அதிலும் பெரும்பாலான அரசியல் கைதிகள் வடக்கு - கிழக்கைச் சேர்ந்தவர்களாக இருக்க, அவர்கள் மீதான வழக்குகள் அநேகமாகக் கொழும்பிலேயே நடைபெறுகின்றன. இத்தகைய நிலையில் அவர்களுக்குப் பிணை மட்டும் வழங்குவதென்பது இந்த விவகாரத்தை மேலும் சிக்கலாக்கும்.

“ ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் எழுத்து மூல உத்தரவாதத்தையடுத்து தமிழ் அரசியல் கைதிகளின் உணவு தவிர்ப்புப் போராட்டம் முடிவுக்கு வந்தது. 20 முதல் 30 தமிழ் அரசியல் கைதிகளைத் தவிர ஏனைய அனைவரும் விடுதலை செய்யப்பட்டுவிடுவார்கள். இதில் எமக்கு எந்தவிதச் சந்தேகமுமில்லை. நாம் ஜனாதி பதியை முழுமையாக நம்புகின்றோம் என எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் கூடத் தெரிவித்திருந்தார்.

வழக்குத் தாக்கல் செய்யப்படாமல் தமிழ் அரசியல் கைதிகளை நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்பதால், ஏற்கனவே அவர்கள் பாதிக்கால வாழ்க்கையை இழந்துள்ளனர். அவர்களது உறவுகள் வேதனைகளுக்கும், அவலத்துக்கும் உள்ளாகியிருக்கின்றனர். இரு பகுதியினரின் மன நிலையும் பாதிக்கப்பட்டே உள்ளன. தங்களது எஞ்சிய காலத்திலாவது தமது உறவுகளோடு சேர்ந்துவிடவேண்டும், மைத்திரி அரசின் காலத்தில் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும், என்று எதிர்பார்த் திருந்த கைதிகளுக்கு பிணை மட்டுமே வழங்கப்படும் என்ற கொழும்பு அரசின் முடிவு பெரும் ஏமாற்றமாகியுள்ளது. ஆனால், விடுதலை இல்லை என்ற ஏக்கப் பெருமூச்சும், கண்ணீரும், வேதனையும் தொடரத்தான் போகின்றன என்பதைக் கட்டியங்கூறுவதாகவே அரசின் அறிவிப்பு உள்ளது.

விசாரணைகள் இல்லாமலேயே தடுத்து வைக்கப்பட்டு நீண்டகால சிறைத் தண்டனையை நீதிமன்றத் தீர்ப்பின்றியே அனுபவித்துவிட்டோம். போதுமடா சாமி, எங்களை விடுங்கள் அதுவே நல்லாட்சிக்கு எடுத்துக் காட்டு என உணவு தவிர்ப்புப் போராட்டத்தின் மூலம் மைத்திரி அரசுக்கு எடுத்துச் சொல்லியும்கூட, அரசு இவ்வாறு நடந்துகொள்வது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. இதனை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனும்கூடத் தெளிவுபடுத்தியிருக்கிறார். கைதிகளுக்கு விடுதலைதான் தரப்படவேண்டுமே தவிர பிணை அல்ல என்று அவர் கூறியிருக்கிறார்.

உணவு தவிர்ப்புப் போராட்டம் மீண்டும் தமிழ் அரசியல் கைதிகளால் முன் னெடுக்கப்படுகின்ற நிலையைத் தடுக்க வேண்டுமானால், எதிர்க்கட்சித் தலைவர் கூறியது போல் 20, 30 பேரைத் தவிர சுமார் 175 க்கும் மேற்பட்டவர்களை அரசு உடனடியாகப் பொதுமன்னிப்பு அளித்து விடுவிக்க வேண்டும். அதுவே இந்தப் பிரச்சினை தீர்வதற்கான ஒரே வழி.

இதற்குக் கூட்டமைப்பு காத்திரமான நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக எடுக்க வேண்டும். ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 16 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்தது மட்டுமன்றி நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் தனதாக்கிக் கொண்டது. எதிர்க் கட்சித் தலைவர் என்ற பலத்தோடு, இருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கின்ற உடன் நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்க வேண்டும். அதற்கான அழுத்தத்தையும் அரசுக்குக்கொடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 | 7 | 2 |
| | 6 | 9 | | | | | | |
| | | | | | 4 | | 8 | |
| | | 3 | 4 | | | 7 | 9 | |
| | | | | | 8 | 6 | | |
| 2 | 8 | 7 | | 3 | | | 5 | |
| | | 1 | | | | | | |
| 5 | | | | | 9 | 3 | | |
| | 9 | | | | | 3 | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8 | 5 | 9 | 2 | 3 | 4 | 7 | 6 |
| 2 | 7 | 9 | 6 | 8 | 4 | 3 | 5 | 1 |
| 4 | 6 | 3 | 5 | 7 | 1 | 2 | 8 | 9 |
| 6 | 2 | 4 | 1 | 3 | 8 | 7 | 9 | 5 |
| 5 | 3 | 1 | 7 | 9 | 2 | 8 | 6 | 4 |
| 8 | 9 | 7 | 4 | 5 | 6 | 1 | 3 | 2 |
| 7 | 1 | 6 | 3 | 4 | 5 | 9 | 2 | 8 |
| 3 | 4 | 8 | 2 | 6 | 9 | 5 | 1 | 7 |
| 9 | 5 | 2 | 8 | 1 | 7 | 6 | 4 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### வீணான மயக்கங்களை உதறித் தள்ளுங்கள்

கர்மயோகம் என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். ஒருவருக்கு அவர் யார், எப்படிப்பட்டவர் என்ற சிந்தனையோ கேள்வியோ இல்லாமல் கூட, அவருக்கு உங்களால் முடிந்த உதவிகளைச் செய்வது தான் கர்மயோகம்.

சிங்கங்களே! எழுந்து வாருங்கள். வீணான மயக்கங்களை உதறித்தள்ளுங்கள். நீங்கள் சுதந்திரமானவர்கள். அழியாத பேரின்பத்தின் பங்குதாரர்கள்.

பலவீனத்துக்கான பரிகாரம், அந்த பலவீனத்துக்கான காரணம் குறித்துச் சிந்திப்பதல்ல. மாறாக வலிமையைக் குறித்து சிந்திப்பது தான்.

## உடல் பலம் அளிக்கும் பயறு வகைகள்



மனித உடலுக்கு பயறு வகைகள், அதிக பலம் அளிக்கின்றன. பயறு வகைகளில் பாசிப்பயறு, நரிப் பயறு, காராமணி, தட்டைப் பயறு, பயற்றங்காய், மொச்சைப் பயறு போன்றவை சத்து நிறைந்தவை ஆகும். பாசிப் பயற்றுக்கு, பயத்தம் பருப்பு, பாசிப்பருப்பு என்ற பெயர்களும் மக்களிடம் பேச்சு வழக்கில் உள்ளன. தெற்காசியாவைப் பூர்வீகமாகக் கொண்ட இந்தப் பயிர், தமிழர் சமையலிலும் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது. கொழுக்கட்டை உள்ளிட்ட உண்ணும் பொருள்கள், இந்தப் பயற்றைப் பயன்படுத்தியே செய்யப்படுகின்றன. இது, முளைக்க வைத்தும் சமைக்கப்படுவதுண்டு. கஞ்சியிலும் இது சேர்க்கப் படுவதுண்டு. நன்கு முதிர்ந்த பயறு வகைகளில் தான் அதிகச் சத்துக்களும், குறைவான ஈரப்பதமும் காணப்படுகின்றன. தானியங்களில் சிறந்த உணவுச் சத்து கொண்டது பயறு என்றால், அது மிகையல்ல. முதிராத காய்களில் புரதம் குறைவாகவும், விற்றமின், மாச்சத்து ஆகியவை அதிகமாகவும் காணப்படும். ஆனால்முதிர்ந்த பயறு வகைகளில் 20 சதவிகிதம் புரதச்சத்தும் 60 சதவிகிதம் காபோவைதரேட் என்னும் மாவுச் சத்தும் காணப்படுகின்றன. அதிலும் சோயா பயற்றில் 48 சத விகிதம் புரதமும், 30 சதவிகிதம் மாவுச் சத்தும் காணப்படுகின்றன. பயறு வகைகள் அனைத்தும் சத்தானவையே.

(தொடரும்)

## நம்பிக்கையை ஒரு போதும் தளர விடாதீர்!

இறைவன் மீது அன்பை விருத்தி பண்ணு, நீ கஷ்டங்கள் மத்தியில் இருக்கும் போதும் நம்பிக்கையைத் தளர விடாதே. இன்பம் துன்பம், நயம், நட்டம், சந்தோசம், துக்கம் இவையெல்லாம் ஆண்டவனின் பிரசாதம்- அவன் சித்தம். கருணை என்று எண்ணிக் கொள். எந்தச் சந்தர்ப்பத்திலும் அவன் நாமத்தை உச்சரிக்க மறந்து விடாதே. இறை நாமமே வாழ்க்கை எனும் ஆற்றைக் கடந்து செல்வ தற்கு நம்பகமான தோணியாகும்.



சாயி சிந்தனை




| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | – | 40 | 60 | 60 | 60 | 60 | 30 |
| கத்தரி | 90 | 80 | 100 | 100 | 80 | 90 | 80 | 50 |
| கரட் | 70 | 80 | 60 | 80 | 60 | – | 100 | 100 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 40 | 40 | 40 | 50 | 30 |
| பயிற்றை | 100 | 80 | 80 | 100 | 120 | 140 | 100 | 80 |
| பாகல் | 200 | 160 | 200 | 160 | 180 | 200 | 110 | 140 |
| கருணைக்கிழங்கு | 80 | 70 | 80 | 70 | 60 | 100 | 120 | 70 |
| பெ.வெங்காயம் | 130 | 140 | 120 | 140 | 130 | 180 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 120 | 140 | 120 | 200 | 100 | 120 |
| பூசணி | 40 | 40 | 50 | 50 | 40 | 60 | 50 | 40 |
| தக்காளி | 120 | 120 | 80 | 100 | 120 | 160 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 50 | 70 | 80 | 60 | 35 |
| கீரை | 30 | 50 | 40 | 10 | 30 | 40 | 30 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 30 | 30 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 400 | 260 | 300 | 260 | 360 | 300 | 250 | 250 |
| புடோல் | 60 | 80 | 60 | 60 | 80 | 60 | 60 | 60 |
| கோவா | 100 | 110 | 80 | 80 | 100 | 160 | 100 | 50 |
| வெண்டி | 120 | 70 | 100 | 100 | 120 | 80 | 50 | 40 |
| போஞ்சி | 160 | 140 | 180 | 140 | 160 | 200 | 160 | 140 |
| லீக்ஸ் | 300 | 100 | 100 | 80 | 100 | 120 | 80 | 60 |
| தேங்காய் | 50 | 50 | 50 | 60 | 60 | 30 | 35–40 | 35 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 110 | 110 | 120 | 130 | 100 | 120 |
| தேசிக்காய் | 400 | 300 | 400 | 320 | 320 | 600 | 200 | 300 |
| வல்லாரை | 25 | 20 | 10 | 10 | 40 | 20 | 15 | 10 |
| கறிமிளகாய் | 120 | 150 | 120 | 140 | 220 | 200 | 120 | 170 |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | – | 80 |
| முருங்கைக்காய் | 140 | 80 | 120 | 60 | 140 | 200 | 120 | 120 |




| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 600 | 600 | 800 | 500 | 500 |
| நண்டு | 300 | 400 | 200 | 400 | 300 | 400 |
| கணவாய் | 500 | 600 | 400 | 600 | 500 | – |
| பாரை | 100 | 500 | 350 | 500 | 500 | 350 |
| சுறா | 400 | 500 | 350 | 700 | 500 | 400 |
| சீலா | 250 | 400 | 300 | 400 | 350 | 250 |
| விளை | 400 | 400 | 260 | 450 | 400 | 300 |
| முரல் | 250 | 300 | 250 | 350 | 300 | – |
| கும்பிளா | 250 | 300 | 200 | 400 | 200 | 200 |
| கிழாக்கன் | 350 | 800 | – | 500 | – | – |
| ஓரா | 300 | 300 | 220 | 400 | – | – |
| திரளி | 200 | 200 | 150 | 300 | 200 | 150 |
| நகரை | 150 | 200 | 100 | 300 | – | 200 |
| சூடை | 150 | 100 | 50 | 100 | 50 | – |
| ஒட்டி | 200 | 150 | 180 | 300 | 200 | 150 |
| திருக்கை | 150 | 300 | 150 | 250 | – | 100 |
| பாலை | 300 | 250 | – | 450 | 250 | – |
| வாழை | 100 | 100 | 150 | 350 | 200 | 100 |
| கொய் | 100 | 100 | 40 | 120 | 50 | – |
| மதனம் | 150 | 200 | 130 | 280 | 300 | 100 |

## நாளை

**ஐப்பசி-13**
**வெள்ளிக்கிழமை**
**30.10.2015**


**திதி:**
திருதியை பி.ப. 12.40 வரை

**நட்சத்திரம் :**
ரோகினி மு.இ. 9.43வரை

[illegible]

**இராகு காலம்:**
10.33–12.03வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாடி சோதிடம்

*(குரு இராசி செவ்வாய் இராசியுடன் பரிவர்த்தனை பெறுமானால் அதனது அஸ்தமன தோஷம் நீங்குவதாக நேற்றைய தொடரில் பார்த்தோம். அதன் தொடர்ச்சி பிரசுரமாகின்றது.)*

குருவின் அஸ்தமன தோஷம் நீங்குவதால் குரு தனது காரகத்துவ பலனைத் தரமுடியும். ஒரு பெண்ணின் சாதகமாகக் கொண்ட கிரகங்களை வரிசைப்படுத்தி எழுதுவோம். முதலில் உயிர் காரகனாகிய குருவும், ஆன்மகாரகனாகிய சூரியனும் ஒரு ராசியில் அடுத்தடுத்து நிற்பது ஒரு நல்ல சேர்க்கையாகும். அதன்படி சாதகர், சமுதாயத்தில் மதிப்பு, மரியாதை, அந்தஸ்து அதிகாரத்துடன் வாழவேண்டும். சாதகரின் தந்தை ஆன்மிக உணர்வு உள்ளவராக இருக்க வேண்டும். சாதகரது தந்தைக்கு சூரியன், உச்சம் பெற்ற உயிர் காரகனாக, குருவுடன் சேர்ந்து இருப்பதால் நீண்ட ஆயுளுடன் வாழ வேண்டும். ஆனால் அற்ப ஆயுளில் இறந்து விடுகிறார். காரணம் சூரியன் தனது பாதையில் முதலில் சாவைக் கொடுக்கும் கிரகமான ராகுவைத் தொடுகிறார். அதேபோன்று ராகுவும் முதலில் சூரியனைத் தொடுகிறார். அதன் காரணமாக அவர் அற்ப ஆயுசில் இறக்க நேரிடுகிறது.

**அடுத்து காரகக் கிரகமாகிய செவ்வாய் நிலையைப் பார்ப்போம்.**

சுக்கிரன் செவ்வாயைச் சென்று அடைய வேண்டுமானால் இடையில் உள்ள பகைக் கிரகங்களான சந்திரன் மற்றும் கேதுவைக் கடந்துதான் (பல சிக்கல்கள், எதிர்ப்புகள் பேரில்) அடைய முடியும். மேலும் இந்தச் செவ்வாய், ராகு, கேது அச்சுக்கு ஒருபுறமும், சுக்கிரன் மறுபுறத்திலும் இருப்பதால், அப்படியே திருமணம் நடந்தாலும் பிரிவினை ஏற்படும். திருமண வாழ்க்கை சரியாக அமையாது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. அடுத்து சகோதரன், செவ்வாய் சகோதரனைக் குறிக்கும். ஆக, சகோதரன் தூர தேசத்தில் இருக்கிறான் என எடுத்துக்கொள்ளலாம். ஆக, இந்தச் சாதகக் கட்டம், 15ஆம் மற்றும் 16ஆம் விதிக்கு ஒத்து வரும். பெண் சாதகம் ஜீவனகாரகன், சுக்கிரன் எனப் பார்க்கும். கேது, சுக்கிரன் உச்சம் பெற்று இருக்கிறார். அதே சமயம் வக்கிரம் பெற்று இருக்கிறார். சூரியன், சந்திரன், சனி ஆகிய கிரகங்கள் உச்சம் பெற்று இருந்தாலும் இந்தச் சாதகருக்கு அமைதியும் இல்லை, ஆனந்தமும் இல்லை. சாதகத்தில் தகப்பன் காரகன் சூரியன் உச்சம் பெற்றுத்தான் இருக்கிறார். ஆனால் 7 ஆம் வீட்டில் உள்ள சூரியனின் கொடிய பகைவனான சனி பலம் பெற்று நிற்கிறார். மேலும் சனிக்கு பகைக் கிரகமான செவ்வாயுடனும் சேர்ந்து சூரியன் நிற்கிறார். அதனாலேயே இந்தப் பெண்ணின் தந்தை முன் கோபக்காரராகவும், பல விரோதிகளை உடையவராகவும் இருப்பார், காரணம், செவ்வாய் தனது காரகத் தன்மை தோஷத்தை சூரியனுக்குத் தருவார். விரோதிக் கிரகமான சனி விரோதிகளை ஏற்படுத்திக் கொடுத்து விடுவார்.

சாதகரைக் குறிக்கும் சுக்கிரன் வக்கிர கதியில் உள்ளார். எனவே சுக்கிரன் புதனை நோக்கி நகருகிறார். புதன் நண்பனைக் குறிக்கும் காரகக் கிரகம். அத்துடன் காதலையும் குறிக்கும் கிரகம். எனவே, இந்தப் பெண் தனது நண்பனைக் காதலித்துத் திருமணம் செய்துகொள்வாள். அடுத்து சுக்கிரன், குரு பரிவர்த்தனை. இதன் காரணமாக ஆண் கிரகமான குருவுக்கும், பெண் கிரகமான சுக்கிரனுக்கும் தொடர்பு தரப்படுகிறது.

இதற்கு முன்பாக சுக்கிரன், புதன் இருந்த வீட்டுக்கு திரிகோணத்தில் இருப்பதால் இவர் சட்ட்பூர்வமான பிரிவினையை ஏற்படுத்திக்கொடுத்து விடுகிறார். ஜனன சாதகத்தில் சுக்கிரன் வக்கிர கதியில் இருப்பதால் நீசத்துக்கு வரும்போதும் வக்கிரமாகவே கருத வேண்டும். இதன் காரணமாக மேடத்தில் உள்ள செவ்வாய் என்ற கணவனை அடைகிறாள்.

அது மூன்றாவது திருமணம். இந்த இடத்தில் சூரியன் உச்சம் பெற்று இருப்பதால் அதிகார அந்தஸ்து உள்ள ஒருவரது உதவியால் செவ்வாயைக் கைப்பிடிப்பார். என்றாலும் அதற்குள் உள்ள பகைக்கிரகமான சனியின் தொடர்பு காரணமாக மூன்றாவது கணவனையும் இழக்க நேரிடுகிறது. இது போன்று நாடி முறையில் மிக எளிய முறையில் பலன் கண்டுகொள்ள இயலும். ஒரு நீசம் பெற்ற கிரகம் பரிவர்த்தனை பெறுவதால் அது தனது ஆட்சி வீட்டுக்குச் செல்லும். அதனால் ஐம்பது சதவிகிதமாவது சுபத்தன்மை பெறும். ஒரு சாதகத்தில் குரு நீசமடைந்து, சனியுடன் பரிவர்த்தனை ஆகிறது. சந்திரன் நீசமடைந்து, செவ்வாயுடன் பரிவர்த்தனை ஆகிறது. சூரியன் நீச்சமடைந்து, சுக்கிரனுடன் பரிவர்த்தனை ஆகிறது. இதில் சந்திரனும், செவ்வாயும் நீச பரிவர்த்தனை பெறுகின்றன. இந்த விதமாக நீச கிரகங்கள், பரிவர்த்தனை பெறும் போது, ஓரளவு சுப பலனைப் பெற்று விடுகின்றனர். காரணம், அவர்கள் இருவரும் தமது ஆட்சிவீட்டின் பலத்தைப் பெறுகின்றனர். அதேபோல், ஓர் உச்சக் கிரகம் பரிவர்த்தனை காரணமாகத் தனது உச்சப் பலத்தை இழப்பதுடன், பகைக் கிரகங்களின் சேர்க்கை பெற்று, தனது பலம் முழுவதையும் இழக்கிறார். ஒரு சக்கரத்தில் சனி உச்ச ராசியில் நிற்கிறார். சுக்கிரனுடன் பரிவர்த்தனை பெற்றுத் தனது ஆட்சி வீட்டுக்குச் செல்கிறார். அங்கு தனது பகைக் கிரகங்களான செவ்வாய் மற்றும் கேதுவுக்கு இடையில் அமர்ந்து தனது ஆட்சிப் பலத்தையும் இழக்கிறார். இந்த நிலை சாதகத்தில் இருந்தால் பலன் எவ்வாறு அமையும்?

தொழில் காரகனாகிய சனி, ஒரு அந்தஸ்தான அதிகாரத்தோடு கூடிய ஒரு பணியில் இருக்கலாம். காரணம், சனி உச்சம் பெற்று, உடன் வேறு கிரகங்கள் இல்லாமையே. ஆனால் அவர் பணி செய்யும் இடம் அவரது ஊருக்கு மிகத் தொலைவில் இருக்கலாம். காரணம் சர ராசி. எனவே மாறுதல் கேட்டு, சொந்த ஊருக்கு, அதாவது தனது ஆட்சி வீட்டுக்கு வருகிறார். அங்கே செவ்வாய் மற்றும் கேது இவர்களுக்கிடையில் சிக்கி, வேலையில் பல தொல்லைகளையும், சட்டச் சிக்கல்களையும் சந்திக்கவேண்டி ஏற்படும். அதனால் மனம் தளர்ந்து விடுவார். பரிவர்த்தனை நற்பலனையும் தரும். ஒரு சாதகத்தில் சனி, செவ்வாய் மற்றும் சந்திரன், சுக்கிரன் பரிவர்த்தனை பெறுகின்றார்கள். மேடத்தில் நீச்சம்பெற்ற சனி, பரிவர்த்தனை காரணமாக தனது ஆட்சி மூலத்துக்கான வீடான கும்பத்துக்கு வருகிறார்.

(தொடரும்)

# பெண்களின் இயல்பு பாதுகாக்கப்படல் வேண்டும்

*(ஒரு பெண்ணுக்கான மிகப்பெரும் பாதுகாப்பு அரணாக அவளது-தொழில்-உழைப்பு இருக்கின்றதென்ற கருத்தை நேற்றைய உதயனில் பார்த்தோம். அதனது தொடர்ச்சி கீழே தரப்படுகின்றது.)*

எனவே, பெண் தொழில் செய்வது அவசியமாகும். அது அவளது உரிமையும் கூட. அதனை எவரும் மீறக் கூடாது. ஒரு பெண் தொழில் முயற்சியில் ஈடுபடுவதற்குரிய நியாயங்களை பெண்ணிலைவாதிகள் மேற்குறித்தவாறு முதன்மைப்படுத்துகின்றனர். இன்றைய உலக அமைப்பின்படி பெண் தொழில் புரிவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றாள் என்பது தான் கசப்பான உண்மையாகும். கிழக்கு உலகில் குறிப்பாக, இலங்கை போன்ற நாடுகளில் பெண்கள் கட்டாயமாக தொழில் புரிய வேண்டுமென்ற நிர்ப்பந்தம் அண்மைக்காலம் வரை இல்லாமலிருந்த போதிலும், மேற்குலக நாடுகளைப் பொறுத்தவரையில் பெண்கள் தொழில் பார்க்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். தொழில்புரியாதபோது அவர் களால் தொடர்ந்தும் வாழ முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளதை அவதானிக்க முடிகிறது. சமத்துவம், சம வாய்ப்பு, சம அந்தஸ்து, ஆண்-பெண் வேறு பாடில்லாமல் இருசாராரும் சம வாய்ப்புகளைப் பெற வேண்டும் என்ற கருத்து அங்கு பல தசாப்தங்களாக வலியுறுத்தப்பட்டதன் விளைவாக ஆண்-பெண் என்ற பாகுபாடு மறக்கப்பட்டு அல்லது மறக்கடிக்கப்பட்டு மற்றொரு பால் அதாவது ஆணுமில்லாத பெண்ணுமில்லாத ஓர் இனம் மேற்குலகில் உருவாக்கப்பட்டுள் ளது. இது எந்த அளவுக்கு எனில், தோற்றத்தில் கூட ஆண், பெண் என்று தெரியாத நிலை! இத்தகைய சம வாய்ப்பை அல்லது சம அந் தஸ்தை எதிர்பார்த்த பெண்கள் ஆண்களுக்கு சமமாக இன்று விரும்பியோ விரும்பாமலோ தொழிலுக்குச் செல்ல வேண்டும். அவர்கள் உழைத்தேயாக வேண்டிய கட்டாய நிலை தோன்றியுள்ளது. பெண்கள் நாட்டின் மேம்பாடு, பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி என்பவற்றுக் குப்பங்களிக்கச்சென்றதன் மோசமான விளைவுகளை இன்று உலகம் அனுபவித்துக் கொண்டிருக்கிறது. பொதுவாக, பெண்கள் தொழில் புரிவதில் சமூக நலன் இருப்பதாகச் சொல்லப் படுகின்றது. உண்மை என்ன வென்றால், பெண்கள் தங்களது வீட்டிலே தங்களுடைய பணியைச் செவ்வனே நிறைவேற்றுவதில்தான் ஆரோக்கியமான ஒரு சமூகம் உருவாகுவது தங்கியிருக்கிறது. ஆண்கள் ஆண்களுக்குரிய பணிகளை நிறைவேற்றுவதுபோல பெண்கள் பெண் களுக்குரிய பணிகளைக் குறிப்பாக, தங்களது ராச்சியமான வீட்டுப் பணிகளைச் செவ்வனே நிறைவேற்றுகின்ற போதுதான் எல்லோரும் எதிர்பார்க்கும் நிறைவான வாழ்க்கை, சந்தோசமான, ஆரோக்கியமான குடும்ப வாழ்வு, அமைதியான சமூக வாழ்க்கை உருவாகும் என்பது கவனத்திற்கொள்ளப்பட வேண்டும். மாறாக, பெண்கள் தொழிலுக்குச் செல்வதால் இத்தகைய ஆரோக்கியமான குடும்பத்தை, சமூகத்தைச் சீரழிக்கும் சூழல் இன்று ஏற்பட்டுள்ளது.





உலகில் தொழிற்பிரிப்பின் ஊடாக பொது உற்பத்திகளை அதிகரிக்கலாம் என்பது நியதி. எந்த அளவுக்கு தொழிற்பிரிப்பு நடக்கின்றதோ, அந்த அளவுக்கு உற்பத்தி அதிகரிக்கும் என்பது பொருளியல் ரீதியான உண்மை. அந்த அடிப்படையில்தான் ஒரு வேலையை ஒருவர் மாத்திரம் செய்யாமல் அந்த வேலை பலருக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. தாய்மை, குழந்தை வளர்ப்பு, வீட்டு நிர்வாகம் என்ற இந்த அம்சங்கள்தான் பெண்ணுக்குரிய, இறைவன் கொடுத்துள்ள இயல்பான சிறப்புத் திறமைகள். அவ்வாறே ஓர் ஆணின் வேலையை ஒரு பெண் செய்யலாம். பெண்கள் வாகனம் ஓட்டலாம் விமானமும் ஓட்டலாம். முயற்சித்தால் அவர்களால் இயலாது என்றில்லை. இது ஒரு சாதனையாகக்கூட கருதப்பட்டது. ஆனால் இன்று இவற்றின் பின்விளைவுகளை அவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தேவதையின் தீர்ப்பு



அது ஓர் பின் பனிக்காலம். ரவியும் சீதாவும் காலை வேளை பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தனர். இருவரும் ஒரே வகுப்பு. படிப்பில் கெட்டிக்காரர்கள். ஆனால் அவர்களுக்குள் அடிக்கடி விவாதங்கள் ஏற்படுவதுண்டு. அவர்களில் யார் பெரியவர் என்பது தொடர்பானதே அந்த விவாதங்கள். அதை நிரூபிக்க, இருவரும் போட்டி போட்டுக்கொண்டு படிப்பதும் உண்டு. அன்றும் அப்படித்தான் ரவியும் சீதாவும் பேசிக் கொண்டிருந்தபோது, அவர்களுக்கிடையே விவாதம் முற்றியது. ரவி,"நான் தான் உன்னைவிட அறிவில் சிறந்தவன்" என்றான். ஆனால் சீதாவோ அதை மறுத்தாள். "நிச்சயமா இல்லை... நான் தான்" என்றாள் ஆணித்தரமாக. அதற்குச் சான்றாக அவரவர் தங்களது பிரதாபங்களை சுட்டிக் காட்டிக் கொண்டிருந்தனர். இதே ரீதியில் பேச்சு வளர்ந்து கொண்டிருந்தது. அப்போது திடீரென அவர்கள் முன் தோன்றியது ஓர் அழகிய தேவதை. தேவதையைக் கண்ட இருவரும் செய்வதறியாமல் திகைத்தனர். பின்னர் இருவரும் சுதாரித்துக்கொண்டு, "நீங்கள் யார்?" என்றனர். தேவதை அவர்களிடம், "நான் தேவலோகத்து மங்கை. இந்த வழியாகத்தான் தினமும் பறந்து உலாச் செல்வேன்... இன்றும் அவ்வாறு போகும் போது உங்களது வாக்குவாதம் கேட்டது. பொறுக்கமுடியாமல் இறங்கி வந்தேன்" என்றது. "உங்களுக்குள் என்ன பிரச்சினை? என்னிடம் சொல்லுங்கள்.. முடிந்தால் தீர்த்து வைக்க முயற்சிக்கிறேன்" என்றும் கூறியது. உடனே ரவி, "தேவதையே! இவளைவிட நான் தான் அறிவில் சிறந்தவன் என்றால் ஒத்துக்கொள்ள மாட்டேங்கிறாள்" என்றான். இதைக் கண்ட தேவதை வருந்தியது. ஒரு கணம் யோசித்தது. "சரி, சரி... உங்கள் சண்டையைச் சற்று நிறுத்துங்கள். அதற்கு நான் ஒரு வழி செய்கிறேன்"என்று கூறியது. "உங்கள் இருவருக்கும் நான் ஒரு போட்டி வைக்கிறேன். அதில் யார் வெற்றி பெறுகிறீர்களோ, அவர் தான் அறிவில் சிறந்தவர்" என்று கூறியது. ரவியும் சீதாவும் 'சம்மதம்' எனத் தலையாட்டினர். உடனே போட்டி என்ன என்பதை தேவதை அவர்களிடம் சொல்ல ஆரம்பித்தது. "நான் உங்கள் இருவருக்கும் ஆளுக்கு ஒரு குடுவை தருகிறேன். இது பனிக்காலம் அல்லவா? அந்தக் குடுவையில் இரவு முழுவதும் பனித்துளிகளைச் சேமிக்க வேண்டும். இருவரில் யார் அதிகம் சேமிக் கிறீர்களோ அவர் தான் இந்தப் போட்டியில் வெற்றிபெற்றவர்"என்றுகூறியது. "ஆனால் ஒரு நிபந்தனை. இந்தத் தருணத்திலிருந்து போட்டி முடியும்வரை நீங்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்ளவோ பேசிக்கொள்ளவோகூடாது. நான் நாளை மாலைதான் மீண்டும் வருவேன். இதே மைதானத்தில் எனக்காகக் காத்திருங்கள்" என்றுகூறி, மூடியில்லாத இருகுடுவைகளை அவர்களிடம் கொடுத்துவிட்டு தேவதை மறைந்தது. இருவரும் தத்தம் குடுவையுடன் அவரவர் வீடுகளுக்குச் சென்றனர். செங்கதிர் சூரியன் மறைந்து, பால் ஒளி வீசும் இரவு ஆரம்பித்தது. சிறிது நேரத்தில் பனியும் கொட்ட ஆரம்பித்தது. ரவி குடுவையை எடுத்துக்கொண்டு தோட்டத்துக்கு வந்தான். திறந்த வெளியில் வைத்தான். பின்னர் உறங்கச் சென்றான். ஆனால் உறக்கமே வரவில்லை. அடிக்கடி சென்று குடுவையில் பனித்துளிகள் சேர்ந்துள்ளனவா எனப் பார்த்துக்கொண்டே இருந்தான். சீதாவும் அவளது வீட்டின் முன்புறம் உள்ள புற்றரையில் குடுவையை வைத்தாள். இடையிடையே பனித்துளியின் அளவைப் பார்த்துக்கொண்டிருந்தாள். "நாளை எப்படியாவது ரவியை ஜெயிக்கணும்"என்ற சிந்தனை யிலேயே அவள் தூங்கிப் போனாள். மறுநாள் பொழுது புலர்ந்தது. இருவரும் மைதானத்துக்கு தேவதையைப் பார்க்கச் சென்றனர். அப்போது மற்றவரது குடுவையில் அதிகமாக இருந்தால் நாம் தோற்று விடுவோமே என்று இருவருமே நினைத்ததால் இருவருமே தத்தமது குடுவை நிறையத் தண்ணீரை ஊற்றி எடுத்துச் சென்றனர்.

மைதானத்தில் ஒருவருடன் ஒருவர் பேசிக்கொள்ளாமல் குடுவையை மறைத்து வைத்தபடி காத்திருந்தனர். மாலை ஆனதும் தேவதை வந்தது. "சரியாக வந்துவிட்டீர்களே! எங்கே உங்கள் குடுவையைக் காட்டுங்கள்" என்று குடுவைகளை வாங்கிப் பார்த்தது. பின்னர் வாய்விட்டுச் சிரிக்க ஆரம்பித்தது தேவதை. இதைக் கண்ட இருவரும் எதுவும் புரியாமல் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். "சாதாரணமாகப் பனித்துளி என்பது என்ன தெரியுமா? மேலே உள்ள நீராவி யின் மேல் குளிர்ந்த காற்றுப்படும்போது, அது பனித்துளியாக மாறுகிறது. அந்தப் பனித்துளி மீது நல்ல வெயில்படும்போது, அது மீண்டும் நீராவியாகிவிடும். அப்படிப் பார்த்தால் நீங்கள் மதியத்திலிருந்து இங்கே காத்திருக்கிறீர்கள். என்னதான் குடுவையில் பனித்துளி சேர்ந்திருந்தாலும், இந்த வெயிலில் சிறிதளவாவது ஆவியாகியிருக்கும். மீதி கொஞ்சம்தான் குடுவையில் தங்கியிருக்கும். ஆனால் உங்கள் இருவரது குடுவைகளும் நிரம்பி வழிகிறதே! இது எப்படி? இதைக் கண்டு சிரிக்காமல் என்ன செய்வது?" என்று கூறியது. "இப்போது சொல்லுங்கள்.... உங்களில் அறிவில் சிறந்தவர் யார் என்று?" என்று அவர்களைப் பார்த்துக் கேட்டது தேவதை. இருவரும் என்ன செய்வது என்று தெரியாமல், தமது தவறை உணர்ந்து தலை கவிழ்ந்து நின்றனர்.



# துணிவைத் துணையாக்குவோம்!

*துணிவைத் துணையாக்குவோம்! என்பது குறித்து நேற்றைய உதயனில் பார்த்தோம். அவை குறித்து இன்றைய பகுதியில் மேற்கொண்டும் பார்ப்போம்.*



**செயற்றிறனை அதிகமாக்குங்கள்**

ஒருவருக்கு செயற்றிறன் குறைவாகும் போது அவருடைய மனதில் தாழ்வு மனப்பான்மை உருவாக்கிக் கொண்டு இருக்கும். "என்னால் நன்றாகச் செய்ய முடியுமா?" என்ற அவநம்பிக்கையும் அவ்வப்போது மனதில் தலைதூக்கிக் கொண்டே இருக்கும். ஆகவே உங்களுடைய அறிவையும் செயற்றிறனையும் அதிகமாக்கிக் கொள்ள முயலுங்கள். முறையான பயிற்சியும் முழுமையான முயற்சியும் உங்களிடம் இருக்குமானால், எத்தகைய கடினமான விடயங்களையும் எளிதில் கற்றுக் கொள்ள முடியும். ஆகவே உங்களை நீங்களே சுய ஆய்வுக்கு உட்படுத்துங்கள். உங்களுடைய திறமைகள் எவ்வாறு உள்ளன என்பதை அறிந்து கொள்ளுங்கள். அதாவது அவை நீங்கள் செய்யும் பணிகளைச் சிறப்பாகச் செய்வதற்குப் போதுமானதாக உள்ளதா? அவ்வாறு போதுமான திறமைகள் இருந்தும் உங்களால் ஏன் அவற்றைச் செம்மையாகச் செய்ய முடியவில்லை? என்பது போன்ற பல்வேறு வினாக்களை மனதில் எழுப்பி, உங்களை நீங்களே எடை போடுங்கள். அப்பொழுது தான் உங்களை நீங்களே புரிந்து கொள்ள முடியும்.

மேலும், உங்களுக்குள் இருக்கும் திறமைகள் போதுமானதாக இல்லாவிட்டால், தேவையான திறமைகளை வளர்த்துக் கொள்ளத் திட்டமிட்டு முயலத் தொடங்குங்கள். முயற்சிச் சிறகுகள் அசையும்போது, அகன்ற வானத்தையும் அகப்படுத்த முடியும். முயலுங்கள்! வெற்றிக் கனியின் சுவையை உணரத் தொடங்குங்கள்.

**துணிவைத் துணையாக்குங்கள்**

"நடப்பது நடக்கட்டும்! எதுவாயினும் சந்திப்பேன்! சவால்கள் என்னை எதுவும் செய்து விட முடியாது" என்று எண்ணிக் கொண்டே இருங்கள். பின்னர் படிப்படியாக அச்ச மேகங்கள் விலகுவதையும் தன்னம்பிக்கைச் சூரியனின் சுடரொளி உங்களுக்குள் பரவத் தொடங்குவதையும், உங்களால் உணர முடியும். கடந்த ... விகள் மற்றும் ... அடிக்கடி எண்ணுவதை விட்டு விட்டு, நடந்த நல்ல நிகழ்வுகளையும், உங்களுக்குக் கிடைத்த பாராட்டுக்களையும் மனத்திரையில் ஓடவிடுங்கள். உங்களை நீங்களே உணரத் தொடங்குவீர்கள். உங்களுக்குள் புதைந்துள்ள ஆற்றலின் அடையாளம் மெல்ல மெல்லத் தெரியத் தொடங்கும்.

துணிவைத் துணைவனாக்குங்கள். வெற்றி என்பது துணிந்து செய்தவைகளின் விளைச்சலாகும். திறமைகளை வெளிக்காட்டும் சந்தர்ப்பங்களை சவால்கள் உங்களுக்குள் உருவாக்கிக் கொடுக்கும். ஆகவே எத்தகைய சவால்களையும் தன்னம்பிக்கையோடு எதிர்நோக்குங்கள். தோல்விகள் உங்களைக் கண்டு பின்வாங்கத் தொடங்கும்.

**திட்டமிட்டுச் செயற்படுங்கள்**


... செய்வதாயினும், திட்டமிட்டுச் செய் ... உங்களுடைய பழக்கமாக்கிக் கொள்ளுங்கள். திட்டமிட்டுச் செயற்படும் போது, உங்களுடைய செயல்கள் வெற்றியைக் கொடுப்பது உறுதியாகின்றது. மேலும் ஒரு செயலைச் செய்யும் முன்னர், அந்தச் செயலைச் செய்வதால் ஏற்படும் விளைவுகளைச் சற்று எண்ணிப் பாருங்கள். விளைவுகளை முன்கூட்டியே எண்ணிப் பார்க்கும் ஆற்றல் மனித இனத்துக்கு மட்டும் சிறப்பாக உள்ள முக்கிய திறமையாகும். ஆகவே இந்தத் திறமையைப் பயன்படுத்தி விரும்பிய முடிவுகளைப் பெற்று முன்னேறுங்கள்.

வாழ்க்கை என்பது ஒரு நதி என்றால், அதில் எதிர்நீச்சல் போடுபவர்களே சாதனை படைக்கின்றார்கள். எதிர்நீச்சல் போடுவதற்கு உள்ளத்தில் துணிவும், சிந்தனையில் தெளிவும் வேண்டும். ஆகவே ஒவ்வொரு விடியலிலும் புத்துணர்வோடு கண் விழித்தெழுங்கள். உள்ளத்தில் உற்சாகம் ஊற்றெடுக்க செயலைத் தொடங்குங்கள். சவால்களைச் சந்திக்கும் துணிச்சலோடு உழைப்பு வீதிகளில் உலாப் போங்கள். வெற்றியின் விடியல் உங்களுக்குள் தலைகாட்டத் தொடங்கும். தன்னம்பிக்கையும் தளராத முயற்சியும் இதயத்தின் இருப்புக் கணக்கில் இருந்தால் சோதனைகளை வென்று சாதனைகள் படைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி ஆணைக்குழுவில் மகிந்த இன்று வாக்குமூலம்



கொழும்பு, ஒக். 29
முன்னாள் ஜனாதிபதியும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜ பக்ச பெரிய நிதி மோசடிகள் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் இன்று, மீண்டும் முன்னிலையாகவுள்ளார். சுயா தீன தொலைக்காட்சியில் இடம் பெற்ற மோசடிகள் தொடர்பிலான விசாரணைகளுக்காகவே அவர் இன்றும் முன்னிலையாகின்றார்.

மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட சில ருக்கு விசாரணைகளுக்காக ஆணைக்குழுவின் எதிரில் முன்னிலையாகுமாறு அறிவிக் கப்பட்டுள்ளது. முன்னாள் ஊட கத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, சுயாதீன தொலைக் காட்சியின் முன்னாள் தலைவர் அநுர சிறிவர்தன உள்ளிட்ட வர்களும் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டி யிட்ட அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பரப்புரைக்காக செய்த விளம்பரங்களுக்கான 115 மில்லியன் ரூபா கட்டணம் இன்னமும் செலுத்தப்படவில் லை எனக் குற்றஞ்சாட்டப்பட் டுள்ளது.

இதேவேளை, விளம்பரம் செய் தமை குறித்த கட்டணங்களை தாம் செலுத்தமுடியாது என்றும், கட்சியிடம் அதனை அறவீடு செய் யுமாறும் அண்மையில் மகிந்த ராஜபக்ச அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-சி)

## மகிந்த அணியினரை ஓரங்கட்ட சு.க. முயற்சி

மகிந்த ஆதரவாளர்களான, விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில மற்றும் தினேஷ் குணவர்த்தன ஆகியோரை ஓரம் கட்டும் முயற்சியில் சிறிலங்கா சுதந் திரக் கட்சி ஈடுபட்டுள்ளதாக கொழும்பு சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் விமலின் ஜே.என்.பி. கட்சி, வாசுதேவ நாண யக்காரவின் ஜனநாயக இடதுசாரி முன்னணி, உதய கம்மன்பிலவின் பிவித்துரு ஹெல உறுமய மற்றும் தினேஷ் குணவர்த்தனவின் மகாஜன எக்சத் பெரமுன ஆகிய கட்சிகள், சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிடுவதில்லை என தீர்மானித்துள்ளன.

எவ்வாறெனினும் ஏற்கனவே சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்பட்ட கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (வ)

## புலமைப் பரிசில் பரீட்சையில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது

***கல்வி அமைச்சுக்கு எதிராக ஆசிரியர் சங்கம் நடவடிக்கை***

கொழும்பு, ஒக்.29
ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட் சையில் அநீதி இழைக்கப்பட்ட சிறு வர்களுக்காக, கல்வி அமைச்சுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட் சையில் தோற்றிய மாணவர்களின் தொகையை குறைத்தமையினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற் றோர் அந்த சட்ட நடவடிக்கைக்கும் மேலாக போராட்டத்தை மேற் கொள்ள தயாராகவுள்ளதாக, குறித்த சங்கத்தின் பிரதம செயலாளர் மகிந்த ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து கல்வி அமைச்சுக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அதில், இதன்முதற் கட்டமாக இல ங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு இன்று முறைப்பாட்டை சமர் ப்பிக்கவுள்ளதாகவும், அதற்கு இரண்டு வாரங்களுக்குள் சாதாரண [illegible]வு பெற்றுத் தராவிடின், பெற்றோ ருடன் இணைந்து தங்களது அமைச் சுக்கு எதிராக போராட்டங்கள் நடத்த வேண்டி ஏற்படலாம் என, கவலையு டன் தெரிவிப்பதாகவும் கூறப்பட்டுள் ளது. (த-வ)

## அவன் கார்ட் கப்பலுக்குள் பொலிஸார்

கொழும்பு, ஒக்.29
பெரியளவிலான ஊழல்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவைச் சேர்ந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்வதற்காக காலி துறை [illegible]கத்தில் தரித்து நிற்கும் அவன் கார்ட் கப்பலுக்குள் சென்றுள்ளனர். குறிப்பிட்ட கப்பலுக்குள் சென்று விசா ரணைகளை மேற்கொள்வதற்காக ஆணைக்குழுவினர் அனுமதியை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. குறிப்பிட்ட கப்பலுக்குள் காணப்பட்ட ஆயுதங்கள் ரக்னா லங்கா நிறுவனத் துக்கு சொந்தமானதா என்பது குறித்தே இவர்கள் விசாரணையை மேற்கொள்ள உள்ளனர். (வ)

## வீரவன்சவின் கடவுச் சீட்டு முறிப்பிணையில் மீளளிப்பு

கொழும்பு, ஒக். 29
சட்டவிரோதமான முறையில் இரண்டு கடவுச்சீட்டுக்களை வைத்தி ருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டு பிணை யில் விடுவிக்கப்பட்ட தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்சவின் கடவுச் சீட்டை முறிப்பிணையில் மீள ஒப்படைக்குமாறு நீர்கொழும்பு நீதிம ன்ற நீதவான் நேற்று உத்தரவு பிறப்பித்தார்.

பொலிஸார் மற்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரின் வேண்டு கோளுக்கு அமையவே ஒரு லட்சம் ரூபா முறிப்பிணையில் கட வுச்சீட்டை மீள ஒப்படைக்குமாறு நீதவான் திலகரட்ன பண்டார உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பான வழக்கு விசாரணை மீண்டும் அடுத்த வருடம் மே மாதம் 3ஆம் திகதி எடுத்துக் கொள்ளப்படவுள்ளது என்றும் நீதிவான் தெரிவித்துள்ளார்.

டுபாய் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற் கொள்வதற்காக விமல் வீரவன்ச கடந்த 23ஆம் திகதி அதிகாலை கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்துக்குச் சென்றபோது காலாவதியான கடவுச்சீட்டை வைத்திருந்தமைக்காக திருப்பி அனுப்பப்பட்டார். பின்னர், மீண்டும் புதிய கடவுச்சீட்டுடன் விமான நிலையம் வந்த விமல் வீரவன்சவை விசாரணைகளின் பின்னர் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைது செய்து நீர்கொழும்பு நீதி வான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி யிருந்தனர்.

அதன்போது 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் விடு தலை செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில், நேற்று மீண்டும் நீதிமன்றத்தில் விமல் வீரவன்ச முன்னிலையாகியிருந்தார். இதன்போது அவர் தரப்பு சட்டத்தரணிகள் கடவுச்சீட்டை மீள ஒப்படைக்குமாறு வலியுறுத்தி னர்.

இது தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் ஆட்சேபனை தெரி விக்கவில்லை என்பதுடன் முறிப்பிணையில் விடுவிக்குமாறு கேட்டுக்கொண்டனர்.

இதற்கமைய அவரது கடவுச்சீட்டை ஒரு லட்சம் ரூபா முறிப் பிணையில் மீண்டும் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டதுடன், இது தொடர்பான வழக்கு அடுத்த வருடம் மே மாதம் மூன்றாம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று வழக்கு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது நீர்கொழும்பு நீதிமன்ற வளாகத்துக்குள் முன்னாள் அமைச்சர்களான தினேஷ் குணவர்த்தன, பந்துல குணவர்த்தன, டலஸ் அழகப்பெரும, காமினி லொக்குகே, தூய ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில உள்ளிட்ட பலர் வந்திருந்தனர்.

வழக்கு விசாரணையின் பின்னர் கருத்துத் தெரிவித்த விமல் வீரவன்ச,

வெளிநாடுகளில் வாழ்கின்ற இலங்கையர்களுடன் தற்போதைய அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் கலந்தாலோசிக்கவே நான் வெளிநாடு செல்லவிருந்தேன். எனினும், அங்கு என்னை செல் லவிடாது தடுக்கவே இவ்வாறு கைதுசெய்தனர். விரைவில் மீண்டும் எனது பயணத்தை ஆரம்பிக்கவுள்ளேன். இக்குற்றச்சாட்டு தொடர்பில் உண்மைநிலையை எதிர்காலத்தில் நீதிமன்றம் வெளிப்படுத்தும் என எண்ணுகின்றேன்.

எனக்கு இன்றைய தினம் (நேற்று) கடவுச்சீட்டை நீதிமன்றம் வழங்கும் என எதிர்பார்க்கவில்லை. அதேபோன்று, எனக்கு வெளிநாடு செல்லத் தடைகள் எதனையும் விதிக்கவில்லை. இதன் மூலம் எனது தரப்பில் எவ்வித குற்றச்சாட்டுகள் இல்லை என்பதை உணர்ந்துகொள்ளமுடியும்" -என்றார். (த-சி)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 . 08 . 1953



மறைவு 08 . 11 . 2014

**அமரர் வைத்தியர் விஸ்வலிங்கம் ஸ்ரீஸ்காந்தன்**
"றஞ்சிதாவைத்தியசாலை"
இல.100, சுதுமலை மத்தி, மானிப்பாய்

அப்பா எனும் சொல்லிற்கு அர்த்தமாய் இருந்தீரே
அன்பிற்கு அருவிளக்கமாய் அரும்பணிகள் ஆற்றினீரே
இல்லத்தில் எக்கணமும் இன்பங்கள் குவிப்பீரே
இருந்த நொடிகள் எல்லாம் இன்பமாய் இசைக்குதையா
ஆனால் அவையெல்லாம் ஆண்டொன்றாய் எங்கே ஐயா
ஆதலால் உம் அன்பை ஆண்டொன்றாய் தேடுகிறோமே.

இல.100, பிள்ளையார் மனை,
சுதுமலை மத்தி, மானிப்பாய்.

குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 18 04 1932



இறப்பு 01 11 2012

**அமரர் கனகம்மா கந்தசாமி**

விழிகள் இரண்டும் அலைகிறது
விலையில்லா தாயவள் உன் வதனம் தேடி!!!
நெஞ்சம் எங்கும் கனக்கிறது
நெருங்கிவிட முடியா உன் பயணம் எண்ணி

அம்மா என்றழைக்க இதயம் தவித்திருக்க
ஆறுதல் சொல்ல நீ இல்லையே தாயே
உன் மடி மீது தலைசாய்க்க எம் உள்ளம் துடித்திருக்க
உரு மறைந்து சென்றது தான் தகுமா அம்மா ???

அலைகள் போல் உம் நினைவுகள் அலைமோத
அளவிட முடியா சோகம் எம் விழி மறைக்க
ஆண்டுச்சக்கரம் உருண்டோடி சென்று
ஆண்டு மூன்று ஆனதம்மா எம்மை நீங்கி, நீ சென்று...

உம் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உம் நினைவுகளுடன்,
மகன் க.பற்குணராஜா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கின் கலாசார சீர்கேட்டுக்கு சுயநலம்மிக்க அரசியல்வாதிகளே காரணம்

## யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை நூற்றாண்டு விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவிப்பு







யாழ்ப்பாணம், ஒக். 29

வடக்கு-கிழக்கின் கலாசார சீர்கேட்டை ஏற்படுத்தும் நோக்குடன் போதைப் பொருள் பாவனை சுயநலம்மிக்க அரசியல்வாதிகளால் திணிக்கப்பட்டுள்ளது. மேலும் மதுப்பாவனையை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளில் அவற்றுக்கான அனுமதியை வழங்கும் நடவடிக்கைகள் மும் முரமாக நடைபெற்றுவருகின்றன. இவற்றை முன்னின்று செய்பவர்களாக ஒரு பிரபலமான முஸ்லிம் அமைச்சர் மற்றும் யாழ்.மாவட்டத்தை சேர்ந்த ஒரு சில அதிகாரிகளும் காணப்படுவதாக அறிகின்றேன்.

இவ்வாறு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் நூற்றாண்டு நிறைவு விழாவின் நிறைவு நாள் நிகழ்வுகள் நேற்று கோலாகலமாக நடைபெற்றன. பழைய மாணவர்கள், பெற்றோர்களுக்காக நடத்தப்பட்ட இந்த நிறைவுநாள் நிகழ்வில், பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எல்லாப் பாடசாலைகளும் முன்னுதாரணமாக திகழ்வதற்கு ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் என அனைவரும் செயலாற்ற வேண் டும். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர், இந்தப் பாடசாலையில் செயற்குழு உறுப்பினராக இருந்தேன். ஆனால் பின்னாளில் ஏற்பட்ட பல காரணங்களால் அந்த நிலையில் இருந்து விலக வேண்டிய சுழ்நிலைகள் ஏற்பட்டன. அப்போதைய பாடசாலை சமூகத்தின் சூழ்நிலை அந்த நிலைலமயில் இருந்தது.

இன்று வடக்கு-கிழக்கின் கலாசார சீர்கேட்டை ஏற்படுத்தும் நோக்குடன் போதைப் பொருள் பாவனை சுயநலம்மிக்க அரசியல் வாதிகளால் திணிக்கப்பட்டுள்ளது. மேலும் மதுப்பாவனையை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளில் அவற்றுக்கான அனுமதியை வழங்கும் நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெற்றுவருகின்றன.

இவற்றை முன்னின்று செய் பவர்களாக ஒரு பிரபலமான முஸ்லிம் அமைச்சர் மற்றும் யாழ்.மாவட்டத்தை சேர்ந்த ஒரு சில அதிகாரிகளும் காணப்படுவதாக அறிகின்றேன். இவர்கள் தம்முடைய பெயர்களை வெளியிடாமல் வேறு பெயர்களைப் பயன்படுத்தி வருவதை அறிகின்றோம். இவ்வாறான நடவடிக்கைகளால் பாடசாலைகள் மற்றும் கோயில்களை அண்டிய பிரதேசங்களில் மதுபானசலைகள் உருவாகியுள்ளன. இவற்றுக்கு எதிரான நடவடிக்கைகள் மிக விரைவில் மேற்கொள்ளப்படும்.

நாடாளுமன்றத்திலும் இது தொடர்பில் பேசியுள்ளேன். பெரிய பாடசாலைகளில் பிள்ளைகளை சேர்ப்பதற்காக பலர் தமது வதிவிட முகவரியைக்கூட மாற்றியுள்ளனர். இதனால், தொலை தூரப் பிரயாணம் மேற்கொண்டு மாணவர்கள் பாடசாலைகளுக்கு வரும் போது, துஷ்பிரயோகம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன. இவை தொடர்பாக சம்பந்தப்பட்ட கல்விக்கோட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவை மேலும் கண்டுகொள்ளப்படாத நிலை காணப்பட்டால் துஷ்பிரயோகங்கள் வடக்கில் அதிகரித்தே செல்லும்.

இவற்றை விரைவாக கட்டுப்படுத்தல் வேண்டும். அதிக திறமை கொண்ட பருவம் குழந்தைப் பருவம். இதனை உரிய முறையில் பயன்படுத்தி அவர்களின் வாழ்வை வளமாக்க வேண்டியது சூழவுள்ள சமூகத்தின் கடமையாகும்.

மாணவர்கள் மருத்துவராக, பொறியியலாளராக, வழக்கறிஞராக வரவேண்டும் என்ற நிலையே பாரம்பரியமாக காணப்பட்டது. ஆனால் இன்று பல மாணவர்கள் விஞ்ஞானத்துறையை தேர்வு செய்கின்றனர். அதற்கான வரப்பிரசாதம் இன்றைய பல்கலைக் கழகங்களில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

அடுத்த நாடாளுமன்ற அமர்வில் வெளியிடப்பட இருக்கும் வரவு-செலவுத்திட்டத்தின் மூலமாக பல புள்ளிவிவரங்கள் பெறப்படும். அவை நல்லதாகவும் மோசமானதாகவும் கூட அமையலாம். எனினும் இந்த வரவு-செலவுத் திட்டத்தின் மொத்த ஒதுக்கீட்டில் கல்விக்காக 6 வீதம் ஒதுக்கியுள்ளோம். வடமாகாணத்தில் பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கான பிரச்சினைத் தீர்வுகளை அரசு சார்ந்தும் என்னுடைய தனிப்பட்ட பார்வையூடாகவும் மேற்கொள்ளவுள்ளேன் என நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் குறிப்பிட்டார்.

மேலும், இந்த நிகழ்வில் பிரதம விருந்தினரின் பாரியார், செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள்,மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், அய[illegible] பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (வ-ரி5)

# பாதுகாப்புத் தேவைகளுக்காக அமைக்கப்பட்டதே மாளிகை

## இப்படிக் கூறுகிறார் கோத்தா



கொழும்பு, ஒக்.29

பாதுகாப்புத் தேவைகளுக்காகவே ஜனாதிபதி மாளிகையில் நிலக்கீழ் மாளிகை அமைக்கப்பட்டது என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பு கோட்டே ஜனாதிபதி மாளிகையில், பதுங்கு குழி பாணியில் நிலக்கீழ் மாளிகை அமைக்கப்பட்டுள்ளமை பற்றிய தகவல்களை அண்மையில் அரசு வெளியிட்டிருந்தது. எனினும், இந்த மாளிகையானது அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் தனிப்பட்ட தேவைக்காக நிர்மாணிக்கப்படவில்லை என கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளால் வான் தாக்குதல் நடத்தப்படக்கூடும் என்ற அச்சுறுத்தல் காணப்பட்ட காரணத்தால் 2009ஆம் ஆண்டில், ஜனாதிபதியின் பாதுகாப்புக்காக இந்த மாளிகை அமைக்கப்பட்டது என்று அவர் தெரிவித்துள்ளார். பாதுகாப்புச் சபை மற்றும் படைத் தளபதிகளுக்கு அறிவித்தே இந்த மாளிகை நிர்மாணிக்கப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

களனிதிஸ்ஸ மின் உற்பத்தி நிலையத்தின் மீது தமிழீழ விடுதலைப் புலிகளின் வான் படையினர் தாக்குதல் நடத்தியிருந்தனர் எனவும், அந்தத் தாக்குதல் உண்மையில் ஜனாதிபதி மாளிகையை இலக்குவைத்தே மேற்கொள்ளப்பட்டிருந்தது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த மாளிகை தொடர்பில் சில தரப்பினர் சுமத்திவரும் குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த மாளிகை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் தேவைக்காக அமைக்கப்பட்டது என்றும், போர் ஆரம்பமாக முன்னதாகவே நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன என்றும்- போர் நிறைவின் பின்னரும் பெரிய செலவில் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த மாளிகைக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இரண்டு தடவைகள் மட்டுமே சென்றுள்ளார் எனத் தெரிவிக் கப்படுகின்றது. இந்த மாளிகையை மகிந்த பயன்படுத்தவில்லை எனவும், அவரது சிரேஷ்ட புதல்வர் நாமல் ராஜபக்சவே இங்கு தங்கியிருந்தார் எனவும் கூறப்படுகின்றது.

இந்த மாளிகையில் நாமல் மற்றும் அவரது நண்பர்களான ரகர் வீரர்கள் அதிகளவில் தங்கியிருந்தனர் எனவும், மாளிகையின் பணியாளர்கள் நாமல் பேபியின் ரகர் வீடு என இந்த மாளிகைக்கு பெயர் சூட்டியிருந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கைதிகளுக்குப் பிணை வழங்கக் கோரிய மனு நீதிமன்றால் நிராகரிப்பு

### சட்டமா அதிபரின் அறிக்கை கிடைக்கவில்லை எனத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 29

பயங்கரவாத குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளுக்குப்பிணைகோரிமுன்வைக்கப் பட்ட மனு நேற்று நிராகரிக்கப்பட்டுள்ளது.

தமிழ் கைதிகள் தொடர்பான சட்டமா அதிபரின் அறிக்கை, பொலிஸ் பயங்கரவாத விசாரணை பிரிவினருக்கு இன்னும் கிடைக்கப்பெறாத கார ணத்தாலேயே மேற்படி பிணை மனுவை கொழும்பு மேலதிக நீதவான் அமில ஆரியசேன நிராகரித்துள்ளார்.

குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படாமல், 18 மாதங்களுக்கு அதிகமாக தமிழ்க் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக, அவர்கள் சார்பாக முன்னிலையாகிய சட்டத்தரணிகளான சேனக பெரேரா மன்றும் துான் என். தசுன் ஆகியோர் வாதிட்டனர். இதனை அடுத்தே மேலதிக நீதவான் குறித்த பிணை மனுவை நிராகரித்தார்.

எனினும், குறித்த விடயம் பயங்கரவாததடுப்புச்சட்டத்துடன்தொடர்புபட்டு காணப்படுவதால் சட்டமா அதிபரின் ஆலோசனை கருத்தில்கொள்ளப்பட வேண்டுமென நீதவான் இதன்போது வலியுறுத்தினார்.

இது தொடர்பான விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் அதன் அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் பயங்கரவாத விசாரணை பிரிவு, இதன்போது நீதவானுக்கு அறிவித்தது. எனினும் பொலிஸ் பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு குறித்த அறிக்கைதொடர்பானபதில் இன்னும் கிடைக்கபெறவில்லை எனவும் மன்றில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், குறித்த வழக்கை எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்க கொழும்பு மேலதிக நீதவான் கட்டளையிட்டார்.

(வ-5)

# சங்குப்பிட்டிப் பாலத்தில் இரத்த வெள்ளத்தில் இருவர்

### அம்புலன்ஸ் அவர்களை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்தது

யாழ்ப்பாணம், ஒக். 29

பூநகரி சங்குப்பிட்டிப் பாலத்தில் இரண்டு பேர் தலையில் படுகாயமடைந்து இரத்த வெள்ளத்தில் அநாதரவாகக் கிடந்த நிலையில், அந்த வழியே சென்ற அம்புலன்ஸ் அவர்களை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்ற அவர்களை அவ்வழியேவாகனத்தில்சென்றவர்கள் மோதிவிட்டுச் சென்றிருக்கலாம் என்று கூறப்படுகின்றபோதும் அதனை உறுதிப்படுத்த முடியவில்லை. அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளையும் அந்த இடத்தில் காணவில்லை. அது கடலில் விழுந்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

மறவன்புலோ மத்தியைச் சேர்ந்த க.குணரத்தினம் (வயது - 60), எஸ். மோகிந்தன் (வயது - 18) ஆகியோரே தலையில் படுகாயமடைந்துள்ளனர். அவர்கள் பாலத்தில் அநாதரவாகக் கிடந்த நிலையில் அவ்வழியே சென்றவர்களும்உதவவில்லை. அவ்வழியே சென்ற அம்புலன்ஸ் அவர்களை ஏற்றிச் சாவகச்சேரி வைத்தியசா லையில் சேர்த்துள்ளது. அவர்கள் மோசமான நிலையில் இருந்ததனால் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(து-4-9)

உதயன் விளம்பர சேவைகளுக்கு
advt@uthayan.com
021493 1111

அறை வாடகைக்குண்டு
வெள்ளவத்தையில் [கொமர்ஷல் வங்கிக்கு அருகில்] படிக்கும், வேலைபார்க்கும் பெண்களுக்கு அறை வாடகைக்குண்டு.
தொடர்பு : 0776543926

# சட்டவிரோதமாக மணல் கடத்தியவர்களுக்கு அபராதம்

### தலா ஒரு லட்சம் விதித்து தீர்ப்பு

கரணவாய், ஒக். 29

சட்ட விரோதமாக மணல் கடத்தியதாக, குற்றஞ்சாட்டப்பட்ட இருவருக்கு தலா ஒரு லட்சம் ரூபா அபராதமாகச்செலுத்துமாறு பருத்தித்துறை நீதவான் மா.கணேசராசா நேற்று உத்தரவிட்டார்.



வடமராட்சிப் பகுதியிலிருந்து சட்ட விரோதமாக மணல் கடத்தலில் ஈடுபட்ட இருவரை பருத்தித்துறைப் பொலிஸார்கைதுசெய்துஅவர்களுக்கெதிராக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இது தொடர்பான விசாரணைகள் நேற்று இடம்பெற்ற போது, இருவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து இருவரையும் தலா ஒரு லட்சம் ரூபாவை அபராதமாகச் செலுத்துமாறு உத்தரவிட்ட நீதவான், அவர்களிடமிருந்துபறிமுதல் செய்யப்பட்ட மணலை அரசுடமையாக்குமாறும் கட்டளையிட்டார்.

(வ-108)

# உடுவிலில் நேற்று ஒடு பிரித்துத் திருட்டு

யாழ்ப்பாணம், ஒக். 29

வீட்டில் யாருமில்லாத நேரம் பார்த்து ஓடு பிரித்து உள்நுழைந்த திருடர்கள், கணினி உள்ளிட்ட பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கே.கே.எஸ். வீதி, உடுவில், றொட்டியாலடியிலுள்ள வீடொன்றிலேயே நேற்றுப் பிற்பகல் இந்தச் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த குடும்பஸ்தர் வங்கி ஒன்றில் பணிபுரிகிறார்.அத்துடன், வீட்டில் எவரும் இல்லாத நேரம் பார்த்து இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

இதில் கணினி, கமரா மற்றும் நகைகளையும் திருடர்கள் எடுத்துச் சென்றுள்ளனர் என பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை அங்கிருந்த சொக்லேட் போன்ற உணவுப் பொருள்களையும் அவர்கள் அங்கு வைத்துச் சாப்பிட்டுள்ளனர் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (வ-4)

Galaxy Star
வெற்றி வாரம் 03 திகதி 28.10.2015
10 12 35 46 52
சுப்பர் பரிசுப் பொதி
ரூ.2,000,000/-

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2692 திகதி 2015.10.28
02 53 58 70 O 56 ரூ.31,965,025/=
2015.10.31 ஆம் திகதி சனிக்கிழமை
வெற்றிபெறும் டிக்கட்டுக்கள்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

முகவர்கள் தேவை
ரயர் மீள்நிரப்பும் தொழிற்சாலைக்கு பின்வரும் பிரதேசங்களில் முகவர்கள் தேவைப்படுகின்றனர்.யாழ்ப்பாணம்,பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, சாவகச்சேரி,கொடிகாமம்,பரந்தன் முதலிய இடங்களில் முகவர்களாக செயல்பட விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு : 0776226483

# மீன்பிடி விவகாரம் தொடர்பில் ஐரோ. ஒன்றியத்துக்கு அறிக்கை

### அனுப்பி வைத்தது அரசு

கொழும்பு, ஒக்.29

மீன்பிடி விவகாரம் தொடர்பில் அரசு, ஐரோப்பிய ஒன்றியத்திற்கு அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு இலங்கையிலிருந்து மீன்களை ஏற்றுமதி செய்ய தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்த தடையை நீக்கிக் கொள்ளும் நோக்கில் இலங்கை அரசு தற்போதைய நிலைமைகள் குறித்து விபரித்த அறிக்கை ஒன்றை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு அனுப்பி வைத்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் தர நிர்ணயங்களுக்கு அமைய எவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது குறித்து இந்த அறிக்கையில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மாதத்தில் ஐரோப்பிய ஒன்றிய விசேட பிரதிநிதிகள் குழு, இலங்கைக்கு பயணம் செய்ய உள்ளனர். இலங்கைக்கு விதிக்கப்பட்டிருந்த தடை குறித்து ஆராயும் நோக்கில் அந்தப் பிரதிநிதிகள் இலங்கைக்கு பயணம் செய்ய உள்ளனர்.

இந்த நிலையில், இலங்கை அரசு அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. சர்வதேச தர நிர்ணயங்களுக்கு அமைவாக இலங்கையில் மீன்பிடி நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஆண்டில் இலங்கை மீதான தடை நீக்கப்படும் என எதிர்பார்ப்பதாக அரசு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

(வ)

அறிவித்தல்
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய்
உப அலுவலகம் ஆனைக்கோட்டை
ஆதனப் பெயர் மாற்றம்

வட்டாரம்: 02
புதிய இலக்கம்-40/42
சுதுமலை வீதி,
கிராம அலுவலர் பிரிவு- ஜே/129 சுதுமலை வடக்கு

வட்டாரம்-02 சுதுமலை வீதி ஆதன இலக்கம் 40/42 (புதிய பதிவு) இல் அமைந்துள்ள உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் தென்மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று சுதுமலை இறை '' வள்ளியாவத்தையும் சிம்புலியான் தோட்டமும்'' என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 04 குளி 10.10 கொண்ட இவ்வாதனம் சுதுமலையைச் சேர்ந்த சரவணமுத்து பொன்னம்பலம் மகள் முருகவேணி ஆகிய இவர்களால் அறுதி உறுதி மூலம் சுதுமலையைச்சேர்ந்த விநாயகமூர்த்தி கைம்பெண் இராசமணி என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தரிஸ் பொ.சுந்தரலிங்கம் அவர்களால் எழுதப்பட்ட 1407 ஆம் இலக்க 2004.11.13 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது (மானிப்பாய்) கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செயதுள்ளார்.'' வள்ளியாவத்தையும் சிம்புலியான் தோட்டமும்'' நிலப்பரப்பு04 குளி 10.10 கொண்ட குறித்த ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராத விடத்து குறித்த ஆதனமானது விநாயக மூர்த்தி கைம்பெண் இராசமணி என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு
பிரதேச சபை, மானிப்பாய்.

# வடக்கு-கிழக்கில் அரச துறைக்கு விண்ணப்பம் செய்வதில் வீழ்ச்சி

### ஜனாதிபதி தகவல்

கொழும்பு, ஒக்.29

வடக்குமற்றும்கிழக்குமாகாணங்களில் அரச பணிகளுக்காக விண் ணப்பம் செய்வதில் வீழ்ச்சி ஏற்பட் டுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கடந்தகாலங்களில்வடக்கு, கிழக்குமாகாணங்களில் அரச பதவிகளுக்காக விண்ணப்பம் செய்தவர்களின் எண்ணிக்கை பெரியளவில் குறைவடைந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். கொழும்பு சமுத் திராதேவி மகளிர் வித்தியாலயத்தில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

நீண்ட காலமாகப் போர் சூழல் நிலவியதனால், வடக்கு, கிழக்கு மாகாணங்களில்கல்வித்தரம்வீழ்ச்சியடைந்திருந்தது என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஏனைய பகுதிகளிலும் பூகோள, காலநிலை மற்றும் மனித வள காரணிகளினால் கல்வித்துறையில் குறைபாடுகள் நிலவி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

(வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் மனோவுடன் கனடா தூதுவர் சந்திப்பு

கொழும்பு, ஒக்.29

தேசிய கலந்துரையாடல் அமைச்சர் மனோ கணேசனை இலங்கைக்கான கனேடியத் தூதுவர் ஷெலிவைடிங் சந்தித்து உரையாடியுள்ளார்.

இராஜகிரியவில் அமைந்துள்ள தேசிய கலந்துரையாடல் அமைச்சு அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்பில், கனேடியத் தூதரக அரசியல்துறைப் பொறுப்பாளர் ஜெனிபர் ஹார்ட், தேசிய கலந்துரையாடல் அமைச்சின் செயலாளர் பேர்ல் வீரசிங்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் அமைச்சர் மனோ கணேசன் கூறியுள்ளதாவது:-

இனங்களுக்கு இடையிலான சகவாழ்வை மேம்படுத்தும் எனது தேசிய கலந்துரையாடல் அமைச்சின் பொதுவான நடவடிக்கைகளுக்கும், குறிப்பாக, தேசிய ஆட்சி மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளுக்கும் கனேடிய அரசால் வழங்கப்படக்கூடிய உத்தேச ஒத்துழைப்புகள், உதவிகள், ஆலோசனைகள் பற்றி இந்தச் சந்திப்பின்போது தூதுவர் ஷெலி வைடிங் எடுத்துக் கூறினார்.

இதற்குப் பதிலளிக்கும் முகமாக, இந்த அமைச்சுக்கு கனேடிய அரசால் கடந்த காலத்தில் வழங்கப்பட்ட ஒத்துழைப்புகள் மற்றும் உதவிகள் ஆகியவற்றுக்கு நான் நன்றி தெரிவித்தேன். முன்னைய ஆட்சிகளின்போதும் தமிழ்மொழியை சிங்கள மொழியுடன் இணைந்த சக ஆட்சிமொழியாக நடைமுறைப் படுத்துவதற்கு அரசகரும மொழிக் கொள்கை, அரசகரும மொழித் திணைக்களம், அரச கரும மொழி ஆணைக்குழு மற்றும் அமைச்சுடன் கூடிய அமைச்சரும் இருந்தும் தேவைப்பட்ட அரசியல் உறுதிப்பாடு இல்லாமல் இருந்தது. இன்று அந்நிலைமை மாறியுள்ளது. என்னிடமும், எமது அரசிடமும் இது தொடர்பில் தேவையான அரசியல் உறுதிப்பாடு இன்று இருக்கின்றது. தற்போது ஒரு மாதமாகவே அமைச்சராக என் கடமைகள் ஆரம்பமாகியுள்ளன. இவைகளின் பலா பயன் விரைவில் நடைமுறையில் தெரிய வரும்.

கனடாவில் ஆங்கில, பிரெஞ்சு மொழிகளுக்கு நடைமுறையில் வழங்கப்பட்டுள்ள சம அந்தஸ்துடன் கூடிய சமகால வரலாறு எங்களுக்குப் பெரிதும் வழிகாட்டுகின்றது. அரசின் மொழியுரிமைக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கனேடிய அரசின் கடந்தகால ஒத்துழைப்புக்கள் மற்றும் உதவிகள் மேலும் அதிகரித்த அளவில் எமது அமைச்சுக்கு வழங்கப்படவேண்டும் என நான் கேட்டுக்கொண்டேன்- என்றார். (தி)

## புதிய

சர் திலக் மாரப்பன புதிய சிறைச்சாலையை திறந்து வைப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## வடக்கு

அனுமதி கோரி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இந்த வீடுகள் போரினால் பாதிக்கப்பட்ட மக்களை இலக்காகக் கொண்டே அவர்களுக்கு நிர்மாணித்து வழங்கும் நோக்கில் அமைக்கப்படவுள்ளன.

இந்த வீடுகளை நிர்மாணிப்பதற்குக் கேள்வி கோரல் மூலம் பொருத்தமான நிறுவனங்கள் தேர்வு செய்யப்படவுள்ளன. இவ்வாறு தெரிவு செய்யப்படும் நிறுவனங்கள், வீடுகள் அமைப்பதற்கான நிதியையும் வங்கிகளிடமிருந்து இலங்கைக்கான கடனாகக் கொண்டு வர வேண்டும். குறித்த கடன் தொகையை இலங்கை அரசு செலுத்தும். அவ்வாறு நிதியைக் கொண்டு வரும் நிறுவனங்களே நிர்மாணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்படும்.

மேலும், மிகக் குறுகிய காலத்தில் வீடுகளை நிர்மாணித்து தருவதற்கு இணங்கும் நிறுவனங்களே தேர்வு செய்யப்பட்டு வீடமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படும். விண்ணப்பம் கோரல் நடவடிக்கைகள் இன்னும் இரண்டு மாத காலத்தினுள் முடிவுறுத்தப்படும் என்றும், பெரும்பாலும் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாத இறுதியில் வீடமைப்பு நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பமாகும் என்றும், அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டார். (த-5)

## கே.பி.

நிதிச் சலவையில் ஈடுபடுதல், சட்டவிரோத ஆயுதக் கொள்வனவு உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

கடந்த ஓகஸ்ட் மாதம் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் போதியளவு சாட்சியங்கள் இருக்கவில்லை எனவும், தொடர்ந்தும் விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்திருந்தது.

எனினும் குறித்த அறிக்கையின் நகல் இது வரை தமக்குக் கிடைக்கப் பெறவில்லை என இதன்போது மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சுனில் வடகள மன்றில் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், குமரன் பத்மநாதன் தொடர்பான அறிக்கையை முன்வைப்பதற்குச் சட்டமா அதிபர் ஒன்பது மாதங்களை எடுத்துக் கொண்டதாகக் குற்றஞ்சாட்டினார்.

குமரன் பத்மநாதனைக் கைது செய்வதைத் தவிர்த்து சட்டமா அதிபர், இவ்வாறான அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளமை வேடிக்கையாக இருப்பதாகக் கூறிய சட்டத்தரணி சுனில் வடகள, இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விவரங்களை ஆராய்ந்த பின்னர் தனது நிலைப்பாட்டை நீதிமன்றத்துக்கு அறிவிக்கவிருப்பதாகத் தெரிவித்தார்.

இந்த நிலையில், எதிர்வரும் 12ஆம் திகதி வரை குறித்த மனு ஒத்திவைக்கப்பட்டுள்ளதோடு, அதற்கு முன்னதாக அந்த அறிக்கையை மனுதாரருக்குப் பெற்றுக் கொடுக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசர் விஜித் மலல்கொட அரச தரப்புச் சட்டத் தரணிக்கு உத்தரவிட்டுள்ளார்.

மேலும், குமரன் பத்மநாதன் வெளிநாடு செல்வதைத்தடைசெய்து பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவு, இந்த வழக்கு அடுத்து விசாரணைக்கு வரும் தினம் வரை நீடிக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதேவேளை, நீதியரசர் விஜித் மலல்கொட, தான் ராஜபக்சாக்களிடம் அமெரிக்க [illegible] களில் பணத்தைப் பெற்றுக்கொண்டு வழக்கை தீர்ப்பதாக இணையத்தளங்களில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை நிராகரிப்பதாகக் குறிப்பிட்டார். (த-வ)

## கைதிகளை

தீபாவளிக்குமுன், 14 சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள 217 தமிழ் அரசியல் கைதிகளும் விடு தலை செய்யப்படவேண்டும் என்று ஜனாதிபதிக்கும் அரசுக்கும் நாம் ஏற்கனவே வேண்டுகோள் விடுத்திருந்தோம். உணவு தவிர்ப்பு இருந்த கைதிகளுக்கு நவம்பர் 7 ஆம் திகதிக்கு முன் தீர்வு காணப்படும் என்று ஜனாதிபதி வழங்கிய உறுதிமொழியைத் தொடர்ந்து அந்த உணவு தவிர்ப்பு நிறுத்தப்பட்டது. அந்த உறுதிமொழி நிறை வேற்றப் படாவிட்டால் அந்தக் கைதிகள் மீண்டும் உணவு தவிர்ப்பை ஆரம்பிக்க நேரிடும்.

அரசியல் கைதிகள் தீபாவளிக்கு முன் தங்கள் குடும்பங்களுடன் இணைய வழிவகுக்கவேண்டும் எனப் பகிரங்க வேண்டுகோள் விடுக்கிறோம். இதை மனிதாபிமான முறையில் நல்லாட்சியின் உண்மையான நிலையைப் பிரதிபலிக்கும் வகையில் தாமதமின்றி தீர்மானிக்க வேண்டும்.

அரசியற் கைதிகளுக்கு உடன் விமோசனம் கிட்ட, இறையருள் வேண்டி சகல இந்து மக்களும் நாளை வெள்ளிக்கிழமை பிரார்த்தனையில் ஈடுபடவேண்டும் என்றும், இதற்குச் சகல இந்து ஆலய தர்ம கர்த்தாக்களும், மாமன்றத்தின் அங்கத்துவச் சங்கங்களும் வழி வகுக்க வேண்டும் எனவும் வினயமாக மாமன்றம் வேண்டுகோள் விடுக்கின்றது.

இந்த கைதிகளுக்குக் கொடுக்கப்பட்ட உறுதிமொழி மீறப்பட்டு, உணவு தவிர்ப்பை மீண்டும் ஆரம்பித்தால் இந்த நாட்டு இந்து மக்களும் அவர்களுக்கு ஆதரவு வழங்கி உணவு தவிர்ப்பில் சேர வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படலாம். அத்துடன் இந்த நாட்டு இந்து மக்கள் தீபாவளியைக் கொண்டாடும் நிலையில் இருக்கமாட்டார்கள் .

எமது சகோதர, சகோதரிகள் கண்ணீரும் கம்பலையுமாக இருக்க விட்டுவிட்டு அரசோ, அரசைச் சேர்ந்த எவருமோ தீபாவளியை கொண்டாட நடவடிக்கை ஏதாவது எடுத்தால் இந்து மக்கள் எந்தவித திருப்தியும் அடைய மாட்டார்கள். மாறாக இன்னும் வேதனையடைவர். அரசு எந்தவித கொண்டாட்டமோ களியாட்ட நிகழ்வோ ஏற்பாடு செய்தால் எந்த இந்து மகனும் அதில் கலந்துகொள்ளமாட்டான் என்பதையும் இந்து மக்கள் சார்பில் சொல்லி வைக்க விரும்புகின்றோம் - என்றுள்ளது. (த-5)

## ஐரோப்பிய

கிரேசோ ஆசீர்வாதம் இந்தத் தகவலை வெளியிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச நெறிமுறைகளுக்கமைய இலங்கை மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடவில்லை எனக் கூறி கடந்த ஜனவரி 4ஆம் திகதி இலங்கையின் கடலுணவு ஏற்றுமதிக்கு ஐரோப்பிய ஒன்றியம் தடைவிதித்தது. ஐரோப்பிய ஒன்றியத்தின் மீன்பிடி விதிமுறைகள் உரிய வகையில் பின்பற்றப்பட வேண்டும் என்று இலங்கைக்கு ஆலோசனையும் முன்வைக்கப்பட்டது.

அத்துடன், இத்தடை நீக்கப்படவேண்டுமானால், ஐரோப்பிய ஒன்றியத்தின் பரிந்துரைகள் நடைமுறைக்கு வரவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில், இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவை உள்ளடங்கிய அறிக்கையை ஒக்ரோபர் 15ஆம் திகதி பிரஸல்ஸ் தலைமையகத்தில் [illegible] இதனடிப்படையில் [illegible] ஐரோப்பிய [illegible] குழு இலங்கை வரவுள்ளது. 12ஆம் திகதி வரும் நால்வர் அடங்கிய இந்தக் குழு 17ஆம் திகதிவரை இங்கு தங்கியிருந்து தமது பணிகளை முன்னெடுக்கும். இலங்கை பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதா என்பது பற்றி இவர்கள் ஆராய் வார்கள்.

இக்குழுவின் இலங்கைப் பயணத்தில் பிரதிபயனாக இலங்கையின் கடலுணவு ஏற்றுமதிக்கு ஐரோப்பிய ஒன்றியத்தால் விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்படுவதற்குரிய சாத்தியம் காணப்படுகின்றது-என்றார். (த-சி)

## இலங்கை

எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் வரை 120 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு நீதிமன்றங்கள் ஊடாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

அத்துடன் இந்தியக் கடல் எல்லைக்குள் அத்துமீறிக் கடற்றொழிலில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் வரை 36 இலங்கை மீனவர்கள் இந்தியக் கடலோரக் காவற்படையினரால் கைது செய்யப்பட்டுத் தமிழகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் இலங்கை-இந்திய வெளிவிவகார அமைச்சுகளின் உடன்படிக்கையின் பிரகாரம் இரு நாட்டு மீனவர்களையும் நேற்று புதன்கிழமை விடுவிப்பது என அறிவிக்கப்பட்டிருந்தது. இதன்படி மீனவர்கள் விடுதலை செயல்முறை நேற்றுக்காலை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மகேசினி கொலன்னே தெரிவித்துள்ளார்.

இதன்படி இரண்டு தினங்களுக்குள் 120 இந்திய மீனவர்களும் தமது சொந்த இடங்களுக்குச் செல்வார்கள் எனக் குறிப்பிட்டுள்ள அவர், இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்கள் 36 பேரும் விடுவிக்கப்பட்டுள்ளார்கள் எனவும் கூறினார். (த-வ)

## அமெரிக்காவுக்கு

தடைகளும் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

முன்னிலைசோஷலிஸக்கட்சியின்ஆதரவாளர்களால் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் கட்சியின் முக்கிய உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் பங்கேற்றனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் அமெரிக்க எதிர்ப்புப் பதாகைகளைக் கையிலேந்தியவாறும், அமெரிக்க எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், கொழும்பு காலி பிரதான வீதிப் போக்குவரத்து சில மணி நேரம் பாதிக்கப்பட் டிருந்தது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் இறுதியில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் கொடும்பாவியை நடு வீதியில் வைத்து தீயிட்டுக் கொளுத்தி தங்களது எதிர்ப்பை வெளியிட்டனர். இதேவேளை, கியூபா மீதான பொருளாதாரத் தடைகளை நீக்குமாறு கோரி ஜே.விபியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி அமெரிக்கத் தூதரகத்திடம் மனுவொன்றும் கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (தி)

## இலங்கை அரசு

மீளக் குடியமர்த்த வேண்டியது மிக முக்கியமான பிரச்சினையாக இருக்கின்றது. அதே போன்று எந்தவித விசாரணைகளுமின்றி நீண்டகாலமாகச் சிறைகளிலே தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விரைவாக விடுதலை பெறவேண்டும். அதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அமெரிக்கா இது தொடர்பில் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

வடக்கில் போரினால் பாதிக்கப்பட்ட விதவைகளின் நிலைமைகள் தொடர்பிலும், அவர்களுக்கு அரசு எவ்வாறான உதவிகளை இது வரை செய்துள்ளது என்பது தொடர்பிலும் என்னிடம் வினவப்பட்டது. இதற்கு நான், போரின்போது பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அரசு சொற்ப அளவான உதவிகளையே செய்துள்ளது. அரசு சாராத வெளிநாட்டு நிறுவனங்களும் புலம்பெயர்ந்த தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் தங்களால் ஆன உதவிகளை மேற்கொண்டுள்ளன.

அவர்களுக்கான உதவிகளை அரசுடன் பேசி விரைவாக பெற்றுக்கொடுக்கவேண்டும். இவற்றுக்கு மேலதிகமாக வடக்கில் அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனையைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவேண்டும். குறிப்பாக இதன் விளைவுகளை தடுக்க இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் உருவாக்கிக் கொடுக்கப்படவேண்டும்.வேலை வாய்ப்பை அரசு வழங்காவிட்டாலும் ஏனைய தனியார்துறை தொழில் நிறுவனங்களுக்கும் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்பவர்களுக்கும் அதற்கான அனுமதியை அரசு வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமெனச் சுட்டிக்காட்டினேன் -என்றார்.

இதேவேளை, வடக்கு முதலமைச்சர் தனது சந்திப்புத் தொடர்பில் தெரிவிக்கையில், போரின் பின் பெண்கள் எப்படி உள்ளனர் என்பதை அறிவதே அவரின் முக்கிய நோக்கம். இன்று 80 ஆயிரம் பெண்கள் தமது குடும்பத்தை தாமே தனித்து பராமரிக்கும் நிலையில் உள்ளனர். இதில் பலர் 25 தொடக்கம் 35 வயதுக்கு உட்பட்ட இளம் விதவைகள். இவர்கள் பிள்ளைகளுடன் தனித்து வாழ்கின்றனர். போரின் பின்னரான அத்தனை பிரச்சினைகளையும் முழுமையாகக் கண்டறியவேண்டும். ஒரு சிலருக்கு மட்டும் நன்மைகளை செய்து விட்டுச் சமுதாயத்தில் இருக்கும் பிரச்சினை அறியாதுவிட்டால் எதிர்காலத்தில் நன்மைகளைப் பயக்காது. பெண்களை ஒன்றிணைத்துத் தமது குடும்பங்களை பராமரித்து அல்லது அண்மையில் இருந்து வாழ்வாதாரத்தையும் நடத்தக்கூடிய ஓர் விதத்தைக் கண்டறியவேண்டும் .

நல்லிணக்கம் என்பது மத்திய அரசு, தான் நினைப்பதை எம்மீது திணித்து இதுதான் நல்லிணக்கம் இதை ஏற்றுக்கொள்ளுங்கள் எனக் கூறுவதில் எந்தப்பயனும் இல்லை. அதனை இரு பகுதியும் சேர்ந்து என்ன செய்யவேண்டும் . அதற்கு முதல் உண்மையைக் கண்டறிய வேண்டும். கடந்த 67 ஆண்டுகளாக என்ன நடந்தது என்பதைச் சிங்கள மக்கள் தெரிந்து - அறிந்து அதை ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலைமையை ஏற்படுத்தி அதனை நிவர்த்தி செய்யப் போகின்றோம் என்ற மனோபாவத்துடன் முன்னேறிச் சென்றாலே நல்லிணக்கம் இருக்க முடியும் என்பதையும் நான் சுட்டிக் காட்டினேன் - என்றார்.

இந்தச் சந்திப்புக்களின் பின்னர், நேற்றுப் பிற்பகல் சிவில் சமூக அமைப்பின் உறுப்பினர்கள், தொண்டு நிறுவனங்களின் உறுப்பினர்கள், பெண்கள் அமைப்பினர், பெண் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் அமெரிக்கக் குழுவினர் ஈடுபட்டனர். யாழ்ப்பாணம் ஹெரிரேஜ் கலந்துரையாடல் பகுதியில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், வடக்கில் பெண்களின்நிலை, பெண்கள் குழந்தைகள் மீதான வன்முறை, பாலியல் துஷ்பிரயோகங்கள், அது தொடர்பான சாட்சிகளின் பாதுகாப்பு உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினர். இது தொடர்பான கருத்துக்களைக் கேட்டறிந்த அதுல் கெசாப் மற்றும் உலக பெண்கள் கத்தரின் ருசெல் ஆகியோர் இது விடயம் தொடர்பில் தாம் அமெரிக்க அரசுக்குத் தெரியப்படுத்துவதாகக் கூறினர். (த-5-10-101-ரி2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதிகளுக்கு மன்னிப்பு அரசியல் ரீதியான விடயம்

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 29

தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தைச்சட்டரீதியாகஅணுகுவதானால், அவர்களுக்குப் பிணை வழங்க வேண் டிய அவசியம் இருக்கின்றது. அதனை அரசும் ஏற்றுக்கொண்டுள்ளது.பொதுமன்னிப்புவழங்குவதுஎன்பதுஅரசியல்ரீதியிலானவிடயம்என்று வடக்குமாகாணமுதலமைச்சர்க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்அரசியல்கைதிகளுக்குப்பொது மன்னிப்பு வழங்கமுடியாது, பிணை தான்வழங்கமுடியும்என்றுஅரசுதெரிவித்துள்ளமை தொடர்பில் வடக்கு முதலமைச்சரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் விடுதலை முன்னணியில் (ஜே.வி.பி) பலவிதமான கொடூர செயல்களில் ஈடுபட்டவர்களுக்குக் கூடப் பொதுமன்னிப்பு வழங்க முடியுமானால், தமிழ் அரசியல் கைதிகளுக்கு மட்டும்ஏன்பொதுமன்னிப்பு வழங்கவில்லை என்பதுதான் இங்கு எழுகின்ற கேள்வி? அதற்கு அரசுகூறும் காரணம்: தமிழ்க்கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கினால்,குற்றஞ்சாட்டப்படப்போகும் இராணுவத்தினரையும் விடுவிக்க வேண்டிவரும்என்றுசொல்கின்றார்கள். இது நகைப்புக்குரியது. ஏனெனில் அவர்கள் மீது இன்னும் குற்றஞ்சாட்டப்படவில்லை. அப்படி இருக்கையில் அவர்கள் குற்றவாளிகள் குற்றஞ்சாட்டப்படவேண்டியவர்கள் என்று அரசு தீர்மானித்துள்ளதா என்ற கேள்வி எழுகின்றது.

அவ்வாறானால் அவர்களைக் குற்றஞ்சாட்டி, வேண்டுமானால் அடைத்து வையுங்கள். அதன்பின்பு 7 அல்லது 8 வருடங்கள் கழித்து நாங்கள் அவர்களையும் இதே போன்று விடுவிக்கலாம்.

அவர்களைவிடுவிக்கவேண்டிவரும்– அதனால் உங்களையும் பொது மன்னிப்பில் விடமுடியாது என்று கூறும் போது அதன் கருத்து எமக்கு விளங்கவில்லை. ஏனெனில் இராணு வத்தினர் குற்றமே புரியாதவர்கள் என்றே கூறிக்கொண்டு இருக்கின் றனர். அதற்கும் அப்பால் இன்னும் அவர்களைக் குற்றவாளிகளாகவும் இனங்காணவில்லை என்றுதான் அரசு இன்றுவரை கூறிக்கொண்டுள்ளது. இந்தவேளையில், அவர்களையும் விடுவிக்க வேண்டி வரும் என்பதன்கருத்துஎமக்குப்புரியவில்லை. இவ்வாறுதான் செய்வதெனில் இராணுவத்தினரும் குற்றவாளிகளாகஅல்லதுகுற்றஞ்சாட்டப்படுபவர்களாக நீங்கள் நிர்ணயித்து அவர்களுக்கும் 5 அல்லது 6 ஆண்டுகள் வைத்திருந்தபின்பு தமிழ் அரசியல் கைதிகள் போல் பொதுமன்னிப்பு வழங்கும்பட்சத்தில் இது தொடர்பில் பேசிக்கொள்ளலாம். ஆனால், இத்தனை ஆண்டுகாலம் சிறையில் இருந்து வாடும் கைதிகளின் பொது மன்னிப்பை இனிவரப்போகும் குற்றஞ்சாட்டப்படுபவர்களோடுசம்பந்தப்படுத்தி பேசுவது நகைப்புக்குரியது – என்றார். (த–5–101)

# ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி விடுபாட்டுரிமை உள்ளவர்

## நீதிமன்றுக்கு அரசு சுட்டிக்காட்டு

இலங்கைக்கானஐ.நா.வதிவிடப்பிரதிநிதிசுபினேநண்டி இராஜதந்திர ரீதியிலான விடுபாட்டுரிமைக்கு உரித்துடையவர் என்பதால், அவ ருக்கு எதிராக இலங்கையில் வழக் குத் தொடரமுடியாது என அரசு அறிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சின் செய லாளர் சித்திராங்கனி வாகீஸ்வரா கொழும்பு மாவட்ட நீதிமன்றத்துக்கு இதனைத் தெரியப்படுத்தியுள்ளார்.

கலாநிதி குணசேகர அமரசேகர வினால் தொடரப்பட்ட வழக்கு குறித்தே அவர் இவ்வாறு குறிப்பிட் டுள்ளார்.

ஐ.நா. பிரதிநிதி இலங்கையில் முழு மையான இராஜதந்திர அந்தஸ்துக்கு உரியவர் என்பதால், அவருக்கு எதிராக வழக்குத் தொடுக்க முடியாது என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சுட்டிக் காட்டியுள்ளார்.

2014 இல் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்சட்டவிரோதமானது என இலங்கைக் கான வதிவிட பிரதநிதி ஏற்றுக் கொள்ளவேண்டும் எனக் கோரி, கலாநிதி அமரதாச தொடுத் துள்ள வழக்கு தொடர்பாகவே வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சித்திராங்கினி வாகீஸ்வராமேற்க ண்டவாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார். (த–வ)

# ஜெனிவா தீர்மானம் தொடர்பில் அறிவூட்டும் செயலமர்வு இன்று

கொழும்பு, ஒக்.29

இலங்கை அரசு ஏற்று அங்கீகரித்த ஜெனிவாத்தீர்மானங்களை செயற்படுதுவதற்காக நாட்டிலுள்ள சிவில் சமூகங்களுக்கு அறிவூட்டும் ஒரு நாள் செயலமர்வு இன்று வியாழக் கிழமை கொழும்பு ஜானகி ஹோட்டலில் இடம்பெறவுள்ளது என்று இன ஆய்வுக்கான சர்வதேச மையம் அறிவித்துள்ளது.

இது விடயமாக இன ஆய்வுக்கான சர்வதேச மையம் விவரித்துள்ள குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:–

போர் முடிவடைந்து, தற்போது நிலவும் சிக்கலானதும் ஸ்திரத் தன்மையற்றதுமான பின்புலத்தில் நீதியைத் தொடர்வதிலுள்ள சிக்கல்களைப் பற்றி அலசி ஆராய்வதற்கு குடிதண்ணீர் மற்றும் அரசியல் சமூகங்களுக்குத்தேவையானதளவெளியை வழங்குவதற்கென நாட்டின் பல்வேறு பாகங்களிலும் இன ஆய்வுக்கான சர்வதேச மையம் தொடர் உரையாடல்களை நடத்தவுள்ளது.

இந்த முன்னெடுப்பின் நீண்டகால நோக்கு எதுவெனில், இலங்கையில் பொருத்தமானதும் உயிரோட்டமுள்ளதுமான நிலைமாற்றுக்கால நீதியின் ஒரு தலைமுறைக்கு உரிய பங்களிப்பைச் செய்வதாகும்.

இதற்கென இந்த முன்னெடுப்பானது பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த பிரதான தீர்மானம் மேற்கொள்வோர்களுக்கிடையே உரையாடல்களுக்கும் விவாதங்களுக்கும் வேண்டியதான தள வெளிகளை வழங்கி, இலங்கையில் இடம்பெற்ற போருக்கு தனித்துவமான உணர்வீக அம்சங்களை நிலைமாற்றுக்கால நீதியின் செயன்முறைகளுக்கென ஒழுங்குபடுத்தும்படியாகச் செயற்படுகின்றது.

கடந்தகால கோரிக்கைகளுக்குப் பதிலீடு கொடுக்கும்படியாக இந்தக் கலந்துரையாடல்கள் பரந்து பட்டதான பொருத்தப்பாடுள்ள. நிலைமாற்றுக்கால நீதிப் பொறிமுறைகளிலே நோக்கக் குவியம் செலுத்தும் நிலைமாற்றுக்கால நீதி நிபுணர்களும் கடந்த போர் சமூகங்களைச் சேர்ந்த செயற்பாட்டாளர்களும் இந்த உரையாடல்களைத் தூண்டும் பிரதான வளவாளர்களாக அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் செயன்முறைகளின் பிரதான நோக்குகளில் ஒன்று பிரதானதீர்மானம் மேற்கொள்வோர்களிடையே அங்கே உள்ளதான பரந்துபட்ட நிலை மாற்றுக்கால நீதிப் பொறிமுறைகளைப் பற்றிய அறிவூட்டல்களையும் புத்திக்கூர்மிய புரிந்திவையும் மேம்படுத்துவதாகும்.

ஜனவரி 2015 ஜனாதிபதித் தேர்தலின் பிறகு கணிசமான உருமாற்றமடைந்துள்ள, அரசியல் சூழ்நிலைகளிலே இந்த உரையாடல்கள் இடம்பெறுகின்றன.

இலங்கையிலே நிலைமாற்றுக்கால நீதியைப் பற்றிய பாரதூரமானதும், திடமானதும், செம்மையானதுமான கலந்துரையாடலுக்கான தளவெளி தற்போது உருவாகியுள்ளது.

நிலைமாற்றுக்கால நீதி பற்றிய தளவெளி விவாதங்களை வழிநடத்தி, இலங்கைக்குப் பொருத்தமான நிலைமாற்றுக்கால நீதியை செயற்படுத்துவதற்கு அரசுக்கும் மற்றும் இதர செயற்பாட்டாளர்களுக்கும் வேண்டியதான புத்திக் கூர்மிய ஆதரவு மற்றும் இதர ஆதரவுகளை வழங்குவதற்கான காலம் தற்போது கனிந்துள்ளது–என்றுள்ளது. (த)


Social Media
Photo Sharing க்கு நல்லது.
ஆனா, தற்காலிகமானது.

JAMPHOTO Books
ரொம்ப நல்லது...
அது நிரந்தரமானது!



ரொம்ப யோசிக்காதீங்க...
மிகவும் இலகுவாக மூன்றே படிமுறைகளில் உங்கள் நினைவுகளை நிரந்தரமாக்கிக் கொள்ள
www.jamphotobooks.com க்கு log in செய்யுங்கள்.

1 பதிவிறக்கம் செய்யக்கூடிய இலவச மென்பொருள்
2 உங்கள் விருப்பப்படி வடிவமைக்கப்படும்
3 order online உங்கள் வீட்டுக்கே விநியோகிக்கப்படும்.

ரூ. 2950/= முதல்
தொடர்பு இல: தொ.பே. +9411 7389721 பக்ஸ்: +9411 2055129 கைபேசி: +9477 2871212

JAMPHOTO
EVERLASTING BEAUTIFUL STORIES


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானத்தை அடைவதற்கு சிறந்த ஆயுதம் விளையாட்டு

## இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியில் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி கருத்து





யாழ்ப்பாணம், ஒக். 29

விளையாட்டு என்பது இன மத பேதங்களைக் கடந்து அனைவரையும் ஒன்றிணைக்கும் ஒரு கருவி. விளையாட்டின் ஊடாகவும் நாம் சமாதானத்தை எட்ட முடியும். இவ்வாறு தெரிவித்தார் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர இளவாலை புனித கென்றியரசர் கல்லூரிக்கு நேற்றுப் பிற்பகல் சென்றிருந்தார். அவருடன் கொழும்புமாநகரசபைஉறுப்பினரும் ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகப்பேச்சாளருமான பாஸ்கராவும் சென்றார். கல்லூரியின் விளையாட்டுத்துறை முன்னேற்றங்கள், குறைபாடுகள் தொடர்பில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுடன் அமைச்சர் கலந்துரையாடினார். இதன்போது கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

சமாதானத்தை அடைவதற்கு விளையாட்டும் ஒரு சிறந்த ஆயுதம். விளையாட்டு எம்மிடையே தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துகின்றது. தேசிய ரீதியில் மட்டுமல்லாது ஒலிம்பிக் போன்ற சர்வதேச தொடர்களிலும் இங்குள்ள வீரர்கள் தமது திறமைகளைச் சிறப்பாக வெளிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும். அதற்காகத் திறமைவாய்ந்த வீரர்கள் உருவாக்கப்படவேண்டும். இங்குள்ள வீரர்களின் திறனையும், விளையாட்டு நுட்பங்களையும்மேலும் அபிவிருத்தி செய்வதற்கு நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். இருக்கும் வளங்களை வைத்துக் கொண்டு இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி வீரர்கள் குவித்துவரும் வெற்றிகள் பாராட்டுக்குரியவை- என்றார்.

கல்லூரியின் மைதானத்தையும் அமைச்சர் நேரில் பார்வையிட்டார். இதன்போது மைதானத்தை மீளமைக்க வேண்டிய தேவை இருப்பதாக கல்லூரி அதிபர் அருட்திரு ஜே.ஏ. ஜேசுதாஸ் அடிகள் அமைச்சரிடம் சுட்டிக்காட்டினார். அதற்கானநடவடிக்கைகளைத் தான் மேற்கொள்வதாக அமைச்சர் அங்கு உறுதியளித்தார்.

புனித கென்றியரசர் கல்லூரிக்குச் செல்லும் முன்பாக யாழ். ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையை அவரது இல்லத்தில் சந்தித்த அமைச்சர், விளையாட்டுத் துறையை வளர்த்தெடுப்பது தொடர்பாக சிறிது நேரம் கலந்துரையாடினார். அப்பொழுது கடந்த காலத்தை விட சமீப காலமாக வடமாகாண மாணவர்களுக்கான வாய்ப்புக்களை வழங்குவதற்காகவும் வழங்க முன்வந்தமைக்காகவும் நன்றி தெரிவித்த யாழ். ஆயர்- தொடர்ந்தும் இவ்வாறான வாய்ப்புக்கள் பாரபட்சம் இல்லாமல் வழங்கப்பட வேண்டும் – என்றார். மட்டுமல்லாது கிரிக்கெட் மைதானம் ஒன்றை வடக்கின் மத்தியான கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்க வேண்டும் என்றும் ஆயர் வலியுறுத்தினார்.

இளைஞர்களை ஒன்றுதிரட்டி குழுக்களை அமைத்து நேரடிக் [illegible] காணிப்பின் கீழ் அவர்களைப் பயிற்றுவிப்பதன் மூலம் விளையாட்டுத்துறை துரித வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல முடியும் என்பது அமைச்சரின் சிந்தனையாக அமைந்தது. ஆயர் இல்லத்தில் இருந்து புறப்பட்ட அமைச்சர் தடகளத் தொடர்களுக்கு ஏற்ற வகையில் சர்வதேச ரீதியில் அமைக்கப்பட்டுவரும் யாழ். துரையப்பா மைதானத்தையும் பார்வையிட்டார். இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர் ஆனோல்ட் மற்றும் விளையாட்டுத்துறை ஆர்வலர்கள் பலரும் கலந்துகொண்டனர். மைதானத்தில் இடம்பெற்ற சந்திப்பில் வைத்து யாழ். மவாட்டத்துக்கு என உள்ளக விளையாட்டரங்கு ஒன்று வேண்டும் என்ற கோரிக்கை விடுத்த விளையாட்டுத்துறை இணைப்பாளர் ஆர்னோல்ட் யாழ். நகரின் மத்தியில் உள்ள அரச காணி ஒன்றை (முன்னர் படையினர் வசமிருந்த காணி) குறித்த உள்ளரங்கு கட்டுமானத்துக்குப் பயன்படுத்தலாம் எனவும் அமைச் சரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். (த-ம)

# அடுத்த வருட தேசிய விளையாட்டு விழா கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெறும்

## விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு



கிளிநொச்சியில் புதிதாக அமைக் கப்பட்டுவரும் சர்வதேச தரத்திலான விளையாட்டு மைதானத்தில் அடுத்த வருடத்தின் தேசிய விளையாட்டு விழாவை நடத்த திட்டமிட்டுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை கிளிநொச்சிக்கு பயணம் செய்த விளையாட்டுத் துறை அமைச்சர், அங்கு புதிதாக அமைக்கப்பட்டு வரும் சர்வதேச தரத்திலான விளையாட்டு மைதானத்தை பார்வையிட்ட பின்னர் ஊடகவியலாளர்களிடம் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில் ; 'போரினால் பாதிக்கப்பட்ட வடமாகாண வீர,வீராங்கனைகளின் விளையாட்டுத்திறனை மீண்டும் கட்டியெழுப்பும் நோக்கிலேயே இவ்வாறான அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. கிளிநொச்சியில் இந்த மைதானம் அமைக்க[illegible] பிரதான காரணம் வடமாகாணத்தின் மத்திய பகுதியில் கிளிநொச்சி மாவட்டம் அமைந்துள்ளமையாலே ஆகும். எதிர்வரும் பெப்ரவரி மாதத்துக்குள் பணிகள் முழுமையாக்கப்பட்டு, அடுத்த வருடத்துக்கான தேசிய விழா நடத்தப்படும். மாவட்ட மட்டங்களிலும் இவ்வாறான மைதானங்கள் இனிவரும்காலங்களில் அமைக்கப்படும். வடக்குக்கும் தென்னிலங்கைக்கும் இடையில் ஓர் வலுவான பாலமாக விளையாட்டுத்துறை அமையவேண்டும்' -என்றார்.

கடந்த 2011 ஆம் ஆண்டுஜூலை மாதம் 20 ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் அடிக்கல் நடப்பட்டு இரண்டு வருடங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட்டு தேசிய விளையாட்டு விழா நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்ட இந்த மைதானம், ஒப்பந்த நிறுவனத்தின் பணிகளுக்கான நிதி விடுவிப்பு முறையாக இடம்பெறாமையினால் கடந்த பலமாதங்களாக கட்டுமானப்பணிகள் [illegible] நிலையில் தற்போது மீண்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம-ரி3)

# சர்வதேசத்தில் தடம் பதித்த டயமன்ஸ் வீரனுக்கு நேற்று கௌரவம்

மாங்குளம் ஒக். 29

பங்களாதேசில் அண்மையில் நடைபெற்ற சர்வதேச உதைபந்தாட்ட தொடரில் இலங்கை சொலிட் விளையாட்டுக் கழகத்தை பிரதிநிதித்துவம் செய்த டயமன்ஸ் அணியின் மதனராசா பிறேம்குமாரை நேற்றைய தினம் விழா எடுத்து கௌரவித்துள்ளது டயமன்ஸ் வி.கழகம்.

நேற்றுப் மாலை 4மணிக்கு நெல்லியடி பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து பிரேம்குமார் அழைத்து வரப்பட்டு கிராமஅலுவலர் தி.வரதராஜன் தலைமையில் கௌரவிக்கப்பட்டார். இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு இணைப்[illegible]ளர் இ.அனுராகாந்தன், ஓய்வு[illegible]லை ஆசிரியர் சீ.சாந்தநாதன், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் அ.அருளானந்தசோதி, வட மராட்சி உதைபந்தாட்ட லீக் தலைவர் மு.வேதாபரணமும், நாகர்கோவில் மகாவித்தியாலய அதிபர் இ.சிவசுங்கர் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ம-422)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக்கில் வேண்டும் கிரிக்கெட்



## சச்சின், வோர்ண் மற்றொரு நடவடிக்கை



உலகின் மிகப் பழைமை யான விளையாட்டுப்போட்டி யான ஒலிம்பிக் தொடரில் கிரிக்கெட் ஆட்டங்களை மீண்டும் சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர் கிரிக்கெட் ஜாம் பவான்களான சச்சினும் வோர்ணும்.

இந்தியாவின் முன்னாள் துடுப்பாட்ட ஜாம்பவானான சச்சினும் ஆஸியின் முன் னாள் பந்துவீச்சு ஜாம் பவானான வோர்ணும் இணைந்து உலக அளவில் உதைபந்தாட்டத்தைப் போன்று துடுப்பாட்டத்தை வளர்த்தெடுக்கும் நடவடிக் கைகளில் ஈடுபட்டு வரு கின்றனர். கிரிக்கெட் பெரிதும் அறி யப்படாத நாடுகளில் அதைக் கொண்டு செல்வதே இவர்கள் இரு வரதும் பிரதான நோக்கம். இதற் காக ஓய்வுபெற்ற வீரர்களை ஒன்று திரட்டி அமெரிக்காவில் கிரிக்கெட் தொடர் ஒன்றை நடத்தத் திட்டமிட்டி ருந்தனர். தற்பொழுது மற்றொரு நடவடிக்கையாக ஒலிம்பிக்கில் கிரிக் கெட் வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பாக சச்சின் தெரிவித்ததாவது "ஒலிம்பிக்கில் கிரிக்கெட்டைச் சேர்க்கவேண்டும் என்பது எமது யோசனையாக உள்ளது. அதற்கு ரி-20 ஆட்டம் பொருத்தமாக இருக்கும். கிரிக்கெட் பற்றி அதிகம் தெரியாதவர்களும் ரி-20 வடிவிலான கிரிக்கெட்டை ஏற்றுக்கொண்டுள்ளனர். எனவே அது பற்றி எடுத்துக்கூற வேண் டிய அவசியம் இருக்காது. அத் துடன் ஆட்டம் 3 மணி நேரத்தில் முடிந்து விடும் என்பதால், நேரில் பார்த்து விட்டு நாம் வேலைக்குத் திரும்பி விடலாம்" - என்றார்.

வோர்ண் தெரிவித்ததாவது "ஒலிம் பிக்கில் கிரிக்கெட்டை பார்க்க விரும்புகிறேன். ரி-20 கிரிக்கெட் இடம் பெற்றால் அதற்கு ஏற்பாடு செய்வது எளிது. ஒரு நாளைக்கு 2 அல்லது 3 ஆட்டங்களை நடத்தி விடலாம். உறுப்பு நாடு களையும் சேர்க்கும் போது, உல கம் முழுவதும் கிரிக்கெட் பரவ உதவிகரமாக இருக்கும்" என்றார்.

1900ஆம் ஆண்டு இடம்பெற்ற ஒலிம்பிக் தொடரில் கிரிக்கெட் இடம்பெற்றிருந்தமையும் பின்னர் அது நீக்கப்பட்டமையும் குறிப்பிடத் தக்கது. (ம)



## ஆனந்த் சுமாரான தொடக்கம்

ஸ்பெயினின் பில்போ நகரில் நடைபெற்றுவரும் செஸ் தொட ரின் முதல் சுற்றை நடப்புச் சம் பியனான இந்தியாவின் விஸ்வ நாதன் ஆனந்த் சமன் செய் துள்ளார்.

போலந்து வீரர் அனிஸ் கிரியை எதிர்கொண்டார் ஆனந்த். இந்த ஆட்டத்தின் 39வது நகர்த்தலின் போது போட்டி சமநிலையில் முடிவ டைந்தது. இதனால் இருவருக்கும் தலா ஒரு புள்ளிகள் கிடைத்தது. மற்றொரு ஆட்டத்தில் அமெரிக் காவின் வெஸ்லி, சீனாவின் லைரென் டிங்கைத் தோற்கடித்தார். இதன் மூலம் வெஸ்லி 3 புள்ளி களுடன் முதலிடத்தில் உள்ளார். ஆனந்த் தனது அடுத்த சுற்றில் சீனாவின் லைரென் டிங்கை சந்திக்கிறார். (ம)

## டெஸ்ட்டில் கட்டாயம் வருவேன்

### அஸ்வின் தெரிவிப்பு

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் கட்டாயம் பங்கேற்பேன் என்று தெரிவித்துள்ளார் இந்திய அணியின் நட்சத்திர பந்துவீச்சாளர் அஸ்வின்.



காயம் காரணமாக ஒருநாள் தொடரில் பாதியிலேயே வில கிய அஸ்வின் டெஸ்ட் தொட ரில் பங்கேற்பாரா என்பது பலரதும் எதிர்பார்ப்பாக உள்ளது. இந்த நிலையில் டெஸ்ட் தொடர் தொடர்பாக அஸ்வின் தெரிவித்ததாவது "காயத்தில் இருந்து நான் வேகமாகக் குணமடைந்து வருகிறேன். டெஸ்ட் தொட ருக்கு முன்பு முழு உடல் தகுதியை எட்டி விடுவேன் என்று நினைக்கிறேன்.

அணியினருடன் இணைந்து பயிற்சியில் ஈடுபடும் போது உடற் தகுதி குறித்து உறுதி யாகத் தெரியும். தென்னா பிரிக்கா வலுவான அணி யாகும். அந்த அணியில் அனுபவம் வாய்ந்த வீரர்கள் அதிக அளவில் இடம் பிடித்துள்ளனர். அதே சம யம் எமது அணியில் அனு பவம் வாய்ந்த வீரர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு.

இந்திய அணியில் பந்து வீச்சு பலவீனமாக இருக்கிறது என்று சொல்வதை ஏற்க முடியாது. ஒருநாள் தொடரின் தோல்விக்கு டெஸ்ட் தொடரை கைப்பற்றி பதிலடி கொடுப் போம்". என்றார். (ம)

## டோனியிடம் இருந்து கோக்லிக்கு?




டோனி தலைமையில் இந்திய அணி இந்த ஆண்டில் ஒருநாள் தொடர்களில் ஒரு கிண்ணத்தைக் கூடக் கைப்பற்றவில்லை. வெற்றிச் சராசரியும் ஐம்பது சதவீதத்துக்கு கீழாகவே உள்ளது. இந்தப் புள்ளி விவரங்கள், தலைமைத்துவம் டோனியிடம் இருந்து கோக்லிக்கு செல்லக்கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளன.

அனைவராலும் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடப்பட்ட டோனி யின் பெறுபேறுகள் கடந்த ஒன் றரை ஆண்டுகளில் தலைகீழாக மாறியுள்ளன. ஒரே மாதிரியான வியூகங்கள், தொடர்ச்சியாக சரி யாக ஆடாத வீரர்களை அணியில் நீடிக்கச் செய்தமை, இளம் வீரர் களை அடையாளம் கண்டு அவர் களை அணிக்கு கொண்டு வர முயற்சி செய்யாதமை, மூத்த வீரர் களின் தொடர் புறக்கணிப்பு ஆகியவை டோனிமீது தற்பொழுது முன்வைக் கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களாக உள்ளன. "பனையால் விழுந்த வனை மாடேறி மிதிப்பது போல" இப் படிச் சிக்கலில் உள்ள டோனிக்கு இந்த வருடத்தில் இந்திய அணி ஒருநாள் ஆட்டங்களில் ஓர் கிண் ணத்தைத் தானும் கைப் பற்றாமை மேலும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

ஊடகங்கள், விமர்சகர்கள் என்று அத்தனை பேரினதும் வரிசை யான தொல்லையின் காரணத்தி னால் இந்தியக் கிரிக்கெட் கட்டுப் பாட்டுச்சபையின் அடுத்த கூட்டத் தில் (தெரிவுக்குழுவின் கூட்டத்தில்) டோனி, கோக்லி, ரகானே மூவரின தும் தலைமைத்துவம் தொடர்பாக விவாதிக்கப்பட உள்ளதாக தக வல்கள் வெளியாகியுள்ளன. தலைமைத் துவம் கோக்லிக்கு கொடுக்கப் படும் பட்சத்தில் ரகானே உப தலை வராக நியமிக்கப்படலாம். ஏனெ னில் ஒருநாள் ஆட்டங்களில் இந் தியா நடப்பு வருடத்தில் கைப்பற் றிய ஒரேயொரு தொடர் சிம்பாப் வேக்கு எதிரான தொடர் மட்டுமே. இந்தத் தொடரில் இந்திய அணி யின் தலைவராக இருந்தவர் ரகா னேயே. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## செரபோவா, பென்னட்டா இலகு வெற்றி

சர்வதேச ரென்னிஸ் தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களிலும் உள்ள வீராங்கனைகள் மட்டும் பங்கேற்கும் ரென்னிஸ்தொடர் சிங்கப்பூரில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் ரஷ்யாவின் செரபோவா, இத்தாலியின் பிளவியா பென்னட்டா ஆகியோர் வெற்றி பெற்றனர்.

**பென்னட்டா எதிர் ரட்வன்ஸ்கா**

நேற்று நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் அக்னீஸ்கா ரட்வன்ஸ்காவை எதிர் கொண்டார் பென்னட்டா. 1 மணி 39 நிமிடங்கள் நடந்த இந்த மோதலில் பென்னட்டா 7-6, 6-4 என்ற நேர்செற் கணக்கில் ரட்வன்ஸ்காவை தோற்கடித்தார். தனது முதலாவது வெற்றியை ருசித்த தரவரிசையில் 8ஆவது இடம் வகிக்கும் பென்னட்டா இந்த தொடருடன் சர்வதேச ரென்னிஸில் இருந்து ஓய்வு பெறுவது குறிப்பிடத்தக்கது.

**செரபோவா எதிர் கெலெப்**

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் தரப்படுத்தலில் மூன்றாம் நிலை வீராங்கனையான மரிய செரபோவா, தரவரிசையில் 2ஆவது இடத்தில் உள்ள சிமோனா கெலெப்புடன் மோதினார். இதில் செரபோவா 6-4, 6-4 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றார். இந்த வெற்றியின் மூலம் கெலெப்பிடம் இதுவரை தோற்றதில்லை என்ற பெருமையை செரபோவா தக்க வைத்துக் கொண்டார். (ம)

## சோபர்ஸ் இல்லையென்றால் நானில்லை தெரிவிக்கிறார் அர்ஜுன ரணதுங்க

தானும் இலங்கை அணியும் உலக அளவில் சிறந்து விளங்கக் காரணம் மேற்கிந்திய தீவுகளின் முன்னாள் தலைவரான கார்பீல்ட் சோபர்ஸ் மட்டுமே என்று புகழாரம் சூடியுள்ளார் அர்ஜுன ரணதுங்க.

நீண்ட வருடங்களுக்குப் பின்னர் சோபர்ஸ் இலங்கை வந்துள்ளார். இந்த நிலையில் சோபர்ஸ் தொடர்பாக ரணதுங்க தெரிவித்ததாவது 'பல வருடங்களுக்கு பிறகு மீண்டும் இலங்கை வந்திருக்கும் கார்பீல்ட் சோபர்ஸை வரவேற்கிறேன். என்னுடைய கிரிக்கெட் வாழ்க்கையில் கார்பீல்ட் சோபர்ஸ் மிக முக்கிய நபர். அவர் மட்டும் இல்லையென்றால் நான் கிரிக்கெட்டில் சாதனைகளை படைத்திருக்க முடியாது. அதாவது 1993ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான இலங்கை அணியில் நான் இடம்பெற்றிருக்கவில்லை. அப்போது இலங்கை அணிக்கு பயிற்சியாளராக இருந்த சோபர்ஸ், என்னை அணியில் இணைத்துக் கொள்ளுமாறு தேர்வாளர்களிடம் கேட்டுக் கொண்டார். அதன் படி நான் அணியில் இணைத்துக் கொள்ளப் பட்டேன். இதனாலே எனக்கு இலங்கை அணியில் நிரந்தர இடமும் கிடைத்தது. அதன் பிறகு அவரது வழி நடத்தலின் படி நானும், இலங்கை அணியும் உலக அரங்கில் ஜொலிக்க ஆரம்பித்தோம்' என்றார். (ம)


## அப்ரிடி நிதியுதவி

பாகிஸ்தானில் கடந்த திங்கட்கிழமை ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு கிரிக்கெட் வீரர் அப்ரிடி ஒரு கோடியே 40 லட்ச ரூபா நிதியுதவி வழங்கியுள்ளார்.

பாகிஸ்தானில் கடந்த திங்கட்கிழமை பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் கிட்டத்தட்ட 300 மக்கள் பலியானர்கள். பலர் தங்கள் வீடுகளை இழந்து தவித்து வருகின்றனர். இந்த நிலையில் நிலநடுக்கத்தால் அதிகமாக பாதிப்படைந்த பெஜுவர் பகுதிக்கு சென்ற அப்ரிடி, பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறியதோடு நிதியுதவி வழங்கினார். அதே போல் மற்ற பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களும் உதவத் தயாராக இருப்பதாக பாகிஸ்தான் அணித்தலைவர் மிஸ்பா தெரிவித்துள்ளார். (ம)

## அகதி நிலையில் உள்ள வீரர்களும் ஒலிம்பிக் தொடரில் பங்கேற்கலாம்

*சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் திடீர் அறிவிப்பு*




ரியோ டி ஜெனிரோ ஒலிம்பிக் போட்டிகளில் அகதி நிலையில் உள்ள தடகள வீரர்கள் ஒலிம்பிக் கொடியின் கீழ் கலந்து கொள்ளலாம் என்று சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் அறிவித்துள்ளது.

அகதி நிலையில் இருக்கும் தடகள வீரர்கள் அவர்கள் சொந்த நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்த முடியவில்லை என்ற காரணத்தால் அவர்களால் அடுத்த வருடம் நடைபெறவுள்ள ரியோ டி ஜெனிரோ ஒலிம்பிக் தொடரில் கலந்து கொள்ள முடியாமல் இருந்தது. இந்த நிலையில் குறித்த ஒலிம்பிக் தொடரில் ஒலிம்பிக் கொடியின் கீழ் போட்டியிட அகதி தடகள வீரர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஐ.நா. பொதுச்சபையில் சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனத்தின் தலைவர் தோமஸ் பேக் ஆற்றிய ஒரு உரையில், புதிய விதிகளின் கீழ் எந்தப் போட்டியாளர்கள் கலந்து கொள்ளத் தகுதி பெற்றவர்கள் என்பதை உடனடியாக அடையாளம் காணுமாறு உறுப்பு நாடுகளுக்குக் கோரிக்கை விடுத்துள்ளார். (ம)


**கண்ணீர் அஞ்சலி**



எமது ஸ்தாபனத்தின் பணியாளரான **கிரிதரனின்** தந்தையான

**வேலாயுதம் ஞானரத்தினம்**

அவர்கள் நேற்று (28.10.2015) புதன்கிழமை இறைபதம் அடைந்த செய்தி கேட்டு துயரடைகின்றோம். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உரிமையாளர், ஊழியர்கள்,**
**நியூ லலிதாஸ் ஜூவலறி,**
**நியூ நகுலா ஜூவலறி.**

(C/19637) (10.17)

**மரண அறிவித்தல்**



**வேலாயுதம் ஞானரத்தினம்**

மண்கும்பானைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வேலாயுதம் ஞானரத்தினம் நேற்று (28.10.2015) புதன்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம்-பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம்-கற்பகம் தம்பதியரின் மூத்த மருமகனும், வசந்தமலரின் (மலர்) அன்பு கணவரும், கிரிதரன் (மண்கும்பான்), சசிதரன் (மண்கும்பான்), கஜதரன் (பிரான்ஸ்), பகீரதன் (பிரான்ஸ்), ஆர்வினி (நெதர்லாந்து), குமுதினி, சஞ்சயன் (மண்கும்பான்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரசாந் (நெதர்லாந்து) தியா (மண்கும்பான்) தாட்சாயினி (யாழ்.) ஆகியோரின் பாசமிகு மாமனும், சரஸ்வதிப்பிள்ளை (இலங்கை), சதாசிவம் (இலங்கை), அருளம்மா (பிரான்ஸ்), காலஞ்சென்ற பூபதி ஆகியோரின் சகோதரனும், வசந்தன் (லண்டன்), தயாளன் (இலங்கை), சக்தி (பிரான்ஸ்), சசி (இலங்கை), சுரேக்கா (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2015) வியாழக்கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
கிரிதரன் (மகன்): 077 780 3940
கஜதரன் (மகன்-பிரான்ஸ்): 0033658234673

தகவல்:
**குடும்பத்தினர்.**
(19652)(10.17)




இந்திய அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளரான ஹர்பஜன்சிங்கும், கிந்தி நடிகையான கீதாவும் நேற்றுமுன்தினம் திருமண பந்தத்தில் இணைந்துள்ளனர்.


அமெரிக்க லொத்தர் விசா

V2 TRAVELS

யாழ்ப்பாணம் 0768226241 | கிளிநொச்சி 0768226240

நெல்லியடி | வல்வெட்டித்துறை


## முதல் ஆட்டத்திலேயே நாயகனான சிறிவர்த்தனவுக்கு மத்தியூஸ் புகழாரம்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் சிறப்பாகச் செயற்பட்டு இலங்கையின் வெற்றிக்கு வித்திட்டு ஆட்டநாயகனான மிலிந்த சிறிவர்த்தனவுக்கு மத்தியூஸ் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

சிறிவர்த்தன தொடர்பாக மத்தியூஸ் தெரிவித்ததாவது – 'எங்களுக்கு திறமையான வீரர் கிடைத்துள்ளார். சிறிவர்த்தன துடுப்பாட்டம், பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பு என அனைத்திலும் அதிகமாக பங்களிப்பு அளித்தார். அவர் கடந்த 2 மாதங்களாக ஒருநாள் ஆட்டங்களில் சிறப்பாக செயற்பட்டு வந்தார். இதனால் டெஸ்ட் தொடரில் அவர் இடம்பிடித்தார். ஆனால் முதல் டெஸ்ட் தொடரிலே எந்த வித தயக்கமும் இன்றி அசத்திவிட்டார். இது போன்ற வீரரைத் தான் நாங்கள் எதிர்பார்த்தோம். நடுவரிசையில் ஆடவும் எங்களுக்கு சிறந்த வீரர் தேவைப்பட்டது. சில மாதங்களாக அவர் சிறப்பாக செயற்பட்டு வருகிறார்' என்று தெரிவித்துள்ளார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.